# மாணிக்கவாசகரும்
# வேதாத்திரி மகரிசியும்.



# மாணிக்கவாசகரும்

# வேதாத்திரி மகரிஷியும்

## அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

### இதனுள்ளே

1. இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்
2. மாணிக்கவாசகர் வாழ்க்கை வரலாறு
3. வேதாத்திரி மகரஷி வாழ்க்கை வரலாறு
4. பக்தியும் ஞானமும் – ஒரு ஒப்பீடு
5. திருவாசகமும் வேதாத்திரியமும்
6. வேண்டத்தக்கது அறிவோய் நீ
7. ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியை
8. மாயையை மதித்து வகுத்த மயக்குறுமாகாதே.
9. அழுதால் பெறலாம் அவனருளை
10. நமச்சிவாயம் வாழ்க! நாதன் தாள் வாழ்க!!
11. அண்டம் – அளப்பருந்தன்மை
12. அற்புதமான அமுத தாரைகள்

13. உற்றாரை நான் வேண்டேன்.
14. மகான்கள் பார்வையில் பெண்கள்
15. அறிவறிந்தோர் சிவவார்.
16. புறச்சமய காழ்ப்பும் – சமய பொதுமையும்
17. திருப்பெருந்துறையும் ஆழியாறும்

# ஆரோக்கியமான பாதையில்

இதுபோன்ற ஒப்பீட்டு உரைகள் நம் காலத்தின் தேவையாக உள்ளது.



வாழ்வாங்கு வாழ்வது குறித்து நிறைய பரிமாறல்கள் அவசியமாகின்றன. அழிவற்ற ஆன்மீகக் கல்வி மட்டுமே நமது சமூகத்தை ஆரோக்கியமான பாதையில் கொண்டு செல்லும்.

நன்கு வழிநடத்தப்பட்ட மனிதனால் மட்டுமே சமூகத்தை பாதுகாக்கவும் முடியும்.

நாமறிந்த ஆன்மீக அருளாளர்களில் உள்ள ஒப்புமை உலகிற்கு அவர்கள் அளித்துள்ள ஞான செல்வத்தை ஒரு ஆன்மீக ஒப்பிலக்கியமாக கொண்டு வரும் அருள்நிதி பானுகுமார் அவர்களின் செயல்பாடு வெற்றிபெற இறைசக்தியை வேண்டுகிறேன்.

மதிப்புக்கும் அன்புக்கும் உரிய வாசகர்

பொன்னுசாமி வந்தியதேவன்

மதிப்புக்கும் அன்புக்கும் உரிய வாசகர் பொன்னுசாமி வந்தியதேவன் போன்ற அன்பர்களின் அன்பும் ஆதரவும் வாழ்த்தும் குருவருளும் திருவருளும் என்னை மேலும் மேலும் புதிய படைப்புகளை பிரசவிக்கச் செய்கிறது. வாழ்க வளமுடன்.

## 1.இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க

தேவாரம் பாடிய மூவரைப் பற்றி அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை.

ஆனால் மாணிக்கவாசகரின் “**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க**” என்ற சொற்றோடரை பல இடங்களில் பயன்படுத்தி உள்ளார்.

எனவே அருட்தந்தைக்குப் பிடித்த அந்த வரிகளுக்குச் சொந்தக்காரரான மாணிக்கவாசகரை மகரிஷியுடன் இணைத்து “மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்” என்ற தலைப்பில் ஒப்பாய்வு செய்திருக்கிறோம்.




“வேதம் நான்கினும் மெய்ப் பொருள் ஆவது நாதன் நாமம் நமசிவாயவே”…

“இமைக்கும் நேரமும் கூட என் மனத்தினின்றும் நீங்காதவனது திருவடி வாழ்க;”

எண்ணங்கள்தான் எல்லாவற்றிற்கும் காரணம். எல்லோராலும் எண்ணங்களை துறந்து தற்போதுள்ள தத்துவ ஞானிகளைப் போல- தவம் தியானம் செய்தல் அரிது .

ஒன்று எண்ணமில்லாமல் இரு. அல்லது பிரம்மத்தையே எண்ணு, எளிய சுத்திரம்தாங்க. ஞானம் அடைய, எதிர்பார்ப்பு ஏதும் வேண்டாமா?அவனிடம் நம்மை சரணடைத்துவிட்டு -எப்போதும் அவன் நினைவாகவே இருந்துவிட்டால் வேறு தவ முயற்சிகள் வேண்டியதில்லை.

புத்தனைப் போல புலம் பெயர தேவை இல்லை. இப்போதெல்லாம் ஆன்மீக மார்க்கம் திகட்டுகிறது மனிதர்களுக்கு.

அங்கே வார்த்தை ஜாலங்கள் செய்ய ஆட்கள் இல்லையே, நாமே இறைவன் என்று சொல்லி நம்மை ஏமாற்றிக் கொள்ள முடியவில்லையே .

நீங்கள்-எந்த பாதையில் ஞானத்திற்கு பயணப்பட்டாலும் வழிதான் விழிப்புணர்வு.

இங்கே மாணிக்க வாசகர்கள் சொல்கிறார். வேறெதுவும் வேண்டாம். இமைப்பொழுதும்- அவனை சிவனை அவன் நாமத்தை பிரமத்தை - கருணை பரவெளியை மறவாதிரு என்று.

நீ முதலில் ஜெபத்தில் பழுத்துவிடு. உன்னை பரித்துன்ன சிவனே - குருவாய் வருவான் மாணிக்க வாசகத்துக்கு வந்தது போல. அன்பே சிவம் அன்பல்லவா இறைவன்.

பிறகு அவன் உணர்த்துவான் என்னென்ன செய்ய வேண்டும் எது செய்ய வேண்டும் என்று குண்டலினியை அவனே ஏற்றி தருவான்.

நீ ஏற்றினால் அதை சமாதானம் செய்ய உன்னால் ஆகாது. குருவாய் வருவான். அருள்வான் குகனாய். கண்ணீர் வழிய வழிய மனதுக்குள் இறைவனை இறைவனின் நாமத்தை ஜெபம் செய்.

கண்ணீர் காதலில் கசிந்த கண்ணீராக இருக்கட்டும். ஜெபம் என்ற பெயரில் அழுது புலம்புவதை வாடிக்கையாக கொல்லாதே.

பலகீனமான மனத்திலும், எதிர்பார்ப்பு ஆசை அலைகளை கொண்ட மனத்திலும்- இறைமையின் மகத்துவம் புரியாது .

பிறகு ஜெபம் கூட சுமையாகிவிடும், நீ எதுவும் தரவேண்டாம் . அன்பே, உன் இதயத்தை மட்டும் தந்தால் போதும் என்று காதலில் உருகும் நாம் இறைவனிடமும் காதலாகி கசிந்து கண்ணீர் மல்குவோம்.

புரியாத தியானத்தையும் புரியாத மனிதர்களையும் தேடி ஓடுவதை காட்டிலும், சிறந்த குரு யார்? இறைவனின் இமைபொழுதும் நெஞ்சில் நீங்காத நினைவுகளும் ஓயாத ஜெபமும்.

இப்போ கேளுங்க இந்த பாடலை. இந்திய ஆன்மிகத்தின் மகத்துவம் தெரியும். புரியும். விளங்கும்.

இங்க, பல குடும்ப பெண்களும் ஆண்களும் தியானம் தவம் என்று தெரியாமலேயே பெரிய தவத்தையும் தியானத்தையும் யாகத்தையும் தூய பக்தி மற்றும் அன்பின் பெயரால் செய்து கொண்டு வருகிறார்கள்.

இட்டுகட்டி எடுத்து சொல்ல ஆளிருந்தால், மயக்கும் வரிகளை கோர்ப்பதற்கு ஆள் இருந்தால், இந்த தியானம் எந்த தியானத்திற்கும் குறைவானதில்லை என்பது புரிய வரும் .

எப்படி சொன்னாலும் உண்மை ஒன்றுதான். நீ முயற்சி செய் . ஆறாகிய உன்னை கடலாகிய இறைவன் காலம் வரும்போது உன்னை தன்னுள் கரைத்து கொள்வான்.

**இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க**

சிறு நேரம் கூட (இமைப்பொழுதும்) என் உள்ளத்தைவிட்டு (என் நெஞ்சில்) அகலாமல் இருப்பவன் (நீங்காதான்) திருவடிகளைப் பணிவோம் (தாள் வாழ்க)

இமைப்பொழுது என்பது, நாம் கண் சிமிட்டும் அளவிலான காலத்துளி. இமைப்பொழுது என்பதையும்விட, காலம் மேலும் துல்லியமாகவும் அளக்கப்படக் கூடியதுதான்.

எனினும், மனிதர்களாகிய நமக்கு, இமைப்பொழுது என்பதே, அனுபவத்தில் காணக்கூடிய துல்லிய காலம்.

எனவேதான் மாணிக்கவாசகர், இமைப்பொழுது எனும் கால அளவைக் காட்டி, அந்த இடைவெளியிலும்கூட நம்மை விட்டு விலகாமல் நம்முள்ளேயே இறைவன் இருக்கின்றான் எனக் கூறுகின்றார்.

அந்த இறைவன் நம்முள்ளே எங்கே இருக்கிறான்?

‘அகப்படும் சிவம்’ அல்லவா, அதனாலே, சிவன் எல்லோரின் நெஞ்சிலும் இருக்கின்றான்.

‘ஹ்ருதயம்’ எனும் சம்ஸ்கிருதச் சொல், தசைகளாலான ‘இதயம்’ எனும் உறுப்பினை காட்டுவது அல்ல.

அதன் பொருள், உள்ளமாகிய மையம்; அதுவே நெஞ்சம், நமக்குள் – எல்லா உணர்வுகளுக்கும் ஆதாரமாய் இருப்பது.

## தங்கத்தமிழில் சொற்சுகங்கள் கோடி.

உதாரணமாக, எல்லா இடத்திலும் நிறைந்து, அகன்று, இறைந்து கிடப்பதால், பரம்பொருளுக்கு ‘இறைவன்’ என்பது ஒரு பெயர்.

அப்பரம்பொருள- நுணுக்கமாய், அறிவினையெல்லாம் கடந்து, உள்ளத்துள் ஆழ்ந்து இருப்பதால், ‘கடவுள்’ என்றும் அழைக்கப்படுகிறது.

இறைவனாயும், கடவுளாயும் பரசிவன், நம் நெஞ்சினுள், ஒரு கணமும் நீங்காமல் இருக்கின்றார் என்றும், அன்னாரின் திருவடிகளை வணங்குவோம் என்பதும்- இவ்வரியின் பொருள்.

நம்முள்ளே எப்போதும் நீங்காமல் இருக்கின்ற சக்தி எது?

துல்லியமான எண்ணங்களோ என்றால், எல்லா எண்ணங்களும் வந்து போய்க் கொண்டுதான் இருக்கின்றன.

எண்ணங்களை விளைவிக்கும் மனதும் எப்போதும் நிலையாக இல்லை. மறதியால், நினைப்பும், அறிவும்கூட அழிந்து விடுகின்றன.

எனவே எது எப்பொழுதும் மாறாமல்- நமக்குள்ளே இருப்பது?

அது ‘நான்’ எனும் உணர்வு. வெளி அடையாளங்களின் அவசியமோ, புலனறிவின் துணையோ எதுவும் தேவையில்லாமல், எப்போதும் ஒளிர்ந்து கொண்டே இருப்பதுதான் அந்த ‘நான்’ எனும் உணர்வு.

இருட்டில் இருந்தாலும், ‘நான் உள்ளேன்’ எனும் அனுபவம் நமக்குள் இருந்து கொண்டே இருக்கிறதே!

துயிலும் போது, வெளிப்படுத்தும் அறிவுதான் இல்லையே தவிர, நான் எனும் உணர்வு -நம்முள் நிலையாகவே இருக்கிறது.

ஏனெனில் எழுந்த போது, துயிலையும் பார்த்துக் கொண்டிருந்த சக்தி நம்முள் இருந்திருக்கின்றதே!

அதனாலன்றோ, விழிப்பு, கனவு, துயில் எனும் அனுபவங்களுக்கெல்லாம், நம்மால் ஒரு தொடர்பினைக் கொடுக்க முடிகிறது! அந்த ஆதார சக்தியே, ‘ஆத்மா’ வாகிய இறைச் சக்தி.

அப்படியாயின், ‘நான் யார்’ எனும் வினாவுக்கும், உள்ளத்தைக் கடந்து, ‘நான்’ எனும் உணர்வுக்கு ஒளியாக விளங்கும் ஆத்மாவே – விடையாக வேண்டும்.

அப்படியாயின், ‘கடவுள்’ அல்லாமல், ஆத்மா வேறாக இருக்க முடியாது. இவ்வரிய வேதாந்த முடிவும், இவ்வரிகளிலே மாணிக்கவாசகப் பெருந்தகையால் காட்டடப்பட்டது.

‘இருப்பது’ என்பதற்கான தமிழ்ச் சொல், ‘உள்ளது’ என்பதாகும். உள்ளது உண்மையானது. ‘உள்ளது’ என்பதன் ஆழ்பொருள், ‘உள் + அது’ .

அதாவது,- உள்ளுக்குள்ளே, ‘அது’ இருக்கிறது. ‘அது’ என்பது, வேதாந்தம் ‘தத்’ எனும் சொல்லினால் காட்டும் பரமாத்மாவைக் குறிக்கின்றது.

அப்படியானால், அதுவே ‘சத்தியம்’, மாறாமல் எப்போதும் விளங்குவது. எனவே ஆத்மா என நம்முள்ளே விளங்கும் கடவுளாகிய சக்தியே, பரமாத்மாவாக எங்கும் நிறைந்த இறைவன் என்றும் நமக்குச் சுட்டிக் காட்டப்பட்டது.

இவ்வாறு, இறைவன் நமக்குள்ளேயே எப்போதும் இருக்கிறார் என்று உணர்வதால், நமக்கு இரண்டு அரிய மாற்றங்கள் கிடைகின்றன.

ஒன்று, நமது செயல்களை எல்லாம் ஒரு சக்தி நமக்குள்ளேயே- எப்போதும் பார்த்துக் கொண்டிருக்கிறது என்றால், அச்சக்திக்குப் பணிந்தாவது, நாம் நமது செயல்களை அறமுடையதாயும், தீதற்றதாயும் அமைத்துக் கொள்ள முயலுவோம் என்பது.

அதாவது, நமக்கு நற்பண்புகள் வருவதற்கு, நம்முள்ளே கடவுள் இருக்கிறார் எனும் நந்நம்பிக்கை ஒரு காரணமாக இருக்கிறது.

மற்றொரு மாற்றம், பரம்பொருள் நம் உள்ளத்திலேயே இருக்கிறது என்றால், உலக வாழ்க்கையில் நமக்கு எந்நிலை வரினும், அதனால்- நமக்கு பாதிப்பு என்பதே கிடையாது எனும் உறுதியும், தன்னுள்ளே விளங்கும் இறைத் தன்மையினால், அழியாத உயர்விலேயே நம்மால் இருக்க முடியும் என்ற வலிமையும், நமக்குக் கிடைப்பது ஆகும்.

“அவரவர் வாழ்வைச் சீரமைக்கும்
அற்புத சிற்பி அவரவர் எண்ணங்களே”. (வேதாத்திரி மகரிஷி)

உங்கள் ஆழ்மனதுதான் உங்களுடைய நடத்தைகள் அனைத்திற்கும் காரணம்.

நீங்கள் ஒரு செயலை தவறு என்று  உங்கள் மனதிற்கு கூறினால்–
உங்கள் ஆழ்மனதும்  "ஆம்"  அந்த செயல் தவறு என்று  ஆமோதிக்கும்.

இல்லை நான் செய்யும் செயல் சரிதான் என்று– உங்கள்
ஆழ்மனதிற்கு கூறினீர்கள் என்றால்,   ஆம் அந்த செயல் சரிதான்
என்று உங்கள்  ஆழ்மனது உங்களுடன் சேர்ந்து   துதி பாடும்.

ஆழ்மனது தான்  உங்களுக்கு நடக்கும் நல்லவை  கெட்டவை
அனைத்திற்கும் காரணம்.

எண்ணம் போல் வாழ்வு என்று ஏன் கூறுகிறார்கள். நீங்கள்
நல்லவற்றை நினைக்குபோது உங்கள் ஆழ்மனதில் அந்த
நல்ல எண்ணங்கள் பதிந்து உங்கள் நடத்தையும்
நல்லவையாக இருக்கும்.

ஆழ்மனதில் பதிந்து உங்கள் நடத்தையும்
கெட்டவையாக  இருக்கும்.

மனது என்பது  –  ஒளி  நாடாவை போன்றது.
எது எப்படி இருக்கிறதோ– அதை அப்படியே பதிவு செய்து
திருப்பி சொல்லும்.

ஆழ்மனது  என்பது  – ஒரு ஜெராக்ஸ் மிஷினை போன்றது.
உள்ளதை உள்ளபடியே   எடுத்து காட்டும்.

ஆழ்மனது என்பது– முகம் பார்க்கும் கண்ணாடி போன்றது.
எது எப்படியோ அதை அப்படியே பிரதிபலிக்கும்.

இந்த காரியம் நடக்காது, என்னால் அங்கு போக முடியாது,
என்னால் அந்த செயலை செய்ய முடியாது என்று நினைத்தீர்கள்
என்றால்,   நிச்சயம் நீங்கள் நினைப்பதுதான் நடக்கும்.
அதாவது   எல்லாமே எதிர் மறையாகத்தான் நடக்கும்.

இதையே மாற்றி நினைத்து பார்த்தால்என்னால் அந்த செயலை செய்ய
முடியும்,  என்னால் அங்கு போக முடியும்,  என்று

நினைத்தால் நல்ல பலனையே எதிர்பார்க்கலாம்.
எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்.

நீங்கள் தடை என்று நினைக்கும் எந்த காரியமும் –
உங்களுடைய நினைப்பில்தான் உள்ளது. அந்த தடையை
தகர்த்து எறியலாம் என்று நினைத்தீர்கள் என்றால்–
அந்த தடையை தகர்த்து எறிந்து விடுவீர்கள்.

விளையாட்டு வீரர்களை– எடுத்து கொள்ளுங்கள்.
எப்படி அவர்களால புதிய சாதனைகளை– படைக்க முடிகின்றது.

சாதனைகளை படைக்க முடியாது என்று அவர்கள்
நினைத்தால்– அவர்களால் புதிய சாதனைகளை
உண்டாக்க முடியுமா?

நினைப்பே நடப்பு என்பார்கள். உங்கள் மனதில் எப்பொழுதும் இறைசிந்தனையில் இருந்தீர்கள் என்றால் “இமைப்பொழுதும் நீங்காத இறைவனடியை எண்ணிக் கொண்டிருந்தால் என்ன பலன் கிடைக்கும். மகரிஷி சொல்கிறார்.

“இறை நிலையோ டெண்ணத்தைக் கலக்கவிட்டு
    ஏற்படும் ஓர் அமைதியிலே விழிப்பாய் நிற்க
நிறை நிலையே தானாக உணர்வதாகும்.
    நித்த நித்தம் உயிர் உடலில் இயங்கு மட்டும்
உறைந்து உரைந்திந் நிலையில் பழகிக்கொள்ள
    உலக இன்பங்களிலே அளவு கிட்டும்
கரை நீங்கி அறிவு மெய்ப்பொருளாய் நிற்கும்
    கரைந்துபோகும் தன் முனைப்பு காணும் தெய்வம்.” –(வேதாத்திரி மகரிஷி)

ஒவ்வொரு நொடிப்பொழுதம் இறைநிலையோடு கலந்திருந்தால், நிறைநிலை தானாக வந்துவிடும்.

விழிப்பு நிலை இயற்கையாக அமைந்துவிடும். உயிர் உடலில் இயங்கும் மட்டும் இந்த எண்ணத்தில் பழகி, வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

அதனால்- உலக இன்பங்களில் அளவுமுறை ஏற்படும். ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் நீங்கிவிடும்.

தன்முனைப்பு என்ற ஆணவம் கரைந்துபோகும். ஆனந்தமான பரம்பொருளோடு நாமும் ஆனந்தமயமாக வாழலாம்.

இந்த ஆனந்த வாழ்வுக்கு, மாணிக்கவாசகரையும் வேதாத்திரி மகரிஷியையும் மனதில் நிறுத்திக் கொள்ள உள்ளே வாருங்கள்.

இந்த மகான்களைப் போல் இறையுணர்வும் ஆனந்தமும் பெற்று வாழ்வோம். வாழ்க வளமுடன்.

குருவின் தொண்டில்.


பானுகுமார்

Mail id.banukumar.v@gmail.com


## 2.மாணிக்கவாசகர் வாழ்க்கை வரலாறு

மாணிக்கவாசகர் சைவ சமயக் குரவர்கள் நால்வருள் ஒருவர். சிவனடியார்கள் பலர் இருந்தாலும் சிவனுக்கு மிக நெருக்கமான வர்களுள் முக்கியமானவர்.

மாணிக்கவாசகர், 9 ஆம் நூற்றாண்டில் சிறந்த சிவபக்தரான இரண்டாம் வரகுணன் (863-911) காலத்தில் வாழ்ந்தவர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலையமைச்சராக பணியாற்றினார்.

மாணிக்கவாசகர் வாழ்ந்த காலகட்டம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு என்றும் கி.பி 13 அல்லது 14 ஆம் நூற்றாண்டு காலகட்டம் என்றும் இரு வேறு கருத்துகள் உள்ளன.

சுந்தரருக்கு பிற்பட்ட காலத்தவர் என்பது ஆய்வாளர்கள் கருத்து. எனினும் மாணிக்கவாசகர் தேவார மூவருக்கும் முற்பட்டவர் என்றும் சிலர் கருத்துள்ளது.

இவருக்கு அருள்வாசகர், மாணிக்கவாசகர், திருவாதவூரடிகள், தென்னவன் பிரமராயன் என்ற பெயர்களும் உண்டு.



இவர் பாண்டிவள நாட்டில் வைகை ஆற்றங்கரையிலுள்ள திருவாதவூர் என்னும் ஊரில் அமாத்தியர் மரபில் சம்புபாத சரிதருக்கும்,சிவஞானவதிக்கும் மகனாகப் பிறந்தார்.

இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் வாதவூரர் என்பதாகும்.

பதினாறு ஆண்டுகள் நிரம்புமுன் இவர் கல்வி, கேள்வி, ஒழுக்கம், அறிவு, ஆற்றல் இவற்றில் சிறந்து விளங்கினார்.

இவர் வேத வித்தகர். நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தை, எப்பொழுதும் கூறிக் கொண்டிருப்பார்.

இவரது அறிவாற்றலைக் கேள்விப்பட்ட மன்னன் அரிமர்த்தன பாண்டியன், இவரை வரவழைத்து அமைச்சர் பதவியை அளித்து தென்னவன் பிரமராயன் என்ற பட்டத்தையும் அளித்தான்.

உயர்ந்த பதவி, செல்வம் அனைத்தும் இருந்தும் இவை வாழ்வின் இறுதி நோக்கமல்ல என்பதை உணர்ந்து சைவ சித்தாந்தத்தை ஆராய்ந்து சிவ வழிபாட்டை பின்பற்றினார்.

ஒருசமயம், சோழநாட்டில் நல்ல குதிரைகள் வந்திருக்கின்றன என்று கேள்விப்பட்ட மன்னன் வாதவூராரை குதிரைகள் வாங்கி வரும்படி பணித்தான்.

அதற்குத் தேவையான பொன்னைக் களஞ்சியத்தில் இருந்து எடுத்துக் கொண்டு படைவீரர்களுடன் புறப்பட்டார்.

இதைத் தான் எதிர்பார்த்தேன் என்பது போல, சிவபெருமான் தன் திருவிளையாடலை நிகழ்த்த ஆரம்பித்து விட்டார்.

அவர் ஒரு குருவைப் போல வேடம் பூண்டு திருப்பெருந்துறை என்னும் தலத்தில் போய் ஒரு குருந்த மரத்தடியில் அமர்ந்து கொண்டார்.

திருப்பெருந்துறையை அடைந்து விட்ட வாதவூரார் அங்கேயே தங்கும் படி தன் படையினருக்கு உத்தரவிட்டார்.

இங்குள்ள ஆத்மநாதர் கோயிலுக்குள் சென்றார். இந்தக் கோயிலில் ஒரு விசேஷம் என்னவென்றால், இங்கு மூலஸ்தானத்தில் லிங்கம் கிடையாது.

ஆண்டவன் உருவமின்றி இருக்கிறான் என்பது இங்கு தத்துவம்.

ஆவுடையார் மட்டும் இருக்கும். மேலே லிங்கம் இருக்காது. லிங்கம் இருக்க வேண்டிய இடத்தில், அடையாளம் தெரிவதற்காக ஒரு குவளையை வைத்திருப்பார்கள்.

அங்குள்ள புஷ்கரணியில் நீராடி, உடலெங்கும் வெண்ணீறு பூசி, சிவப்பழம் போல் காட்சியளித்த வாதவூரார், கோயிலுக்குள் சென்று உருவமற்ற இறைவனை, மனதுக்குள் உருவமாக்கி உருகி உருகி வணங்கினார்.

பின்னர் பிரகாரத்தை வலம் வந்தார். பிரகாரத்திலுள்ள குருந்தமரத்தடியில் தெட்சிணாமூர்த்தியாய் அமர்ந்திருந்த சடை தாங்கிய சிவத்தொண்டரைக் கண்டார். அவர் முன் விழுந்து வணங்கி பாமாலை பாடினார்.

அவர் தான் சிவம் என்று வாதவூராருக்கு உறுதியாகத் தெரிந்தது.

அதற்கேற்றாற் போல், தன் திருவடியைத் தூக்கிய சிவன், தன் முன்னால் பணிந்து விழுந்து கிடந்த வாதவூராரின் சிரசில் வைத்துத் தீட்சை வழங்கினார்.

அவரது திருவடி பட்டதோ இல்லையோ, வாதவூரார் மெய் சிலிர்த்து பாடல்கள் பாடத் தொடங்கினார்.

அவரது பாடல்களைக் கேட்டு இறைவன் உருகிப் போனார்.

அப்பா! நீ செந்தமிழால் என்னைத் தாலாட்டினாய். ஒவ்வொரு வார்த்தையையும் முத்தென்பேன்... இல்லையில்லை... மாணிக்கமென்று தான் சொல்ல வேண்டும். நீ மாணிக்கவாசகனப்பா... மாணிக்கவாசகன், என்றார் பெருமான்.

அன்றுமுதல் வாதவூரார் மாணிக்கவாசகர் ஆகி விட்டார். மாணிக்கவாசகருக்கு மீண்டும் ஆசியளித்து விட்டு, சிவன் மறைந்துவிட்டார்.

சிவன் தனக்கு காட்சி தந்த அந்த ஊரிலேயே தங்கி சிவகைங்கர்யம் செய்ய மாணிக்கவாசகர் முடிவு செய்தார்.

படையினரை அழைத்தார். குதிரை வாங்குவதற்கான ஏற்பாடுகளை நான் செய்து விட்டேன். குதிரைகளுடன் நான் ஆடிமாதம் மதுரைக்கு வருவதாக மன்னரிடம் சொல்லுங்கள். நீங்கள் எல்லாரும் இப்போது ஊருக்கு கிளம்பலாம், என்றார்.

படையினரும், அமைச்சரின் கட்டளையை ஏற்று ஊருக்குப் புறப்பட்டனர். பின், தான் கொண்டு வந்த பணத்தைக் கொண்டு கோயிலைத் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நடத்தினார்.

கையில் இருந்த செல்வமும் வேகமாகக் கரைந்தது. இதனிடையே ஆடி பிறந்துவிட்டது.

குதிரை வாங்க வந்த ஞாபகமே மாணிக்கவாசகருக்கு மறந்து போனது. அவர் எப்போதும் சிவாயநம..சிவாயநம என உச்சரித்தபடியே இருந்தார்.

பாண்டியமன்னன், தன் அமைச்சரின் வரவை எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

திருப்பெருந்துறையில் அவர் தங்கியிருக்கிறார் என்பதை ஏற்கனவே வந்த படைவீரர்கள் மூலம் தெரிந்திருந்த அவன், அவருக்கு ஒரு வீரன் மூலமாக ஓலை அனுப்பினான்.

ஓலையைப் படித்த பிறகு தான், அவருக்கு பழைய நினைவே திரும்பியது. நேராக ஆத்மநாதர் சன்னதிக்கு ஓடினார்.

ஐயனே! மன்னன் என்னை நம்பி, குதிரை வாங்க அனுப்பினான். நானோ, உன் திருப்பணிக்கென செல்வம் அனைத்தையும் செலவிட்டேன்.

இப்போது, குதிரைகளை அங்கு கொண்டு சென்றாக வேண்டுமே! நீ தான் வழிகாட்ட வேண்டும் என்று இறைஞ்சினார்.

அப்போது அசரீரி ஒலித்தது. கவலைப்படாதே மாணிக்கவாசகா! விரைவில் குதிரைகளுடன் வருவதாக பதில் ஓலை அனுப்பு. மற்றதை நான் பார்த்துக் கொள்கிறேன், என்றது அக்குரல்.

இறைவனின் குரல் கேட்ட மாணிக்கவாசகர், அவர் சொன்னபடியே மதுரைக்கு குதிரைகளுடன் வருவதாகப் பதில் ஓலை அனுப்பினார்.

அரிமர்த்தன பாண்டியனும் ஓலையைப் படித்து மகிழ்ந்தான். மன்னன் குறிப்பிட்டிருந்த காலம் நெருங்கியது.

குதிரைகள் எப்படி வரும் என்ற கவலையில் இருந்த மாணிக்கவாசகரின் கனவில், மாணிக்கவாசகா! நீ உடனே கிளம்பு. நான் குதிரைகளுடன் வருகிறேன், என்றார்.

இறைவனை வேண்டி மாணிக்கவாசகர் பாண்டியநாட்டுக்கு கிளம்பினார்.

அரண்மனைக்குச் சென்ற மாணிக்கவாசகரிடம், அமைச்சரே! குதிரைகள் எங்கே? எத்தனை குதிரை வாங்கினீர்கள்? என்று கேட்ட மன்னனிடம்,அரசே! தாங்கள் இதுவரை பார்த்திராத குதிரை வகைகள் வரிசையாக வந்து சேரும், என்று பதிலளித்தார் மாணிக்கவாசகர்.

நீண்டநாட்களாகியும் குதிரைகள் வராததால் மன்னனுக்கு சந்தேகம் ஏற்பட்டு, நம்மை ஏமாற்றிய இவனைச் சிறையில் அடைத்து சித்ரவதை செய்யுங்கள், என ஆணையிட்டான்.

காவலர்கள் அவர் முதுகில் பெரிய பாறாங்கற்களை ஏற்றி கொடுமைபடுத்தினர். அரசுப் பணத்தைக் கொள்ளையடித்ததாக ஒப்புக்கொள்ளாவிட்டால் மறுநாள் தண்டனை அதிகரிக்கும் என்று எச்சரித்து சென்றனர்.

இதற்குள் மன்னன் விதித்த கெடு காலமான ஆடி முடிந்து ஆவணி பிறந்துவிட்டது.

அம்மாதத்தில் வரும் மூலம் நட்சத்திர நாளன்று சிவபெருமான் நந்தீஸ்வரரை அழைத்தார்.

நந்தி! என் பக்தன் மாணிக்கவாசகன், குதிரை வாங்கித்தராத குற்றத்திற்காக பாண்டியநாட்டு சிறையில் அவதிப்படுகிறான்.

நீயும், நம் பூதகணத்தவர்களும் காட்டிலுள்ள நரிகளை குதிரைகளாக்கி அங்கு கொண்டு செல்லுங்கள். நான் குதிரை வீரனாக உங்களுடன் வருவேன், என்றார்.

நந்தீஸ்வரரும் மகிழ்ச்சியுடன் அவ்வாறே செய்தார். ஆயிரக்கணக்கான குதிரைகள் மதுரை நகருக்குள் அணிவகுத்து வந்தது பற்றி மன்னனுக்கு தகவல் சென்றது.

அந்த அழகான, விலைமதிக்க முடியாத குதிரைகளைக் கண்டு மன்னன் ஆச்சரியப்பட்டான். அன்று இரவே அந்த குதிரைகள் அனைத்தும் நரிகளாகி ஊளையிட்டன.

தன்னை ஏமாற்றி விட்ட மாணிக்கவாசகரை சுடுமணலில் நிற்க வைத்தனர்.

தூரத்தில் தெரிந்த மீனாட்சியம்மன் கோபுரத்தைப் பார்த்து, இறைவா! இதென்ன சோதனை! குதிரைகளை நரிகளாக்கிய மர்மம் என்ன?

இத்தகைய கொடுமைக்கு ஏன் என்னை ஆளாக்கினாய்? என்று கண்ணீர் விட்டார்.

சுடுமணல் நிறைந்து கிடந்த அந்த ஆற்றில் மழையே பெய்யாமல் திடீரென வெள்ளம் பெருகி வந்தது.

காவலர்கள் அடித்து பிடித்துக் கொண்டு கரைக்கு ஓடினர். ஆனால், மாணிக்கவாசகரைக் கட்டியிருந்த கற்கள் உடைந்தன. அவர் எழுந்தார்.

அவர் நின்ற பகுதியில் மட்டும் வெள்ளம் அவரது பாதங்களை நனைத்துக்கொண்டு மூழ்கடிக்காமல் ஓடியது.

சற்றுநேரத்தில் வெள்ளத்தின் அளவு மேலும் அதிகரித்து கரை உடைத்தது.

மாணிக்கவாசகர் இருந்த இடத்தை விட்டு அசையவில்லை. எம்பெருமானைப் புகழ்ந்து பாடியபடி குளிர்ந்த நீரில் நடப்பது நடக்கட்டுமென நின்றார்.

வைகை நதியின் வெள்ளப் பெருக்கு மதுரை நகரை அலைக்கழித்தது.

வீட்டுக்கு ஒருவர் கரையை அடைக்கும் பணிக்கு வரவேண்டுமென முரசறைந்து அறிவிக்கப்பட்டது.

மதுரையில் வந்தி என்னும் மூதாட்டி பிட்டு விற்று பிழைப்பவள். அவள் தினமும் முதல் பிட்டை சுந்தரேஸ்வரருக்கு நைவேத்யம் செய்வாள்.

அதை சிவனடியார் ஒருவருக்கு பிரசாதமாகக் கொடுத்து விடுவாள். வந்திக்கிழவிக்கும் கரையை அடைக்கும் பணியின் ஒரு பகுதி தரப்பட்டது.

கூலிக்கு ஆள் தேடினாள். சுந்தரேஸ்வரப் பெருமான் தனக்கு தினமும் பிட்டிட்டதுடன் தர்மமும் செய்து வணங்கிய அந்த

பெருமூதாட்டிக்கு உதவி செய்ய முடிவெடுத்து கூலி ஆள் போல பாட்டி முன் வந்து நின்றார்.

பாட்டி! உனக்கு பதிலாக நான் கரையை அடைக்கிறேன், பதிலுக்கு நீ எனக்கு பிட்டு மட்டும் கொடுத்தால் போதும் என்றார். பாட்டியும் ஒத்துக் கொண்டாள்.

பின் ஒழுங்காக பணி செய்யாமல், மண்ணை வெட்டுவது போலவும், பாரம் தாங்காமல் அதே இடத்தில் கூடையை கீழே தவற விட்டது போலவும் நடித்தார்.

அப்போது அரிமர்த்தனபாண்டியனே பணிகளைப் பார்வையிட அங்கு வந்ததைக் கண்ட சுந்தரேஸ்வரர், ஒரு மரத்தடிக்குச் சென்று, உறங்குவது போல பாசாங்கு செய்தார்.

யாரோ ஒருவன் வேலை செய்யாமல், தூங்குவதைக் கவனித்து விட்ட மன்னன், அங்கு வந்து அவரை பிரம்பால் அடித்தான்.

அந்த அடி உலக உயிர்கள் அனைத்தின் மீதும் விழுந்தது. உடனே அந்த கூலியாள் ஒரு கூடை மண்ணைக் கரையில் கொட்டியதும் வெள்ளம் வற்றிவிட்டது.

இதைக் கண்ட மன்னன் அதிசயித்தான். இந்த அதிசயம் நிகழக் காரணமாய் இருந்த மூதாட்டி வந்தியைக் காணச் சென்ற போது, வானில் இருந்து புஷ்பக விமானத்தில் வந்த சிவகணங்கள் தங்களை அழைத்து வரும்படி சிவபெருமானே உத்தரவிட்டார்,

தாங்கள் எங்களுடன் வாருங்கள், என்று அழைத்துச்சென்றனர். அவளும் மகிழ்வுடன் சிவலோகத்துக்குப் பயணமானாள்.

உடனே பாண்டியன், எனக்கெதற்கு இந்த அரசாங்கம்? இதனால், என்ன பலன் கண்டேன். என புலம்பினான்.

அப்போது அசரிரீ ஒலித்தது. அரிமர்த்தனா! திருவாதவூராரின் பொருட்டு இந்த லீலைகளைப் புரிந்தது நானே! என்றார்.

தனது தவறை உணர்ந்து அவரிடம் மன்னிப்பு கேட்ட மன்னன், மீண்டும் அமைச்சர் பொறுப்பேற்க வேண்டினான்.

மாணிக்கவாசகரோ அதை ஏற்காமல் அவனை ஆசிர்வதித்து விட்டு, தில்லையம்பலமாகிய சிதம்பரத்துக்குச் சென்று விட்டார்.

அங்கு வேதியர் போல அமர்ந்திருந்த சிவபெருமான், மாணிக்கவாசகர் பாடப்பாட ஓலைச்சுவடியில் எழுதத் தொடங்கினார்.

எழுதி முடித்த சிவபெருமான் அந்த ஓலைச்சுவடியின் மேல் மணிவாசகன் சொன்ன திருவாசகத்தை எழுதியது அழகிய திருச்சிற்றம்பலமுடையான் என்று கையொப்பமிட்டு சிதம்பரம் கனகசபையில் வைத்து விட்டு மறைந்து விட்டார்.

அப்போது தான் மாணிக்கவாசகருக்கு தான் கூறிய திருவாசகத்தை எழுதியது சிவபெருமான் என்பது தெரியவந்தது.

பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறை மாணிக்கவாசகரால் பாடப்பட்ட திருவாசகமும், திருக்கோவையாரும் ஆகும்.

ஞானநெறியைப் பின்பற்றிய இவர் 32 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்து ஆனி மாதம் மகம் நட்சத்திரத்தில் சிவனடி சேர்ந்தார்.

பாடிய நூல்களாவன: திருவாசகமும், திருக்கோவையாருமாகும்.

## 3.வேதாத்திரி மகரிசி வாழ்க்கை வரலாறு(1911–2006)

எக்காலத்திலும் வாழும் மக்களின் நல்வாழ்விற்காக வேதாத்திரி மகரிஷி அவர்கள், அனைத்துத் துறைகளைப் பற்றியும், உலக சமாதானம் பற்றியும் ஒருலக ஆட்சிக்கான திட்டங்களையும் தந்துள்ளார்கள்.

வேதாத்திரி மகரிஷி ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயப் பணி ஆற்றி வந்தவர்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் நெசவுத் தொழில் செய்யும் வரதப்பன், முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்தி கதைகளையும், புராணக் கதைகளையும் அறிந்து கொண்டார்.

இவரது குடும்பசூழல் இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்பு வரை படித்த இவர், பின்னர் தங்கள் குடும்ப தொழிலான தறி நெய்தலை செய்யத் தொடங்கினார்.

18வது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது.

சென்னையில் இவருக்கு ஆயுர்வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணாராவின் நட்பு கிடைக்க, அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளை கற்றார் மகரிஷி.

தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால் உந்தப்பட்டு; சித்த, ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ துறைகளைக் கற்று தேர்ச்சிப் பெற்றார்.

மேலும் இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார்.

பின்பு பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும் என்று, தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

அச்சமயத்தில் அரசாங்கத் தொழிற்கொள்கை மாற்றம் காரணமாக வியாபாரம் திடீர் சரிவு நிலையை அடைந்தது,

இருப்பினும் தன்னிடம் பணிபுரிந்த 2000 குடும்பங்களையும் காப்பாற்றுவதற்காக ஈட்டிய பொருள் அனைத்தையும் அவர்களுக்கே செலவழித்து அனைத்து பொருள் வளத்தையும் இழந்தார்.

அப்படியிருந்தும் மனத்தை தளரவிடாது மீண்டும் கடுமையாக உழைத்து படிப்படியாக பொருளாதாரத்தில் தன்னை மேம்படுத்திக் கொள்ள அரிசி வியாபாரம் போன்ற பல்வேறுபட்ட தொழில்களை செய்து தனக்கும், தன்னை சுற்றியுள்ளவர்களின் துன்பத்தை போக்கவும் பாடுபட்டவர்.

தன் இரண்டு மனைவியருடைய மனத்தையும் நன்கு புரிந்தவராய் இருவரிடமும் பிணக்கின்றி அன்புடன் வாழ்ந்து காட்டினார்.

வறுமையிலேயே வாழ அடியெடுத்து வைத்த அவரது உள்ளத்தில் வறுமை என்றால் என்ன? கடவுள் என்பது எது? அதை ஏன் காண முடியவில்லை? மனித வாழ்க்கையிலேயே ஏன் துன்பங்கள் தோன்றுகின்றன போன்ற கேள்விகள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டே இருந்தன.

இவற்றிற்கு காரணங்கள் கண்டு தெளிவு பெறுவதற்காக ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

விளைவாக தனது 35வது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார். அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே மனவளக்கலை ஆகும்.

## நூல்கள் இயற்றல்

இந்தப்பிரபஞ்சத்தைப் பற்றியும் மனித வாழ்க்கையைப் பற்றியும் தவநிலையில் தான் பெற்ற கருத்துக்களை பல கவிகளாகவும், கட்டுரைகளாகவும் புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு மகரிஷி அவர்கள் அளித்துள்ளார்கள்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த தமிழ்ப்பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார். எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.

1957ல் மகரிஷி 'உலக சமாதானம்' என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார். தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு இவருக்கு கிட்ட அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட 1958-ஆம் ஆண்டில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம் தொடங்கினார்.

இச்சங்கம் இன்று இந்தியாவிலும், சிங்கப்பூர் மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா, போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

வேதாத்திரி மகரிஷி ஏறக்குறைய தமிழிலும் ஆங்கிலத்திலும் சேர்த்து எண்பது நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் சில:

1 வேதாத்திரியத்தின் இறைநிலை விளக்கம்
2 வாழ்வியல் விழுமியங்கள்
3 பிரம்மஞான சாரம்
4 நான் யார்?
5 ஞானக்களஞ்சியம்

## செயல் விளைவு

“ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டு” என்ற இயற்கை நியதியை உணர்ந்து கொள்ளக்கூடிய முறையிலே உள்ள கல்விதான் இன்றைக்கு அவசியமாக உள்ளது” என்ற வார்த்தைகளில் இருந்து இயற்கை தத்துவ அறிவுக் கல்வியின் அவசியத்தை உணர்ந்து கொள்ளலாம்.

## காந்தம்.

“உயிர்த் துகள்கள் மிக மிக நுண்ணியது.  அவை தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கக்கூடிய சுழல் அலைகள்.

அப்படி சுழல்வதனால் ஏற்படும் விரிவலைகள் சுழலாத இருப்பு நிலையில் உராய்ந்து கரைந்து விடுகிறது.”

அப்போது தள்ளும் கொள்ளும் சக்தியான இரட்டை ஆற்றலாக காந்தம் என்ற பெயரில், ஜீவன்களில் ஜீவகாந்தம் என்றும், அதே இயக்கம் பிரபஞ்சத்தில் இருப்பதை வான் காந்தம் என்றும் சொல்லப்படுகிறது.

## மனம்

“புலன்கள் மூலமாகப் பெறும் அனுபோக அனுபவங்கள் எண்ணம் எனப்படுகிறது.

எண்ணங்களின் தொகுப்பு மனம் என்றும் மனிதனில் அது ஆறாவது அறிவு என்று சிறப்பாகவும் பேசப்படுகிறது.”

## அலை இயக்கம்

“உடல் முழுவதும் சுழன்று கொண்ருக்கக்மகூடிய ஜீவகாந்தம் உடல் என்னும் பஞ்ச புதக்கூட்டில் திணவுறும்போது அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்று மாற்றமடைந்து அலை வடிவில் அததற்குரிய பொறிபுலன்கள் மூலம் எப்போதும் வெளியேறிக் கொண்டுள்ளது.

அவ்வபோது வெளியேறும் போது ஏற்படும் தடைதான் உணர்வாக மலர்கிறது.

மோதுதல், பிரதிபலித்தல், சிதறுதல், ஊடுறுவுதல், இரண்டிடையே ஓடிக் கொண்டிருத்தல் என் ஐவகை இயக்கம் ஒவ்வொரு அலைக்கும் உண்டு.”

## மறைவு

மகரிஷி 28.03.2006ல் அவரது பூத உடல் மறைந்தாலும், உலகெங்கும் உள்ள அவரால் உருவாக்கப்பட்ட ஆசிரயர்களும்,

பேராசிரியர்களும் தொடர்ந்து மனவளக்கலைப் பயிற்சிகளை விரும்பும் அன்பர்களுக்கு முறையாகக் கற்றுக் கொடுத்து வருகிறார்கள்.

# 4.பக்தியும் ஞானமும் – ஒரு ஒப்பீடு

"அறிவு அறிவுக்கு அடிமையாவதே பக்தி
அறிவை அறிவால் அறியப்பழகுதல் யோகம்
அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி
அறிவை யறிந்தோர் அன்பின் அறமே ஞானம்." (ஞாக.பா.1356)

காலந்தோறும் அருளாளர்கள் தம் படைப்புகளால் சமயப் பணிளைச் சிறப்புற ஆற்றியுள்ளனர்.

இதன் வளர்ச்சியில் இருநிலையைக் காண்கிறோம்.

ஒன்று இறைவனை அடைதலையே முழுமுதல் நோக்காகக் கொண்டு செயல்படுதல் ஆகும். அப்பர். சம்பந்தர், சந்தரர், தாயுமானவர் போன்றோர் இதற்குச் சான்றாவர்.

மதச் சிர்திருத்தத்தையும் சமூக மேம்பாட்டினையும் கருத்துட் கொண்டமை பிறிதொன்றாகும். திருமூலர் முதலான சித்தர்கள் இதன்பாற்படுவர்.

- இங்கு முதற்கூறின் பாற்படுபவராகத் திருருவாசகம் படைத்த மாணிக்கவாசகரும், மற்றதன் சார்பாளராக வேதாத்திரியம் கண்ட வேதாத்திரி மகரிஷியும் அமைகின்றனர்.
- இவ்விருவரின் பாதைகள் வேறாயினும் பயணத்தின் நோக்கமும் நிறைவும் ஒன்றே.

- மாணிக்கவாசகர், ஒன்பதாம் நூற்றாண்டில் சிறந்த சிவபக்தரான இரண்டாம் வரகுணன் (863–911) காலத்தில் வாழ்ந்தவர். இவர் அரிமர்த்தன பாண்டியனிடம் தலையமைச்சராக பணியாற்றினார்.

- மாணிக்கவாசகர் வாழ்ந்த காலகட்டம் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு என்றும் கி.பி 13 அல்லது 14 ஆம் நூற்றாண்டு காலகட்டம் என்றும் இரு வேறு கருத்துகள் உள்ளன.
- வேதாத்திரி மகரிசி 20 நூற்றாண்டில் வாழ்ந்தவர்.
- மணிவாசகர், மாணிக்கவாகர், ஆளுடைய அடிகள் என்றழைக்கப்படும் சிவனருட்செல்வரின் இயற்பெயர் வாதவூரர். மதுரைக்கருகில் வாதவூரில் அவதரித்தார். பிறந்த ஊரின், இறைவனின் பெயரே இயற்பெயரால் இவருக்கு அமைந்தது .
- யோகிராஜ், தத்துவஞானி, மகரிஷி, அருட்தந்தை எனப்பலவாகப் போற்றப்படும் வேதாத்திரியின் இயற்பெயரும் அதுவே. மகரிஷி சென்னைக்கு அருகில் கூடுவான்சேரியில் அவதரித்தார்.
- இருவருமே தம் படைப்புகளின் பெருமையால் சிறப்புப் பெயர் பெற்ற பொலிகின்றனர்.
- சுமார் 1200 ஆண்டுகால இடைவெளி இருவருக்குமிடையே அமைவதும் கூறத்தக்கது.
- திருவாதவூரில் மாணிக்கவாசகரைத் தந்த பெருமைக்கு உரியவர்கள் சம்புபாதாரசிரியாரும் சிவஞானவதியாரும் ஆவர்.
- கூடுவாஞ்சேரி வரதப்பரும் சின்னம்மாளும் வேதாத்திரியாரை இம்மண்ணுக்களித்த பெருமையாளராவர்.
- தம் அறிவாற்றலால் பாண்டிய மன்னன் அவையில் அமைச்சராக உயர்நிலை பெற்றவர் மாணிக்கவாசகர்.
- வறுமைச் சூழலில் குழந்தைப் பருவத்திலேயே குலத் தொழிலாம் நெசவுத் தொழிலை மேற்கொண்டு தம் அறிவுத்

திறத்தாலும் பலரின் உதவிகளாலும பொருளாதாரத்தில் உயர்நிலை கண்டவர் வேதாத்திரியார். முன்றாம் வகுப்புவரை படித்தவர் வேதாத்திரியார்.

- இம்மண்ணுலுகில் 32 ஆண்டுகளே மாணிக்கவாசகர் வாழ்ந்தார். வேதாத்திரி மகரிஷி 96 ஆண்டுகள் வரை வாழ்ந்தார்.
- அரசுப்பணி மூலம் சமூகப்பணி புரிந்தவரைத் திருப்பெருந்துறையில் குருவாக வந்து ஆட்கொண்டான் இறைவன்.
- ஏழுவயது முதலே ஞானவேட்கை கொண்ட வேதாத்திரியாருக்கு முதற் குருவாய் அவரது தந்தை அமைந்தார்.
- மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும் இறைநிலையால் அனுப்பப்பட்ட தூதுவர்கள். எல்லையற்ற விஷயங்களைக் கூறும் தீர்க்கதரிசிகள்.
- மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும் திரிகால ஞானிகள்.
- இருவரது கவிதைகள் படிப்போர் உள்ளத்தை ஈர்க்கின்றன. சிந்தனையைத் தூண்டுகின்றன. அறிவுச் சுடரைக் கொளுத்துகின்றன. ஆன்மிக உணர்வு பொங்கச் செய்கின்றன.
- மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும் தமிழ்ப் பற்றாளர்கள்.
- மொழி வளம், கற்பனை நயம், சமூகப் பார்வை, பிரக்ஞையுடன் கூடிய சீற்றம் எல்லாம் இணைந்து இணக்கமாகி, இவர்களை ஓர் இணையற்ற மகான்களாக ஆக்கியிருக்கின்றன.
- எளிய சொற்களால் எழுச்சியூட்டும் இவர்களது கவிதை வரிகளில் மொழி வளர்ச்சிக்கும், சமுதாய மேம்பாட்டிற்கும். உரத்த சிந்தனைகள் தெரிகின்றன.

- இருவருக்கும் ஒரு முரண்பாடு உண்டு. மாணிக்கவாகர் திருவாசகத்தில் சமய காழ்ப்பு தென்படும். வேதாத்திரியத்தில சமய பொதுவுடைமையைக் காணலாம்.
- பக்தியில் தொடங்கி பக்தியில் முடிக்கிறார் மாணிக்கவாசகர். ஞானத்தில் தொடங்கி ஞானத்தில் முடிக்கிறார் வேதாத்திரியார்.
- இருவருமே பெண் முன்னேற்ற சிந்தனைகளை முன் வைக்கிறார்கள்.
- திருவாசகத்திற்கும் வேதாத்திரியத்திற்கும் உருகாதார் எவருமில்லை.
- மாணிக்கவாசகரின் கொடை திருவாசகமும் திருக்கோவையாரும். வேதாத்திரியின் கொடை வேதாத்திரியம்.

மகரிஷி எஸ்கிருஷ்ணராவ், பரஞ்சோதி மகான் போன்றவர்கள் வழிகாட்டுதலுடன் தம் ஆழ்சிந்தனையின் விடாமுயற்சியால் இறைமையை உணர்ந்தார். இதனை அவரே,

"அறிவைப் புலன்களில் அதிகநாள் பழக்கினேன்
அதன்பயன் உணர்ச்சிகள் அறிவை வென்றன
அறிவை யறிவால் ஆராயப் பழகினேன்
அந்த நிலையிலும் புலன்களை இயக்கினேன்
அறிவு அகண்டா காரத்தில் நிலைபெற
அதிக விழிப்பும் பழக்கமும்பெற்றது
அறிவு புலன்களை அறிந்தது வென்றது
அங்கு வாருங்கள் அமைதி விரும்புவோர்." (ஞாக.பா.1213)

எனப் பதிவு செய்துள்ளார்.

- மாணிக்கவாசகர் பக்தியில் தொடங்கி பக்தியில் முடிக்கிறார். வேதாத்திரி மகரிஷி ஞானத்தில் தொடங்கி ஞானத்தில் முடிக்கிறார்.

- தன்னனுபவ வெளிப்பாடு, தன்னிரக்கம், இறைவேட்கை என்பன மாணிக்கவாசகரின் மாணிக்க மொழிகளில் செய்யுட்களாக வடிவெடுத்துக் கற்பாரைக் கரைய வைத்தன. இறையருளுக்கு ஏங்கி ஏங்கி உருகியதில் இறையன்பர் வரிசையில் இடம் பெற்றார்.
- தனது அயரா முய்சியில் இறையருள் பெற்ற வேதாத்திரியாரின் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதில் அசையா ஊக்கங் கொண்டவர். படிக்கத் தெரிந்த ஆர்வலர் அனைவரும் பயன்கொள்ளும் வகையில் செய்யுளாகவும் உரைநடையாகவும் தம் எண்ண ஊற்றுக்களை ஆக்கியளித்தார்.
- உலக மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய அன்பு வேலியாதலின் யாவரும் பயன்கொள்ளும் வகையில் உலகப்பொதுமொழியான ஆங்கிலத்திலும் அவற்றை ஏற்றியுள்ளார்.
- மெய்ஞ்ஞானம் பெற்ற மகிழ்வில் மூழ்கி முன்னவர் திளைக்க, பின்னவர் அதனை விஞ்ஞானத்துடன் இணைத்து உலகத்தவரும் இன்புற வழிகாட்டுதலையே பெரும் பேறாகக் கொண்டார்.

"கல்லாத புலனறிவில் கடையப்பட்ட நாயேனை
வல்லாளனாய் வந்து வனப்பு எய்தி இருக்கும் வண்ணம்
பல்லோரும் காண என்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சு தில்லை அம்பலத்தே கண்டேனே" (476)

எனத் தேடாமலே அவனருள் கிடைத்ததில் மாணிக்கவாசகர் தமக்கு தாமே அனைத்தும் அறிந்தவராக, உணர்ந்தவராக அமைகிறார்.

- சிறுவயது முதலே இறைவனைத் தேடிய வேதாத்திரியாருக்குத் திருமூலர், திருவள்ளுவர். தாயுமானவர், இராமலிங்க வள்ளலார் ஆகியோர் தம் படைப்புகள் வழி வழி நடத்தியுள்ளனர்.

“திருப்புகழாய் உன் பெருமை உணர்ந்த முன்னோர்
தெளிவாகப் பிறர் உணரப் பாடியுள்ள
தெய்வமொழி என் உள்ளத்தில புகுந்து தூண்ட
தெவிட்டா இன்பத்தில் திளைத்தேன்” (இறையுணர்வும் அறநெறியும்-ப.1)

என அவரே இதனை மொழிந்திருப்பது கூறத்தக்கது.

- மாணிக்கவசாகர் அழுது அடியடைந்த அன்பர் எனில் மகரிஷி உலகநல அருள் தொண்டராவார்.
- மாணிக்கவாசகர் திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டு நூல்களைத் தந்துள்ளார்.
- வேதாத்திரி மகரிஷியோ இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட கவிதைகளை ஞானக் களஞ்சியமாகவும், உலக சமாதானம், போன்ற எழுபத்து ஐந்துக்கு மேற்பட்ட நூல்களைத் தந்துள்ளார்.
- காலப் பழமைக்கேற்ப முன்னவர் மரபாளராகிறார். பின்னவர் புத்துலகச் சிற்பியாக உள்ளார்.
- இருவரையும் இணைத்துக் காண்பது மாணிக்கவாசகரின், “முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே. பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே” (163) என்னும் கூற்றினை விரித்துரைப்பதாகலாம்.
- வேதாத்திரியாரின் உயர்சிந்தனைகளின் கருவூலம் வேதாத்திரியமாக உருவெடுத்துள்ளது.
- மாணிக்கவாசகர், “ஆலமுண்டான் எங்கள் பாடிப்பிரான் தன் அடியவர்க்கு மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே” (525) என உரைத்த மூலபண்டாரம்– வேதாத்திரியம் என யாவருக்கும் வெளிப்படை பெருகி நிற்பதாகக் கொள்ளலாம்.

## திருவாசகம் படித்தால் முக்தியா?

தான் வெளியூர் சென்று திரும்பும்முன் தான் எழுதிய நூலைப் படித்து முடித்துவிடுமாறு குருகுலத்தில் சீடர்களிடம் சொல்லிச் சென்றார் அந்த குருநாதர்.

எல்லோரும் முழுமையாகப் படித்து முடித்திருந்தார்கள். ஒரே ஒரு சீடர், அதில் ஒரேயொரு வரியை மட்டுமே படித்ததாக சொன்னார்.

மிகக் கடுமையாய் ஏசினார் குரு. சீடர் முகம் வாடவில்லை. ஓங்கி அறைந்தார் குரு. அந்த இளைஞர் வருந்தவில்லை.

சிறிது நேரம் போனது. அமைதியடைந்த குரு, அந்த சீடரை அழைத்து “நீ படித்த வரி என்ன?” என்று கேட்டார்.

“உன் கோபத்தைக் கட்டுப்படுத்து. எப்போதும் நிதானமாக இரு” என்பதே அந்த வாசகம். வெட்கித் தலை கவிழ்ந்தார் குரு. அந்த குரு, துரோணர். அந்த சீடர் தருமர்.

இந்தக் கதையில் சொன்ன கருத்தைப் போல் திருவாசகம் படித்தால் மட்டும் முக்தி கிடைக்காது. கதையில் சொன்ன தருமர் போல் இருக்க வேண்டும்.

மாணிக்கவசாகர் இறையுணர்வு பெற முயற்சித்த. சரணாகதி மனப்பான்மை வேண்டும். ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக வேண்டும்.

“வன்புலால் வேலும் அஞ்சேன் வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்
என்பெலாம் உருக நோக்கி அம்பலத் தாடு கின்ற
என்பொலா மணியை ஏத்தி இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே. (திருவாசகம்518)

தசையைப் பறிக்கும் வலிய வேலைக் கண்டு பயப்பட மாட்டேன். வளையல் அணிந்தபெண்களின் கடைகண் பார்வைக்குப் பயப்படமாட்டேன்.

எலும்பு எல்லாம் உருகுமாறு அம்பலத்தில் நின்று கூத்து நிகழ்த்தும் என்னுடைய செதுக்கப்படாத மாணிக்க மணி போன்றவனை.

அவனது இனிய திருவருளைப் பருக மாட்டா அன்பு இல்லாதவரைக் கண்டால் நான் பெரியதும் பய்னபடுவேன் என்கிறார் மாணிக்கவாசகர்.

“நீதிநெறியுணர் மாந்தராகி வாழும்

நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்.”

“எத்தகைய உயிர்கட்கும் இன்பநிலை காத்து

இறைணர்வில் இணைந்து அறம் ஆற்றி வாழும் பேறு”(ஞாக.பா)

என்ற மகரிஷியின் தத்துவம் நமக்கு உணர்த்துவது.

“முக்தி” பெறும் மார்க்கம் குண்டலினி யோகம்

.

“ஒரு மனிதன் சிந்தனை ஆற்றல் மிகுந்து பிறவித் தொடரை அறுத்து விட எண்ணுகிறான்.

முறையாக ஆசானிடம் அகநோக்குப் பயிற்சியாகிய குண்டலினி யோகம் (□□□□□□□□□□ □□□□□□□□□ □□□□) கற்று புலன்களை விளைவறிந்த விழிப்போடு ஆளும் திறமை பெற்று விடுகிறான்.

பின்னும் அறிவு மேலோங்கி நடுமனதில் பதிவாகியுள்ள பழிச் சுமைப் பதிவுகளை “துரிய நிலை” தவத்தாலும், அந்நிலையில் நின்று ஆராய்ச்சியாலும் மாற்றிக் கொள்ளுகிறான்.

“துரியாதீத” நிலையெய்தி மெய்ப்பொருளோடு இணைந்து நின்று நின்று, நிலை பேறு அடைந்து அறிவின் முழுமை பெறுகிறான்.

உயிர் உடலில் இயங்கும்போதே தெய்வ நிலைத் தெளிவும், பழிச் சுமை கழிவும் உண்டாகிவிடுகின்றன.

அவன் உடலை விட்டு உயிர் பிரிந்தால் அது முழு விடுதலை விரைவு கொண்டு உடனே பேரியக்கத் தொடர்கள் உயிரில் (□□□□□□□□□

) கலந்து விடுகின்றது. இந்தப் பிரிவைச் சேர்ந்த முடிவுதான் “முக்தி” அல்லது “மோட்சம்” எனப்படும்.

“விடுதலை” என்றுதான் இச்சொற்களுக்கும் பொருள். அறிவின் முழுமைப் பேறடைய விரும்பும் மக்களுக்கு இத்தகைய உயிராற்றல் எப்போதும் “ஆன்ம ஒளி” தரும் பிரதிபலிப்பு ஆற்றலாக விளங்கும்”. என்கிறார் மகரிஷி.

மெய்ப்பொருள் :

“பிள்ளைக்குத் தகப்பன் யார்? என்ற உண்மை
பெற்றவள் அறிந்த நிலையதுபோல் - 'ஞானம்' ;
கிள்ளைபோல் தாய்குறித்த தகப்பன் காட்டி
கேட்பவர்க்குச் சொல்லும் மகன்நிலையே - 'பக்தி' ;
உள்ளத்துக் கற்பனையும் புலன்கள் ஐந்தின்
உணர்ச்சிக்குக் கட்டுப்பட்டநிலையே - 'மாயை' ;
எள்ளுக்குள் எண்ணைபோன்று எங்கும் என்றும்
இயங்குகின்ற சக்தி கண்ட நிலையே - 'முக்தி' (ஞாக.பா.1358)



சிந்தைக்கு வேண்டியது இறையுணர்வு. செயலுக்கு வேண்டியது எத்தகைய உயிர்கட்கும் நாம் தரும் பாதுகாப்பும் (அன்பும்) பராமரிப்பும் (கருணையும்) இணைந்த அறநெறி என்கிறது திருவாசகம்.

இதுவே வேதாத்திரிய வாழ்க்கை நெறி. இறையுணர்வும் அறநெறியும் வேதாத்திரியத்தின் இரு கண்கள்.

- அன்பும் கருணையும் கொண்டு பெற்றோருக்கு அன்புள்ள மகனாக அல்லது மகளாக,
- இல்லறத்தில் அன்புள்ள கணவனாக அல்லது மனைவியாக,
- பெற்ற பிள்ளைகளுக்குப் பொறுப்புள்ள நல்ல தந்தையாக அல்லது தயாயாக,

- தொழில் புரியும் இடத்தின் அன்பானவராக,
- ஊரார்க்கு உதவும் கரங்களாக

நாம் வாழ்வோமேயானால் அதுவே முக்தி.

இந்த முக்தியை அடைந்த அளவே நமது வாழ்க்கையின் வெற்றி.

இறந்து அடைகின்ற நிலையல்ல முக்தி. இதைதான் மாணிக்கவாசகர் திருவாசகத்திலும் வேதாத்திரியார் ஞானக்களஞ்சியத்திலும் சொல்லியுள்ளார்கள்.

# 5.திருவாசகமும் வேதாத்திரியமும்

திருவாசகத்தை- தமிழ் மொழியில் அமைந்த வேதம் என்பார்கள்.


இறைவனை வழுத்தும் நூல்களில் -பக்தனின் ஆன்மீக அனுபவத்தைச் சொற்களாகப் பிழிந்தெடுத்து, கசிந்துருகிப் பேசுபவை உலகில் மிக மிகச்சில நூல்களே உள்ளன.

அவ்வாறு காணப்படும் சில நூல்களில் ஒன்றென இடம்பெறும் சிறப்புபெற்றது, திருவாசகம்.

“சொற்பொருள் கடந்த தெல்லோன்”திருவாசகம் என்பது ஒரு பெரிய தொகுப்பு நூல். உபநிடதம், ஏகான்ம வாதம் என்று போற்றப்படுவது.

தூய ஆன்மா பேரின்ப நிலை காண இறையருள் வேண்டி ஏங்கிய ஏக்கத்தின் இயல்பினை வெளிப்படுத்தக் காணலாம்.

இதனால்தான் சிவப்பிரகாசர், நால்வர் நான்மணி மாலையுள், வேதங்களை விட உயர்ந்ததாக இதனைப் போற்றுவார்.




இதில் **சிவபுராணம்** தொடங்கி, அச்சோப் பதிகம் ஈறாக 51 பாடல்நூல்கள் உள்ளன. அவைகளில் அடங்கியுள்ள தொகை 656. அவற்றுள் பத்துப்பத்துப் பாடல்களாகப் பாடிய பதிகநூல்களே அதிகம்.

நீண்ட பாடல்களாக விளங்குபவை சிவபுராணம், கீர்த்தித் திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித் திருவகவல், திருச்சதகம் ஆகியவை.

சுடர்விளக்குக்கும் தூண்டுகோல் ஒன்று தேவையாயிருப்பது போன்று- அருள் பித்தம் பிடித்தவர்களுடைய பித்தத்தைப் விலக்க வைக்க வல்லது- வாதவூரரது வாசகம்.

சத்சங்கம் செய்வதற்கு நிகர் திருவாசகத்தில் திளைத்திருப்பது. நல்லார் இணக்கம் சாதனத்தை ஓர்மைப்படுத்துவது போன்று இந்த நூலும் செய்யவல்லது.

ஆன்மாக்களின் மாசினைக் களைந்து உய்தியளிக்கவல்ல ஞான நூலாகத் திருவாசகத்தைப் பாராட்டும், வேதாத்திரியாரின் ஞானச் சுடரான வடலூர் வள்ளலார், தெய்வ மணங்கமழும் **திருவாசக**ப் பாடல்களைப் பாராட்டி,

*வான்கலந்த மாணிக்க வாசக- நின் வாசகத்தை*
*நான்கலந்து பாடுங்கால்- நற்கருப்பஞ் சாற்றினிலே*
*தேன்கலந்து- பால்கலந்து -செழுங்கனித்தீஞ் சுவைகலந்-தென்*
*ஊன்கலந்து -உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே*

என தம் ஆளுடை அடிகள் அருள்மாலையுள் போற்றிப் பாடியுள்ளார்.

டாக்டர் ஜி.யு.போப் அவர்கள் ஆங்கிலத்தில் திருவாசகத்தை மொழி பெயர்த்துள்ளார்.

திருவாசகத்துக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. சிவன் தன்னுடைய சிந்தையிலே நின்றதனால், அவனுடைய திருவருளாலே அவனுடைய திருத்தாள்களை வணங்கி, மாணிக்கவாசகர் உரைத்த திருப்பாடல்கள் அவை;

அவற்றை சிவபெருமானே நேரில் வந்து, தன்னுடைய திருக்கரத்தினால் எழுதி, அந்நூலின் "திருக்கடைக்காப்புப் பகுதியில், "இவை எழுதியது,.

"அழகிய திருச்சிற்றம்பலமுடையான் எழுத்து" என்று கையெழுத்திட்டு அருளிய நூல்; அந்நூலின் பொருளைத் தில்லை மூவாயிரவர் கேட்டபோது, நூலின் பொருள், திருச்சிற்றம்பலத்து இறைவனே என்று மாணிக்கவாசகரால் சுட்டிக்காட்டப் பட்ட பெருமையுடைய நூல்.

"திருவாசகம் வேறு, சிவன் வேறு", என்று எண்ணப்படாமல், சைவர்கள் பலரால் திருவாசக ஏடு, பூசையில் வைத்து வணங்கப்படும் பெருமையினையுடையது. திருவாசகப்பாடல்கள்-

உருகு உருகிப் பாடப்பெற்றமையால், படிப்பவரையும் கேட்பவரையும் மனம் உருகச்செய்யும்.

"திருவாசகத்துக்கு உருகாதார், ஒரு வாசகத்துக்கும் உருகார்" என்பது பழைய வாக்கு. குருவடிவாகக் காட்சியளித்து, தீட்சை தந்து, மறைந்த சிவனை மீண்டும் பெற நினைந்து, நினைந்து, நினைந்து பாடியவை. அவருடைய அனுபவம், "அழுதால் உன்னைப் பெறலாமே!"

## மக்கள் பாடாண் பாடல்(folk-songs):

திருவாசகத்தில் மற்ற பழம் நூல்களில் காணப்படாத ஒரு தனிச்சிறப்பு காணப்படுகிறது.

அக்காலத்தில் வழங்கப்பட்ட □□□□-□□□□□ எனப்படும் “மக்கள் பாடாண் பாடல்களை இறைவனை வழுத்திப் பாடுவதற்காக மாணிக்கவாசகர் பயன்படுத்தி இருக்கிறார்.

அந்தப் பாடாண் பாடல் வகைகளில் மாணிக்கவாசகர் தேர்ந்தெடுத்திருப்பது, இளம்பெண்கள், சில விளையாட்டுக்களை விளையாடும்போது பாடும் விளையாட்டுப் பாடல்களைத்தான்.

இளம்பெண்கள் -விளையாடிக் கொண்டே இறைவனின் பெருமையைப் பாடுவது; பாடலிலேயே -இறைவனைப் பற்றிக் கேள்வி கேட்டு, அதற்குப் பதிலும் இறுப்பது; வஞ்சப் புகழ்ச்சியாகக் கிண்டல் செய்வது;

அதற்கும் பாடலிலேயே பதில் அல்லது சமாதானம் தருவது; இவை போன்ற விதத்தில் -அப்பாடல்களை மாணிக்கவாசகர் அமைத்துள்ளார்.

## உளவியல் அணுகுமுறை:

இவ்வேடிக்கை விளையாட்டுப் பாடல்களில் ஒரு பெரிய மனோதத்துவ அணுகு முறையே அடங்கியிருக்கிறது.

இளம்பெண்கள் அப்பாடல்களை மனப்பாடம் செய்து கொண்டு, விளையாடும் போதுகூட பாடிக்கொண்டே விளையாடுகையில், அந்த சமய மரபு, உண்மைகள், கோட்பாடுகள், கதைகள் ஆகியவை அப்பெண்களின் உள்ளங்களில் மிக ஆழமாகப் பதிந்துவிடும்.

பின்னர் அந்தப் பெண்கள் திருமணம் செய்துகொண்டு, பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டு குடும்பத்தை நடத்தும்போது - அவர்களிடம் ஆழப் பதிந்துள்ள சைவ உணர்வு, ஒவ்வொரு சிந்தனையிலும் சொல்லிலும் செயலிலும் பிரதிபலிக்கும்.

அது குடும்பத்தில் உள்ள கணவன், பிள்ளைகள், மருமக்கள், வேலையாட்கள் அனைவரிடமும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இச்சிறந்த மனோவியல் அணுகுமுறையை மாணிக்கவாசகர் மிகவும் வெற்றி கரமாகவும் லாகவமாகவும் கையாண்டுள்ளார்.

அவ்வாறு இயற்றிய மகளிர் விளையாட்டுப் பாடல்கள் திருஅம்மானை, திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருத்தோள்நோக்கம், திருப்பொன்னூசல் முதலியவை.

திருப்பொற்சுண்ணம் என்பது கோயிலில் சிவபெருமானுக்காகப் பெண்கள் வாசனைப்பொடி இடிக்கும்போது பாடும்பாடல்.

குயிலையும், தும்பியையும், அன்னையையும் முன்னிலை வைத்துப் பாடுபவை குயில் பத்து, திருக்கோத்தும்பி, அன்னைப்பத்து ஆகியவை.

## நால்வகை மார்க்கங்கள்:

சைவ சமயத்தில் -இறைவனை நேசிப்பதில் நான்கு வகைகள் சொல்லப் பட்டிருக்கின்றன.

- “சற்புத்திர மார்க்கம்” என்பது- இறைவனைத் தந்தையாக நேசிப்பது.
- “தாசமார்க்கம்” என்பது இறைவனுடைய அடிமையாக இருந்து வழிபடுவது.
- “சகமார்க்கம்” என்பது இறைவனைத் தோழனாக நேசிப்பது.
- “நாயகநாயகி மார்க்கம்” என்பது இறைவனையே காதலனாக நேசிப்பது.

## நாயகி பாவம்:

இதில் மாணிக்கவாசகர்- நாயகி பாவத்தையே தேர்ந்தெடுத்துள்ளார்.

திருக்கோவையார், திருவெம்பாவை, மகளிர் விளையாட்டுப் பாடல்கள், குயில்பத்து, அன்னைப்பத்து, திருக்கோத்தும்பி முதலிய பல பாடல்களில் இதுவே வெளிப்படும்.

மிக எளிய சொற்கள், தெளிவான கருத்துகள், ஆழமான தத்துவங்கள் பொதிந்தவை. உள்ளத்தின் உணர்ச்சிப் பெருக்கை அப்படியே வெளிப்படுத்திய பாடல்கள்.

“பால் நினைந் தூட்டும் தாயினும் சாலப்

பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி-
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து -புறம்புறந் திரிந்த
செல்வமே -சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவது இனியே" (பிடித்தபத்து-9)

இளம்பெண்கள் ஆடிப்பாடும் விளையாட்டுகளைக் கொண்டு, நாட்டார் பாடல்கள் அமைப்பில் பாடியுள்ளார்.

அவை **திருஅம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருத்தோள் நோக்கம், திருச்சாழல், திருப்பொன்னூசல்** போன்றவை ஆகும்.

- திருவாசகம் கற்பதற்கான நூல் அன்று; இறைவனை உணர்வதற்கான வாசகம்.
- திருவாசகம் தமிழ் மொழியில் எழுதப்பட்டிருந்தாலும், மொழி ஆளுமையினால் மட்டும் அதன் ஆன்மாவைத் தொட்டுவிட முடியாது;
- வரம்பில்லாத இறையன்பே திருவாசகத்தின் அடிநாதம் இயல்புமொழி. அந்த மொழி புரிந்தால்தான் எவரும் திருவாசகத்திற்கு உருக இயலும்.

திருவாசகம் என்பதற்குப் பொருள் என்ன? அழகிய, தெய்வத்தன்மை வாய்ந்த சொற்களால் ஆகிய செய்யுள் நூல் என வரையறுத்துள்ளார் தமிழ்க்கடல் மகாமகோபாத்தியாய பண்டிதமணி - கதிரேசன் செட்டியார்.

எல்லையற்ற பெருங்கருணையாளனான சிவப் பரம்பொருளை மனிதன் மனம், மொழி, மெய் உதவியாலோ, ஐம்பொறிகளாலோ, ஐம்புலன்களாலோ அறிய முடியாது என்பது ஞானிகள் கண்ட உண்மை.

அத்தகைய இறைவனை, திருவாசகம் உணர்ந்து ஓதுவதால் உணரலாம்; அடையலாம்.

மனித உடலிலுள்ள ஊனக் கண்களைக் கொண்டு இறைவனைக் காண இயலாது (கண் முதற் புலனால் காட்சியும் இல்லோன்; உள்ளத்து உணர்ச்சியில் கொள்ளவும் படான் (திருவா: திருவண்டப்பகுதி).

உரை உணர்வுகளான மன, மொழி, மெய் இறந்தால் மட்டுமே- இறை உணர்வு பெற முடியும். அத்தகைய இறையருள் என்னும் மகா சக்தியை சாதாரண மனிதனும் எளிதில் பெற மணிவாசகப் பெருமானால் அருளப்பட்டதே திருவாசகமாகும்.

திருவாசகம் முழுவதுமே இறையனுபவத்தில் திளைத்த மணிவாசகர் என்னும் ஓர் அன்பரின் அனுபவப் பிழிவுகளே.

- இறைவனே ஸ்ரீகிருஷ்ணனாக அவதரித்து, மனிதகுலம் முழுவதும் உய்ய, அருச்சுனன் மூலம் இறைநீதியை மனிதர்களுக்கு உபதேசித்தது 'பகவத் கீதை'.
- மனிதருள் புனிதரான திருவள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்னும் உலகப் பொதுமறையை மனிதர்களுக்கு உரைத்தது 'திருக்குறள்'.

- இறையனுபவத்தில் திளைத்த ஓர் அன்பரின் இறை அனுபவப் பிழிவுகள் விண்ணப்பங்களாக இறைவனுக்குச் சூட்டப்பட்டவையே 'திருவாசகம்'.

அழகிய சிற்றம்பலமுடையாராகிய தில்லை சிவபெருமானே- திருவாசகத்தைத் தன் கைப்பட எழுதி, பேரூழிகாலத் தனிமையைப் போக்கப் பத்திரப்படுத்தி வைத்துள்ளதில் வியப்பேதுமில்லை.
ஆக,

- இறைவன் மனிதனுக்குச் சொன்னது 'பகவத் கீதை'.
- மனிதன் மனிதனுக்குச் சொன்னது 'திருக்குறள்'.
- மனிதன் இறைவனுக்குச் சொன்னது 'திருவாசகம்'.

உயிருக்கு உணவாகவும் மருந்தாகவும் செயலாற்றும்

திருவாசகத்திற்கு, உடலுக்கு உணவாகவும் மருந்தாகவும் செயலாற்றும் தேனை ஒப்பிட்ட சான்றோர்கள், தேனைப் போன்ற திருவாசகம் என்று உரைக்காது- 'திருவாசகத் தேன்' என்று உருவகம் செய்தார்கள்.

திருவாசகத்தில் திகழ்கின்ற பரம்பொருள் விளக்கம் அனுபூதிமான்களுக்குப் பரவசத்தை உண்டுபண்ணுகிற அருள் விருந்தாகும்.

கீதை கிருஷ்ண பரமாத்மாவுக்கு நிகரயிருப்பது போன்று, திருவாசகம் மாணிக்கவாசகருக்கு நிகர் என்பது உண்மை.

ஜன்மாந்திரங்களில்  மனிதனுடைய உள்ளத்தில் புகுந்துள்ள சிற்றியல்புகள், அந்தச் சிற்றியல்புகளைக் களையும் முறைகள், பரத்தை நாடுகிறவர்கள் பெறவேண்டிய பேரியல்புகள், அப்பேரியல்புகளை வளர்க்கும் முறைகள், அருள்தாகம் கொள்ளுதல், அருளைப் பெறுதல், அருளில் ஆழ்ந்து தோய்தல், பரமனைக் காணுதல், பரமனோடு தொடர்பு கொள்ளுதல்,

பரமனிடமிருந்து பெற வேண்டியதைப் பெறுதல், பக்தியைப் பெருக்குதல், பக்தி பராபக்தியாக வடிவெடுத்தல்,

பரதத்துவ தர்சனம் பெறுதல், பரத்தினால் இரண்டறக் கலத்தல் இத்தனைவித தெய்வீகப் படித்தரங்களும் அடங்கப் பெற்றது திருவாசகம்.

அதில் எப்பகுதியை ஆராய்ந்து பார்த்தாலும் அது மனிதனை இறை சொரூபமாக்க வல்லது.  அது ஆத்ம சாதகர்களுக்கு வாய்ப்பதற்கு அரியதொரு அருள் விருந்தாம்.

## தமிழ்த் தாத்தாவின் திருவாசகப்பற்று!

தமிழ்த் தாதா (தமிழ்க்கொடையாளி) டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்களுக்குத் தமது காலம் நெருங்கிவிட்டது என்று புரிந்துவிட்டது.

இதுவரை அவர் எழுதியது, படித்தது, பதிப்பித்தது எல்லாவற்றையும் மூட்டை கட்டி ஒரு மூலையில் போடு என்றார்.

“திருவாசகத்தை கொண்டு வா?'' என்றார். “பிணக்கில்லாதோர்' என்று தொடங்கும் “திருக்கழுக்குன்றம் பதிகத்தைப் படி'' என்றார். “உன் பற்று தவிர ஒரு பற்று வேண்டேன்'' என்றார்.

கரங்குவித்தார்! உயிர் பிரிந்துவிட்டது! தினமனியில் வந்த செய்தி

## “ஓய்! திருவாசகம் எங்கே? நான் எங்கே?”

**மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் -முதல் மாணவர், மாகவித்வான் தியாகராஜ செட்டியார்.**




**இவரை ஓர் அன்பர் பலகாலும் அடுத்து, திருவாசகத்துக்கு உரையெழுதுமாறு வற்புறுத்தி வேண்டிக்கொண்டு வந்தார்.**

செட்டியார் ஆகட்டும் என்று தவணை சொல்லிக்கொண்டு வந்தார்.

ஒருநாள் செட்டியார் காவிரிநதியில் நீராடி, நீறாடிப் பாலத்தின் மீது வந்து கொண்டிருந்தார்.

“ஐயா, திருவாசகத்துக்கு உரை எழுதும்” என்றார் அன்பர்.

செட்டியார், “ஓய்! திருவாசகம் எங்கே? நான் எங்கே? இந்த அனுபவ நூலுக்கு நானா உரை எழுதுவது? இன்னும் ஒருமுறை என்னை வற்புறுத்தினால் இப்படியே நதியில் குதித்து விடுவேன்” என்றார் தியாகராஜ செட்டியார்.

இதனால் -அதன் பெருமையும் அருமையும் விளங்குகின்றதல்லவா? -வாரியார் சொன்னது.

(ஒரு நிகழ்ச்சி.) சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ நாராயணகுரு அவர்களை சந்திக்க சென்றிருந்தார்.

குரு, சுவாமியிடம் என்ன தமிழ் நூல்கள் பிடிக்கும் என கேட்டார். சுவாமி, குருதேவரிடம் தாயுமான சுவாமிகள் பாடல்கள் என கூறினார்.

குருதேவர் சொன்னார் ‘ஆத்ம சாதனத்துக்கு தாயுமானவர் பாடல்கள் பெரிது. பொருள் விளக்கத்துக்கு திருவாசகம். ஒரு முனிவரே வந்து -பிரம்ம தத்துவத்தை தமிழில் சொன்னது திருவாசகம்.




ஸ்ரீ நாராயண குருதேவர் இதை சொன்னது சுவாமி சித்பவானந்தர் மனதில் ஒரு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.


1928-29 இல் இந்த மகான்களின் சந்திப்பு நிகழ்ந்தது. 1960 இல் சுவாமி சித்பவானந்தரின் ‘திருவாசகம் விளக்க உரை நூல் வெளியானது.

தமிழ் மொழி வேதாந்த நூல் மரபில் சுவாமிகளின் இந்நூலுக்கு தனி இடம் உண்டு.

கேரளத்தின் மகான் ஒருவர் அருளாலும், சுவாமி சித்பவானந்தரின் கருணையாலும் தமிழன்னைக்கு மேலும் ஒரு ஆபரணம் கிடைத்தது.

சுவாமி விவேகானந்தர் சொல்வார்– ‘பாரத தேசிய ஒருமை என்பது – அதன் சிதறி கிடக்கும் ஆன்மிக சக்திகளை ஒருங்கிணைப்பதே ஆகும்.

தம் இருதய துடிப்பினை பாரதத்தின் ஆன்மிக இசையுடன் லயப்படுத்திக் கொள்வதே பாரதத்தின் தேசிய ஒருமைப்பாடாகும்.’




மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம் காலம் மொழி எல்லைகளை கடந்து அந்த ஆன்மநேய ஒற்றுமையை நம் தேசத்திலே வெளிக்காட்டியது.

இறைவனால் வெளிப்படுத்தப்பட்ட வேதங்கள், திருவாசகம் ஆகியவற்றில் –எது சிறப்பு வாய்ந்தது?

வேதத்தைப் படிக்கும்போது உணர்ச்சி ஏதும் ஏற்படமாட்டாது; ஆனால் –திருவாசகம் படிக்கும்போது கருங்கல் மனமும் கரைந்து உருகும்;

தொடுமணற் கேணியை விட கண்கள் அதிகமாக நீர் சுரந்து பாய்ச்சும்; மெய்யின் மயிர் சிலிர்க்கும்;


உடல் விதிவிதிர்ப்பெய்தி படிப்பவர் அன்பராவார் என்று துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் கூறுகிறார்.

தினம் ஒரு திருவாசகமும்-வேதாத்திரியமும் படியுங்கள். வாழ்க்கை ஆனந்தமாக அமையும்.

## வேதாத்திரி மகரிஷியின் வேதாத்திரியம்.

மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தின் சிறப்பைச் சொல்வதற்கு "திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பர்.

அந்த திருக்கூட்ட மரபினில் வந்த, முடிவில்லாத தெய்வீக திருஓட்டத்தில், 1911 ஆம் ஆண்டின் அவதாரப் புருஷராகிய- வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய வேதாத்திரியத்திற்கு உருகாதார் யார் இருக்க முடியும்.



அதனால்தான் இறை என்ற இயற்கை, மகரிஷி வாயிலாக உலக மக்களுக்கு சேவைகள் வழங்க, உலக சமுதாய சேவா சங்கத்தை வழங்கியுள்ளது.

தனி மனித வெற்றிக்கான இல்லறம், துறவறம், இளமை நோன்பு, ஒழுக்கம், கடமை, ஈகை, பாவம், புண்ணியம் என பல மானிட அறங்களை அறிவியலடிப்படையில் விளக்கிக் கூறும் அறத்துப் பாலும், அரசியல், பொருளாதாரம், சுகாதாரம், கல்வி, விஞ்ஞானம் எனப் - பொருள் நெறி வகுத்துரைக்கும் பொருட்பாலும், இன்பம் துன்பம், அமைதி, பேரின்பம், இறைநிலை, உடல், உயிர், ஆன்மா, மனம் என எல்லவற்றுக்கும் தருகின்ற புதியனவாக இன்பத்துப் பாலும் நவீன முப்பாலின் சாரமே வேதாத்திரிய இலக்கியம்.

- இதுவரை வந்த உலகின் புகழ்பெற்ற பல சிந்தனையாளர்களின் கருத்துக்களை எல்லாம் உள்ளடக்கி அவற்றோடு தனது அனுபவத்தையும் ஒரு முறையான அடித்தளத்தோடு இணைத்து- இவ்வுலக மக்களுக்கு மகரிஷி தரும் வாழ்க்கைக் கல்விதான் -வேதாத்திரியம்.

இறையைப் பற்றிய மகரிஷியின் பார்வை முற்றிலுமான ஒரு விஞ்ஞானப் பார்வை.

சொல்லால் மட்டும் நம்பாதே! சுயமாய் சிந்தித்தே தெளிவாய் என்பது மகரஷியின் அறிவுரை.

- வேதம் என்னும் வேதாந்தம் என்றும் சைவ சித்தாந்தம் என்றும் சித்தர்கள் நெறி என்றும் நாம் காணுகின்ற பல்வேறு தத்துவங்களின் சாரத்தை, அறிவியலோடு கலந்து மகரிசி படைக்கும் ஆன்மீக விருந்தே வேதாத்திரியம்.
- பலத்தை தக்க வைத்துக் கொண்டு, பலவீனத்தை அகற்றுவது வேதாத்திரியம்.

“விண்டவர் கண்டிலர்” என்ற வாசகத்தை மாற்றி -கண்டதை எளிய தமிழ் நடையில் சொல்லி, சொன்னதை காணவைத்தவர்-புரிய வைத்தவர்- உணரவைத்தவர் வேதாத்திரி மகரிஷி.



இறைவனின் இன்னொரு பக்கம்தான் மனிதன் அல்லது மனிதனின் மறுபக்கமாக இருக்கும் இறைவனை தெளிவு படுத்துவதுதான் 'வேதாத்திரியம்.

வேதங்களில் கூறப்பட்டுள்ள பேருண்மைகளை எளிய மக்களும் உணர்ந்து கொள்ளும் வகையில் அறிவியல் நோக்கோடு- காரண காரியத் தொடர்புடன்- விளக்குகின்ற மகரிஷியின் புதிய நெறி “**வேதாத்திரியமாக**” மலர்ந்துள்ளது.

தவம் செய்வதற்கு பிரம்மச்சரியம் அவசியம் என்பதை மாற்றி ஒருவனுக்கு உடலும் உயிரும் இருந்தால் மட்டும் போதும் என்பதை போதிப்பது வேதாத்திரியம்

பக்தி எதையும் எடைபோடாது. ஆனால் ஞானம் எதையும்

எடைபோடாமல் விடாது. எந்த ஒன்று எல்லாவற்றிலுமே இருக்கிறதோ அந்த ஒன்றில் எல்லாமே உள்ளது. அதுதான் இறைநிலை (இறைவன்) என்ற தெளிவு

எளிய முறை தியானம் என்பது -தனக்குள்ளேயே தான் இறங்குவது. தவம் எனபது -தன்னை தனக்கு அறிமுகப்படுத்துவது.

புறத்தே அலையும் மனத்தை அகத்தே உள்ள காந்த அலைமீது குவித்து நிறுத்தி -நிலைபெறச்செய்வது. இதுவே எளிய முறை குண்டலினியோகம்.

**கிரந்த மொழியிலும், சமஸ்கிருத மொழியிலும் உள்ள வேதவாக்கியங்களுக்கு இணையான தாரக மந்திரமாகிய "வாழ்க வையகம், வாழ்க வளமுடன்**" என்ற மந்திரச் சொல் மூலம், நோயை குணமாக்கவும், எதிரியை நண்பனாக்கவும், வாடிய பயிரைப் புத்துயிர் பெறச் செய்யவும், வாழ்வில் பிணக்கு நீங்கி இணக்கமாக வாழ முடியும் என்பதை மானுடத்திற்கு உணர்த்தியவர் வேதாத்திரி மகரிஷி.

பிரம்மன் அருளியதாகச் சொல்லப்படும் பிரம்ம இரகசியம் என்ற பிரம்ம ஞானத்தை எல்லோரும் புரிந்தது கொள்ளக் கூடிய அளவில் புத்தகமாகவும் பயிற்சியாகவும் தந்தவர் வேதாத்திரி மகரிஷி.

அறிவின் மூலத்தோடு இணைவது தவம். அறிவின் வழிநடந்து கொள்வது- அறம். இறை உணர்வும் அறநெறியுமே மனிதனை மேம்படுத்தும்.

பைபிள், குரான், கீதை, மகாவீரரின் சமண சமய நூல்கள் போன்ற வேத நூல்களால்- எல்லோரும் புரிந்து கொள்ள முடியாத வாழ்வியலை, எம்மதத்தவரும் புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்கு - மனவளக்கலை என்ற நூல் மூலம்- மிகவும் எளிய முறையில் - மக்களுக்கு போதித்தவர் வேதாத்திரி மகரிஷி

சமூக ஆரோக்கியத்துக்கான வேர்களைப் பதிப்பதே வேதாத்திரியச் செயல்பாடு.

இந்த வேதாத்திரியம் தந்த வாழ்வியலைப் பயின்று தங்கள் வாழ்க்கையில் பயன்படுத்தி குடும்பத்தில் அமைதியையும் பேரின்பத்தையும் பெற்று உலக அமைதி காணலாம்.

வேதாத்திரியம் என்ற ஆன்மிகப் பார்வை, தத்துவம் மற்றும் விஞ்ஞான உண்மைகளை ஒருங்கிணைத்துக் கொண்டு, புதிய பண்பாட்டுக்கான் தளத்தை அமைக்கும் புதிய சக்தியாகும்.

## திசை காட்டும் வேதாத்திரியம்

வேதாத்திரியம் ஒரு படைப்பிலக்கியமாகவோ, பக்தி இலக்கியமாகவோ, கருத்தை திணிக்கும் கசாய இலக்கியமாகவோ இல்லாமல் ஒரு பட்டறிவு இலக்கியமாக இருக்கிறது.

வேதாத்திரியம் ஒரு தனிமனிதனின் குரல் அல்ல. ஓர் உயர்ந்த நாகரிகத்தின் ஒட்டுமொத்த தெளிவின் திரள்.

வேதாத்திரியம் ஒரு படைப்பு முயற்சி அல்ல. பரிணாம வளர்ச்சி. மிக உயர்ந்த மீமிசையே பூமிக்கு குடையாக முடியும். மிக உயர்ந்த உன்னதமே உலகுக்கு கொடையாக முடியும்.

வேதாத்திரியத்தை நாம் எதற்காக இன்றும் கொண்டாடுகிறோம். காரணம் -வேதாத்திரியம் இன்றும் தேவைப்படுகிறது.

தலைகுனியச் செய்யும் தலைப்புச் செய்திகள். தினந்தோறும் வானிலை அறிக்கை போல வாசிக்கப்படுகிற வக்கிரங்கள். சிறைவாசலில் நின்று சிரித்து கையசைக்கும் சில்லரை மற்றும் தேசிய கயவர்கள்.

குற்றங்களை விடவும் கொடுமையாய் வலிக்கிறது. குற்ற உணர்வு முற்றிலும் அற்றுப்போன அவலநிலை. சுற்றும் உலகம் சுருங்கிவிட்டது.

ஆனால் வீடும் வீதியும் விலகிச் செல்கிறது. பலவகையிலும் குழம்பிக் கிடக்கிறது வாழ்க்கை.

இருந்தாலும் குழைத்துப் போட ஒரு மருந்து கையில் இருக்கிறது. இப்போதும் இது நாட்டு மருந்து.

இந்த நாட்டு மருந்து எத்தனை ஆண்டுகாலம் ஆன பின்னாலும் - காலாவதி ஆகாத கைமருந்து.

இது மருந்தாகித் தப்பா மரம் இல்லை. மானிடம் நிலைக்க இந்த மண்ணில் என்றோ முளைத்து இன்னும் தழைக்கும் அறம்.

உலகப் பொதுமறை வேதாத்திரியம் ஏன் உலக பொதுமறை என்று சொல்கிறார்கள்.

தமிழில் மறைப்பதற்கு எதுவுமில்லை. பொது மறை என்றாலும் கூட எதிர்மறை தான்.

உண்மையில் பொதுமறை என்பதே பொருத்தமற்றது. பொதுவான எதுவும் மறையாக, அதாவது மறைவாக இருக்கமுடியாது.

மறை என்ற சொல்லின் பொருளும் சொற்பொருள் ஆக்கமும் மறைதல், மறைத்தல், ஒளிதல், ஒளித்தல், கமுக்கம், ரகசியம் என்ற அடிப்படைகளில் உருவாகி நிலை பெற்றது.

வெளிப்படையான, சமயச்சார்பற்ற வேதாத்திரியத்தை பொதுமறை என்பதற்கு பதிலாக உலகப்பொதுமறை என்று அழைப்பதே முறையாக இருக்கும்.

எனவே வேதாத்திரியத்தை உலகப்பொதுமுறை என அழைப்பதே பொருத்தம்.

திசைகாட்டும் கருவி திசைகளின் தேர்வு தெளிவாய் இருந்தால்

வழிகள் பிறக்கும்; வாசல்கள் திறக்கும். வழிகாட்டிகள் உடன் வருபவர்கள் அவர்கள் யோசிக்க விடுவதில்லை.

ஆனால்– திசைகாட்டும் கருவி தீர்க்கமானது. தெற்கு வடக்கை தெரிவிக்கும். தேர்ந்தெடுக்கவேண்டியது நாம் தான். திசை என்பது திக்கு.

வேதாத்திரியம் காட்டும் திசை தெளிவானது. தீர்க்கமானது.அறத்தின் திசையாகவும் வேதாத்திரியம் உள்ளது.

அறம் நோக்கமாகவும், பயன்பாடாகவும், வழிமுறையாகவும் இருக்கிறது. அறநோக்கம், அறவழி, அறப்பயன். அதுவே அறத்தை பொருளை, இன்பத்தை வழி நடத்துகிறது.

பிறர்க்கோ தனக்கோ தற்காலத்திலோ பிற்காலத்திலோ அறிவிற்கோ உடல் உணர்ச்சிக்கோ துன்பம் எழாத அளவோடும் முறையோடும் வாழ்க்கையைத் துய்க்கின்ற ஒழுக்கமும், முறையோடும் வாழ்க்கையைத் துய்க்கின்ற ஒழுக்கமும, பிறர்க்கு ஒத்துதவி வாழ்கின்ற ஈகையயும், தனது உழைப்பைக் கொண்டே தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்ற கடமையும் இணைந்த தொகுப்புக் கருத்து அறம் ஆகும்.

ஏரி, குளம், கிணறு, ஆறு எல்லாம் நிரம்பி வழிய. மாரி அளவாய் பொழிக. மக்கள் வளமாய் வாழ்க, நீர்பொருளாதாரத்தை உலகிற்கே முதலில் அறிமுகப்படுத்தியது வேதாத்திரியம் தான்.

வாழ்வின் ஒவ்வொரு பகுதியையும் வேதாத்திரியம் தெளிவுபடுத்துகிறது.

மகரிஷியின் அறம், சமயம் சாராத அறம். இடம், காலம், வலிமை சார்ந்த நடைமுறை அறம். மனித வளத்தில் முதலீடு செய்யும் முதல் அறநூல்.

வேதாத்திரியம் காட்டும் அடிப்படைத் திசை அறம். அந்த அடிப்படைக்கு அடிப்படையாய் –அடையாளம் பெறுவது மனச்சான்று.

அச்சம் சார்ந்த அறம் அறமல்ல. பயன், புகழ் நோக்கும் அறம் உண்மையில் அறம் அல்ல. மனநலம் காக்க மருந்தொன்று உண்டு என்றால் அது தினம் ஒரு வேதாத்திரியம் படித்து உணர்வது தான்.

## 6.வேண்டத்தக்கது அறிவோய் நீ

நம் பிரார்த்தனை என்னவாக இருக்க வேண்டும்?

கார் வாங்க பணம் வேண்டும், வீடு வாங்க வேண்டும், பதவி உயர்வு வேண்டும், ...- இப்படியா?

"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும்
பொய்மை பேசா திருக்க வேண்டும்........."

இப்படியா? இப்படிக்கேட்போர் நம்மில் எத்தனை பேர்?

மாணிக்கவாசகர் கேட்கிறார்–

"வேண்டத்தக்கது அறிவோய் நீ;
வேண்ட முழுதும் தருவோய் நீ என."

பிறவிக்குக்காரணமான வினைகள் தீர வேண்டும் என்பது தான் சரியான வேண்டுதல்.!

திருக்குறள் உள்பட பல நூல்கள் பிறவிப் பிணியைப் பற்றிப் பேசுகின்றன.

தேவாரத்தில்,

செடியுடைய வல்வினைநோய் தீர்ப்பாய்:
(செடி-துன்பம்). துன்பத்தை உடைய/உண்டாக்குகின்ற வல்வினைகளைத்தீர்ப்பாய் என்று கேட்கிறார் அப்பர் பெருமான்.

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்
அடியாரும் வானவரு மரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே!

செடியாய = செடியைப்போல.

செடி வெட்டினால் திரும்ப வேரூன்றுவதைப்போல பிறவி வரக்காரணமான வல்வினைகள், திரும்ப திரும்ப முளைக்கின்றன.

அத்தகைய வல்வினைகளைத்தீர்க்கும் திருமால் என்கிறார் குலசேகர ஆழ்வார்.



செடியாய என்று ஆழ்வாரும், செடியுடைய என்று அப்பர் பெருமானும், சொல்லுகிற வல்வினை நோய் தீரவேண்டும்;செல்கதிக்கு காட்ட வேண்டும் என்றும் நம் வேண்டுதல் இருக்க வேண்டும்.

இப்படி வேண்டுவோரின் நெஞ்சினுள்ளே இறைவனைக்காணலாம் என்கிறார் அப்பர் பெருமான்.

சடங்குகள் கூடிய வழிபாடு என்று எதுவும் தினசரி வாழ்வில் இல்லை.

விளக்கேற்றிப் பூ வைப்பது தவிர. நல்ல வாசனையான பூவும், பளிச்சென்று இருக்கும் விளக்கில் ஏற்றும் தீபமே

‘சித்திரைபிறக்கும்போது தொங்கவிடும் நெற்கதிரும், கொன்றைமலர் செண்டும் போல் நிறைவு தருகிறது.

பண்டிகைகள் பொறுத்த மட்டில் காரணங்களைக் காட்டிலும் அவை நம்மை நம் பண்பாட்டுடன் இணைக்கும் கண்ணிகளாக நினைத்துக் கொண்டாடுகிறோம். குறிப்பாகப் பொங்கல்.

ஆனால் நேர்த்திக் கடன்கள், ஜோதிடர்கள் சொல்லும் பரிகாரங்கள், குறிப்பாக சில கோயில்களுக்கு சென்று வர சொல்வது போன்றவை பற்றி மாணிக்கவாசகரிடம் கேளுங்கள். அவர் சொல்கிறார்----

வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ”

என்ற திருவாசகம் மனதுக்கு நெருக்கமாக இருக்கிறதே. சடங்குகளிடம் இருந்து வந்து சேரும் இடமா இந்த திருவாசக வரிகள்?

கோயிலாவது ஏதடா? குளங்களாவது ஏதடா?
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே!
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே!

என்ற சித்தர் பாடலில் உள்ள [illegible] ([illegible] [illegible] [illegible]) சொல்ல வருவது என்ன?

வேண்டதக்கது அறியோய் நீ!

வேண்ட முழுதும் தருவோய் நீ!
வேண்டும் அயன்மாற்கு அறியோய் நீ!

வேண்டி என்னைப் பணி கொண்டாய்!
வேண்டி நீ யாது அருள்செய்தாய்

யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்,

அதுவும் உந்தன் விருப்பன்றே!




**திருவாசகம்-குழைத்த பத்தில்**, உள்ள இப்பாடல், உண்மையான பக்தியுடையோர், இறைவன், எதைத் தந்தாலும், அதை விருப்பத்தோடு, ஏற்றுக்கொள்ளும் தெளிவான மன நிலையைக்கொண்டிருப்பர் என்பதை தெளிவுபடுத்துகிறது

உண்மை பக்தி, இறைவன், சொல்லின்படி நடப்பது. இறைவன், நாம், வேண்டும்,எதையும், முழுதாய், தரும், கருணை வடிவானவர்.

ஆதலால், வேண்டத்தகாதவற்றை வேண்டினாலும், தருபவர். ஆனால், இறைவனிடத்தில், உண்மை அடியவர், இறைவன், தரும், **எதையும், ஏற்றுக்கொள்வர்**.

இறைவன், மாணிக்க வாசகருக்கும், மற்ற நாயன்மாருக்கும், துன்பம், தந்த போதும், அவர்கள், பக்தி நிலையில் இருந்து மாறவில்லை.

'இடரினும் தளரினும், எனதுறு நோய் தொடரினும், உனகழல், தொழுதெழுவேன்' சம்பந்தரின் பதிகம், ஒப்பு நோக்கத் தக்கது.

செயலுக்குத்தக்கபடி தான் இறைவன் கொடுப்பான் மகரிஷி

எந்தத் தேவையுமற்ற இறைவனிடம் நமது தேவைகளை முறையிடுவது தான் பிரார்த்தனை என்ற அடிப்படையைக் கூட அதிகமான மக்கள் விளங்காமல் உள்ளனர்.

தாங்களாகவே செய்து கொண்ட கற்சிலைகளிடமும், இறந்து விட்ட பெரியார்களின் சமாதிகளிலும் போய் பிரார்த்திக்கின்றனர்.

இதற்குக் காரணம், இறைவனின் பண்புகளைப் பற்றியும், அவனது வல்லமை பற்றியும் அறியாமல் இருப்பது தான்.

எனவே இறைவனின் பண்புகளை எடுத்துக் காட்டி, அவனிடம் மட்டுமே பிரார்த்திக்க வேண்டும் என்பதை விளக்குவதுடன், இறைவனிடம் நமது பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் அதற்கான நிபந்தனைகள் என்ன? அதற்கு இடைத்தரகர்கள் தேவையா?

## ஆண்டவன் கணக்கு – வேதாத்திரி மகரிஷி

ஆண்டவனைக் கேட்டு இனிமேல் எதுவும் வாங்கிட முடியும் என்று நீங்கள் கணக்குப் போட்டால் அவன் ஏமாந்தவன் அல்ல.

நீங்கள் செய்து விட்டு கணக்குப் பார்த்து, எனக்கு இவ்வளவு கூலி கொடுக்க வேண்டும் என்று கேட்டாலும் கூட கணக்கு சரியாக வராது.

முன்பு, பின்பு செய்திருந்தால் கூட செயல் பாக்கி இருந்தால் பிடித்துக் கொள்வான்.

அவனிடம் ஒரு நியதி இருக்கிறது. நீங்கள் என்ன செய்தீர்களோ அந்தச் செயலின் விளைவாக, நல்லதையோ, கெட்டதையோ உங்கள் நோக்கத்திற்கு தக்கவாறு, செய்யும் திறனுக்குத் தக்கவாறு, அவன் செயல் விளைவாக தருவான்.

நீங்கள் நல்ல நோக்கத்தோடு நல்ல முறையில் செய்தால், செய்த செயலின் விளைவு எல்லாம் நல்ல விளைவாகவே இருக்கும்.

அது தான் அவன் கொடுக்கக் கூடிய வரம் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்த இடத்தில், நல்ல செயலையே செய்தோமானால் எல்லாமே நலம் விளையும் என்கின்ற பொழுது சமுதாயத்திற்கு நலம் தர வேண்டும் என்பது ஒன்று ஆயிற்று;

கடமை செய்கின்றோம் என்பது ஒன்று ஆயிற்று. இரண்டாவதாக நல்லதையே ஒவ்வொரு செயலிலும் செய்து கொண்டே வந்தால் இறைவனுடைய ஆற்றலை நாம் காணக்கூடிய அளவுக்கு ஒரு விழிப்பு நிலை வந்துவிடுகிறது.

பிறகு நாம் இறைவனைத் தேடிக் கொண்டோ அல்லது போற்றிக் கொண்டோ இருக்க வேண்டியதில்லை.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு செயலிலும், ஒவ்வொரு இயக்கத்திலும் அவனுடைய இருப்பைக் கண்டுகொள்ளலாம்.

ஆக இறைவனை உணர்ந்து கொள்வது என்பது சமுதாயத்திற்கு நலம் தருவதாகும். இந்த இரண்டும் தான் எல்லா மதங்களுடைய அடிப்படையான நோக்கம்.

இந்த அடிப்படையான நோக்கம் வெற்றிபெற வேண்டுமானால் ஒவ்வொருவரும் நல்ல செயலை செய்வதற்குப் பழகிக் கொள்ள வேண்டும்;

அதன்பிறகு செய்து பலன் காண வேண்டும். மற்றவர்களுக்கும் அதைப் பரப்ப வேண்டும். –

இறையாற்றலின் தன்மைகளையும், சிறப்புகளையும் அறியாமலோ, அலட்சியம் செய்தோ, உணர்ச்சி வயத்தால் தன் முனைப்பு கொண்டோ அளவு மீறியும், முறை மாறியும் மன ஆற்றல் செயல் புரியும் போது, அச்செயலுக்கேற்ப ஏற்படும் துல்லியமான விளைவுகள்தாம் செயல் விளைவு நீதி என்று வழங்கப்படுகிறது.

சிறிதளவும் தவறாமலும் பிழையில்லாமலும், அன்பும் கருணையுமே இயல்பாக அமைந்துள்ள இறைநிலையானது சீவன்களிலிருந்து எழும் செயல்களுக்குத் தக்கபடி அளிக்கின்ற இவ்விளைவுதான் கூர்தலறம் என்று மொழி வழியே தமிழில் கூறப்படுகின்றது. இதுவேதான் இறைநீதியாகும் .

## தப்புக் கணக்கிட்டுத் தானொன்றை எதிர்பார்த்தால்

ஒப்புமோ இயற்கை விதி? ஒழுங்கமைப்பிற்கேற்றபடி
அப்போதைக்கப்போதே அளிக்கும் சரிவிளைவு
எப்போதும் கவலையுற்று இடர்படுவார் இதையுணரார்.(ஞாக.பா.)

## செயல்விளைவு என்ற இயற்கை நியதி.

இது சிறிது கூட மாறவே மாறாது. அந்தக் கணக்குப் பிசகவே பிசகாது. துல்லியமாகக் கணக்கு தவறாது,

எந்த விதத்திலும் பிசகாதது எதுவோ அது தான் இயற்கையின் நியதி.

இறையாற்றல் எனும் இயற்கையின் தன்மைகளை, சிறப்புகளை அறியாமலோ, அலட்சியப்படுத்தியோ, உணர்ச்சிவயத்தால் தன்முனைப்பு கொண்டோ, அளவு மீறியும் முறை மாறியும் செயல் புரியும் போது, அச்செயலுக்கேற்ப ஏற்படும் துல்லியமான விளைவு செயல் விளைவு நீதி .

இது சிறிதளவு கூடத் தவறாமலும் பிழையில்லாமலும் நடைபெறுவதாகும்.

எனவே விளைவறிந்து இன்பம் நல்கும் செயல்களையேஆற்ற வேண்டியது நமது கடமையாகும்.

## <u>வினை விதைத்தவருக்கு வினையே பலன் </u> – **மகரிஷி**

இறைநிலை அவரவைகளுடைய வினைக்கு தகுந்தவாறு விளைவை கொடுத்துக் கொண்டே இருக்கிறது.

அவரவர் செயலாலேயே அவரவர்க்கு இன்பமோ, துன்பமோ, இலாபமோ, வெற்றியோ விளைகின்றன.

இன்ப துன்ப விளைவுகள் என்ற வினை விளைவு நீதியை இறைநிலை எப்போதும் உணர்த்திக் கொண்டிருக்கிறது.

இதனையே “வினை விதைத்தவன் வினையை அறுப்பான் “ என்று கூறுகின்றனர்.

இயேசுநாதரைக் கைது செய்த போது , அவரது சீடர் பேதுரு என்பவர் தனது வாளை உருவிக் கொண்டு கைது செய்தவர்களைத் தாக்கப் புறப்பட்டார் .

அப்போது இயேசு அவரைக் கையமர்த்தி “ நீ உன் உறையுள் இடு . ஏனெனில் வாளை வீசுகிற எல்லோரும் வாளினாலேயே மடிவார்கள்” என்றார் .

இறைநிலையின் பேரறிவினுடைய திறனை விளக்குகின்ற செயல் விளைவு என்னும் ஓர் அற்புத நாடகத்தை உணராமல் செயலாற்றினால், அதன் காரணமாக உடல் நோயோ, மன நோயோ உண்டாகின்றன .

மனித வாழ்வில் அவரவர் விருப்பம் போல் செயல் புரியலாம் என்ற கருத்துக்கு இடம் இல்லை .

சமுதாயத்தால் உருவாக்கப்பட்டு காக்கப்படும் மனிதன் மற்றவர்களுடைய தேவைக்கும், விருப்பத்துக்கும், அறிவிற்கும், மதிப்பளித்து தனது வாழ்வை நடத்த வேண்டியது அவரவர் கடமை.

அதற்காகத் தனது செயல்களைப் பிறருக்குத் தீமை தராத **முறையில் செயலாற்ற வேண்டும்** .

## 7. ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதி

மாணிக்கவாசகர் இறைவனது இலக்கணத்தை திருப்பாவையில் பாடுகிறார்.

“ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்

சோதியை யாம்பாடக் கேட்டேயும் .. . . . .”

ஆதி என்றால் காரணம் என்று பொருள். உலக உற்பத்திக்கு காரணமானவன் என்று பொருள். வள்ளுவரும் “ஆதி பகவன் முதலே உலகு” என்றார்.

தன்னை அறிந்த பொழுது. அறிவின் பூரணம் பெற்று விட்டபொழுது, அதை “வீடுபேறு” என்று சொல்லுவார்கள்.

வீடு என்றால் இடம் என்று பொருள். இடம் என்றால் எது இடம்? இப்பொழுது நாம் உட்கார்ந்து இருக்கின்றோம், நமக்குத் தரையானது இடமாக இருக்கிறது.

இந்தத் தரைக்கு எது இடம்? இந்த உலக உருண்டைதான் இடம். இந்தப்பூமிக்கு எது இடம்? ஆகாசம் தான் இடம்.

ஆகாசமாக உள்ள இந்தப் பேரியக்க மண்டலத்தில் பலகோடி உருவங்கள், கிரகங்கள், சூரியன், சந்திரன் எல்லாமே இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இவற்றிற்கெல்லாம் இடம் எது என்று பார்க்கின்ற பொழுது, அதுதான் “சுத்தவெளி” .

ஓர் ஆழ்வார் “ஆழ்ந்து அகன்று ஓங்கி உயர்ந்த முடிவில் வெறும் பாழேயோ” என்று கடவுளைக் குறித்துப் பாடினார்.

கீழே போனாலும் சரி, பக்கவாட்டிலே போனாலும் சரி, எந்தப் பக்கம் போனாலும், இந்தப் பிரபஞ்சம் முழுவதும் எதில் இருந்து கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறது?

அதற்கு அப்பாலும் விரிந்து போனால் என்ன இருக்கும்? ஆழ்ந்து, அகன்று, ஓங்கி உயர்ந்து முடிவில் வெறும் பாழ். அதுதான் இந்தப் பிரபஞ்சம் முழுமைக்கும் “வீடு”. அனைத்திற்கும் “வீடு” அதுதான். அனைவருக்கும் “வீடு”.

துணைக்கரு அணு (□□□□□□) எனப் பேசப்படுகிறது.

உதாரணமாக ஒரு குடும்பத்தில் மூன்று ஆண்கள் மூன்று பெண்கள் உள்ளனர் என்று வைத்துக் கொள்வோம்.

அந்த ஆண்களில் ஒருவரைப் பேரன் என்றும், மற்றவரைத் தந்தை என்றும், மூன்றாமவரை தாத்தா என்றும் சொல்கிறோம்.

அதே போன்று பெண் வரிசையில் பேத்தி, அன்னை, பாட்டி என்று கூறுகிறோம்.

ஒப்பிட்டு நோக்கும்போது ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடையே பரிணாமத்தால் உள்ள வேறுபாடு, உறவு, சிறப்பு இவைகளைக் கொண்டு தான் பெயர்கள் வேறு வேறாகக் கொடுக்கிறோம்.

மனிதன் என்ற நிலையில் எல்லோரும் ஒன்றே. இது போன்றே ஆகாசமெனும் பரமாணு, பரிணாமத்தால் அடைந்த பல்வேறு தன்மைகளை ஒப்பிட்டு நோக்கும் அறிவு, பெயர்களை பலவாக ஆக்குகிறது. இது பிரித்து உணர்வதற்கு எளிதாக உள்ளது.

இந்தப் பகுத்துணரும் ஒப்புவமை நோக்கு (□□□□□□□□ □□□□□□□) புலன்களால் விளைந்த சிறப்பாகும்.

புலன்களை கடந்து நிற்கும் திறன் பெற்ற ஆறாவது அறிவு இவை அனைத்தையும் தொகுத்துணரும் போது பெறப்படும் உண்மை எல்லாமே ஒரு பொருள் என்பதாகும்.

அதுவே பொருள் நிலையில் ஒன்றாகவும், நிகழ்ச்சி நிலையில் வேறுவேறாகவும் உணரப் பெறுகின்றது என்பது விளங்கும்.

## மனித சரித்திரம்

நமக்கு உள்ளும் புறமுமாக எங்கும் நீக்கமற நிறைந்திருப்பதே வெட்டவெளியே.

வள்ளலார் கூறும் “அருட்பெருஞ்சோதியும்,” மாணிக்கவாசகர் கூறும் “ஆதியும் அந்தமுமில்லாத அருட்பெருஞ்சோதியும்” இப்பெருவெளியே என்று உணர்த்திய பெருமை வேதாத்திரி மகரிஷியையேச் சேரும்.

ஆதி என்னும் பரம்பொருள் தன்னிறுக்கச் சூழ்தழுத்தும் ஆற்றலால், தன்னைத் கொண்டே தானாகவே அடைந்த தன்மாற்றமே இப்பிரபஞ்சம்.

இது வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்னும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியாகும்.

பேரறிவு உள்ள வெளி அடைந்த முதல் தன்மாற்றமே் இறைத்துகள். இறைத்துகள்கிள்ன கூட்டு ஆகாஷ்துகள் அல்லது விண்.

ஆகாஷ்துகளின் கூட்டு இரசாயன அணுக்கள், அணுக்களின் கூட்டு மூலகங்கள், மூலகங்கள் கூட்டு பருப்பொருள்கள்.

நம் கையில் கட்டியிருக்கும் கடிகாரம் ஒரு பருப்பொருள். மூலகங்களின் கூட்டு.

மூலகங்களோ அணுக்களின் கூட்டு. அணுவோ, ஆகாஸ் துகளின் கூட்டு.

ஆகாஷ் துகளோ இறைத்துகள்களின் கூட்டு. இறைத் துகளோ வெளியின் ஒரு பகுதி.

வெளிதானே தெய்வம். எனவே கடிகாரம் என்பது தெய்வத்தின் வெளிப்பாடுதானே. கடிகாரம் மட்டுமல்ல. நாம் பார்க்கின்ற ஒவ்வொரு பொருளும் தெய்வத்தின் வெளிப்பாடுதான்.

இதைத்தான் பாரதியார் சொன்னார். எழுத்தும் தெய்வம் எழுதுகோலும் தெய்வம் என்று.

எனவே நாம் பார்க்கின்ற அனைத்துப் பொருள்களும் சுத்தவெளியினால் செய்யப்பட்டவையே.

புல்லாய், பூவாய், விலங்காய், மனிதனாய் ஆனது வெளியே. இதைத்தான் மாணிக்கவாசகர்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"

என்கிறார். இராமலிங்க வள்ளலாரும்,

"வானிடைக் காற்றும் காற்றி நெருப்பும்
ஆன்ற வகுத்த அருட்பெருஞ்ஜோதி"

என்று அனைத்தும் அருட்பெருஞ்சோதியினால் (தெய்வம்) ஆனது என்கிறார்.

"ஜோதி ஜோதி ஜோதி ஜோதி
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்"

என்று கூறுவதன் மூலம் ஜோதியே சுயமாகவும், பரமாகவும், அருளாகவும், சிவமாகவம் நீக்கமற நிறைந்துள்ளதாக பாடி பரவசமடைகிறார் வள்ளலார்.

## திருவாசகத்தில் ஜோதி (42 இடங்கள்)

1. மாசற்ற ஜோதி மலர்ந்த மலர்ச்சடரே 1-62
2. ஜோதியனே, துன்இருளே தோன்றாப் பெருமையனே 1-72
3. தூண்டு ஜோதி தோற்றிய தொன்மையும் 2-74
4. கருஆர் ஜோதியில் கரந்த கள்ளமும் 2-55
5. தூயமேனி, சடர் விடு ஜோதி 2-112
6. அருக்கனில் ஜோதி அமைத்தோன் 3-20

7. பரம்பரம் ஜோதிபட பரனே போற்றி 4-222
8. பரஞ் ஜோதி 88
9. ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் ஜோதியை 155
10. பாசம் பரஞ் ஜோதிக்கு என்பாய் 156
11. கேழில் பரஞ் ஜோதி கேழில் பரங்கருணை 162
12. ஜோதி திறம்பாடி, சூழ்கொன்றைத்தார் பாடி 168
13. ஜோதியுமாய் இருள் ஆயினார்க்கு 214
14. மாஏறு ஜோதியும் வானவரும் தாம்அறியா 215
15. பவமாயம் காத்து என்னை ஆண்டுகொண்ட பரஞ்ஜோதி 238
16. பத்திக் கடலுள் பதித்த பரஞ்ஜோதி 246
17. தங்குலவு ஜோதித் தனிஉருவம் வந்தருவி 335
18. ஜோதி மணிமுடி 346
19. என் உள் எழு பரஞ்ஜோதி 386
20. என் மனத்துள்ளே எழுகன்ற ஜோதியே 391
21. ஆனந்தமாக்கும் என் ஜோதி 393
22. ஜோதியாய் தோன்றும் உருவமே 394
23. பாரோர் விண்ணோர் பரவிஏத்தும் பரனே பரஞ்ஜோதி 422
24. கடிஆர் ஜோதி கண்டு கொண்டு 424
25. முத்து மாமணி மாணிக்க வயிரத்த பவளத்தில் முழுச்ஜோதி 432
26. எழுதரு சுடர்ச்ஜோதி 433
27. ஜோதியே! சுடரே! சூழ்ஒளி விளக்கே! 456
28. இருள் நீங்க ஜோதி இனித்தான் துணியாயே 489
29. கதிரை மறைத்தன்ன ஜோதி 525
30. ஈண்டிய மாயா இருள்கெட எப்பொருளும் விளங்கத் தூண்டிய ஜோதியை 529
31. துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம் தொடக்கெலாம் அறுத்த நற்ஜோதி 543
32. பரஞ்ஜோதி, பசுபதீ! 555
33. யாவர் ஆயினும் அன்பர் அன்றி அறிஒணா மலர்ச் ஜோதியான் 577
34. பொய்தனை ஒழிவித்திடும் எழில்கொள் ஜோதி 584
35. முத்தனை முதலா் ஜோதியை முக்கண் அப்பனை 586
36. மறை பயின்ற வாசகன் மாமலர் மேஜோதி 587
37. ஒளிவளர் ஜோதி எம் ஈசன் 593

38.தூவெள்ளை நீறணி எம்பெருமான் ஜோதி மயேந்திரநாதன் 595
39. மெய்யடியார்க்கு அருள்துறை அளிக்கும் ஜோதியை 602
40. இன்பம்பெருக்கி இருள் அகற்றி எஞ்ஞான்றும் துன்பம் தொடர்வறுத்துச் ஜோதியாய் 625
41.துண்ணென என்உளம் மன்னியஜோதி 639
42. அரிய பரஞ்ஜோதீ 647

**ஜோதி என்றால் என்ன?** விடையாக வருகிறார் மகரிஷி.

உண்மையான சிவம் வெட்டவெளிதான் (சுத்தவெளி) என்றால், அது எல்லாவற்றிலும் ஊடுருவிப் பாயக் கூடியது.

அது வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்கின்ற நான்கு தன்மையும் உடையதாக இருக்கிறது.

அதை வைத்து நீங்கள் எந்தக் கணக்கு வேண்டுமானாலும் போடுங்கள். ஆனால் தாயுமானவர் “அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்” என்ற வார்த்தைகளில் விளக்கினார்.

பிரகாசம் என்பதை ஜோதி என்று அந்தக் காலத்தில் சொன்னார்கள். அறிவைக் குறிப்பதற்காகத்தான் அந்த வார்த்தையையே போட்டிருந்தார்கள்.

ஜோதி என்றாலும், விளக்கு என்றாலும் ஒன்றே. “விளக்கம்” என்பதிலிருந்துதான் “விளக்கு” என்ற வார்த்தையே வந்திருக்கிறது.

விளக்குவதுதான் அறிவு. அதனால், அந்த அறிவை “சுடர்” என்றும், ஜோதி என்றும், விளக்கு என்றும் சொல்வார்கள்.

வள்ளலார் கூட ஜோதி என்று அறிவைத்தான் சொல்கிறார். இறைநிலை அறிவாக இருப்பதானால், அது ஜோதி வடிவமானது என்று சொல்கிறார்கள்.

அந்த முறையில் இறைநிலையை உணர்ந்து கொண்டீர்களானால், அதிலிருந்துதான் செயல்விளைவு தத்துவத்திற்கு வரலாம்.

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் இருப்பதனால், அது எல்லோருள்ளும் இருக்கிறது.

அதனால்தான் எல்லோர் செயலையும் கண்காணிப்பதற்கு அதனால் சுலபமாக முடிகிறது.

உங்களுக்குள்ளேயே உள்ளதால், செயலுக்குத் தக்க விளைவை நீங்களே பெற்றுக் கொள்கிறீர்கள் என்கிறார் வேதாத்திரி மகரிஷி.

மாணிக்கவாசகர் சொன்னதை விளக்கமாகச் சொன்னார் மகரிஷி.

பிரபஞ்சத்தின் காரணப் பொருளாகவும் காரண கர்த்தாகவும் இருப்பது பேரறிவு மற்றும் பேராற்றலுமான சுத்தவெளியே என்ற மாபெரும் உண்மையை மானுடத்திற்கு தந்தவர் நமது அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியே.

வாழையடி வாழையென வந்த சித்தர் மரபில் வந்தவர்களே மாணிக்கவாசககரும் மகரிசியும்.

மாணிக்கவாசகரின் கருத்தினை உள்வாங்கி , அதோடு விஞ்ஞானத்தையும் சேர்த்து, மகரிஷி உலகெங்கும் உள்ள மக்களின் இதயத்தை தமது புத்தம்புது கருத்துக்களால் தொட்டார்.

## 8. மாயை மதித்து வகுத்த மயக்கறு மாகாதே

மாயை என்றால் என்ன? மாயைப் பற்றிய ஆத்ம சாதகன் அறிந்து கொள்வது அவசியம்.

மயக்கம் என்று சாதாரணமாகப் பொருள் கொள்ளலாம். உள்ளதை சாதாரணமாகத் தெரிந்து கொள்ளாத கற்பனையிலேயே இருப்பது மாயை.

மாயை என்ற சொல்லை மாணிக்கவாசகர் பத்தொன்பது தடவை தம் திருவாசகத்தில் எடுத்தாண்டிருக்கிறார்.

வேதாந்தத்தில் மாயை என்றொரு வார்த்தையை அடிக்கடி சொல்வதுண்டு.

வேதாந்தத்தில் மாயா தத்துவம் முக்கியமான இடம் பெற்றிருக்கிறது.

சமய சாஸ்திரம் எதுவும் இக்கோட்பாட்டைப் புறக்கணிக்க முடியாது.

இச்சொல்லை கையாண்டவர்கள் கையாளாதவர்கள் ஆகிய எல்லோருமே இதன் உட்பொருளை ஏற்றிருக்கின்றனர்.

உலகில் உள்ள எல்லா மதங்களிலும் இது இடம் பெற்றிருக்கிறது. இக்கோட்பாட்டை ஏதேனும் ஒரு விதத்தில் விளக்காத சமயம் உண்மையான சமயம் ஆகாது.

மாயா என்ற சமஸ்கிருத சொல்லிலே அதன் அர்த்தம் அடங்கியிருக்கிறது.

யா = யாதொன்று, மா = ஒரு சணத்துக்கு முன்பு இருந்தது போன்று பின்பு இல்லையோ, ஸா = அது, மாயா = மாயை.

- ஓயாது மாறியமையும் தன்மை எதனிடத்திருக்கிறதோ அது மாயை.
- ஆக, மாயை என்பது பிரபஞ்சம். அது ஓயாது தன் வடிவத்தை மாற்றியமைத்துக் கொண்டிருக்கிறது. நிலைபேறு ஒன்றையும் அதனிடத்துக் காணமுடியாது.
- இவ்வுலகம் மாயை. இதில் நாம் வசித்திருப்பது மாயை. நாம் பிறப்பது, வளர்வது, வாழ்ந்திருப்பது, தேய்வதும். மாய்வது ஆகிய எல்லாம் மாயை.
- நாம் முன்னேற்றம் அடைவது அல்லது பின்னோக்கி செல்வது ஆகியவைகளும் மாயை.
- உலகம் தோன்றி வந்து நிலை பெற்றிருக்கிறது. அது மாயை.
- நாளைக்கு உலகம் தேய்ந்து மறைந்து போகிறது. அது மாயை.

- அண்டகோடிகள் அனைத்துமாயிருப்பது மாயை. சிற்றுயிர்கள் பேரூயிராய்ப் பரிணமித்து வருவது மாயை.
- உயிர்கள் பந்த பாசத்தில் திருப்தியடைந்து உழல்வது மாயை. அவைகள் முக்திக்கு முயல்வது மாயை.
- பின்பு அவைகள் முக்தியடைவதும் மாயை அல்லது இயற்கையின் செயல்.

காலமாகத் திகழ்வது மாயை. ஏனென்றால் காலச்சக்கரம் ஓயாது சுழன்று ஓடிக்கொண்டிருக்கிறது. அது ஒரே பாங்கில் இருப்பதில்லை.

சொரூபத்தில் தன்னை மாற்றி மாற்றிக் காண்பித்து வருகிறது காலம். அது ஒரு மூர்த்தியாக வடிவெடுத்திருந்து அனைத்தையும் விழுங்கி வருகிறது. கடைசியில் தானும் நாசமடைகிறது.

தேசம் அல்லது இடமாக இலங்குவது மாயை. அளப்பரிய அண்டங்கள் இடத்தில் இடம் பெற்றிருக்கின்றன. பிறகு இடத்தில் அவைகள் ஒடுங்கி, அந்த இடமும் இல்லாது பிரளயத்தில் ஒடுங்குகிறது.

- வர்த்தமானம் அல்லது காரண காரியமாகிய செயல்களாக வடிவெடுத்திருப்பது மாயை.
- கடக்க முடியாத கர்மமாய் இருப்பது மாயை. ஆக, கால-தேச-வர்த்தமானம் என்னும் மூன்று வித ஜாலவித்தையாக விளங்கிக் கொண்டிருப்பது மாயை.
- மனிதனிடத்து மனதாய் மிளர்வது மாயை.

இந்த மனதை ஒரு தலைத்தரமான ஜாலவித்தைக்காரன் என்று சொல்ல வேண்டும்.

எனென்றால் மனது தோற்றத்துக்கு வரும்போது மனிதன் பிரபஞ்சத்தைக் காண்கிறான்.

அயர்ந்த உறக்கத்தில் மனது ஒடுங்கும்போது மனிதனுக்கு உலகமும் இல்லாது மறைகிறது. அவனுக்கு உலகம் இருப்பது முற்றிலும் மனதைப் பொறுத்ததாம்.

மற்றுமொரு மாயவித்தையை மனது பண்ணுகிறது. கனவில் தனக்குள்ளேயே அது ஒரு உலகை உண்டு பண்ணுகிறது.

அது அமைத்துக் கொண்ட உலகக்கு ஒப்பப் புறத்தில் ஒன்றுமில்லை. இல்லாததை இருப்பது போன்று மனது காட்டிக் கொடுக்கிறது.

இதை முன்னிட்டே உலகம் ஓர் இந்திர ஜாலம் என்று அறிஞர் இயம்புகின்றனர்.

மாயையின் தோற்றங்கள் அனைத்துக்கும் இகம் என்று பெயர். இதற்கு அப்பால் இருக்கும் பெருநிலைக்குப் பரம் என்று பெயர்.

இகம் பரம் ஆகிய இரண்டும் பரவஸ்துவில் இடம்பெற்றிருக்கின்றன. திரையில் படம் தென்படுவது போன்றும் பரவஸ்துவில் பிரபஞ்சம் என்னும் மாயை தென்பட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த மாயையில் கட்டுண்டு கிடப்பது வாழ்க்கையின் குறிக்கோள் அன்று.

பரமனைச் சார்நத்திருந்து மாயையைக் கடந்து அப்பால் போவது குறிக்கோள் என்று சமயங்கள் வெவ்வேறு விதங்களில் விளக்கியிருக்கின்றன.

விளக்கங்களில் உள்ள வேறுபாடுகள் முக்கியமானவைகளல்ல. மாயைக்கு அதீதத்தில் இருக்கும் பரமனை அடைவதே முக்கியமானதாகும்.

பிரபஞ்சம் மாயை என்னும் கோட்பாடு எல்லா மதங்களுக்கும் ஒப்ப முடிந்தது. இனி, மாயைக்கு அப்பால் என்ன இருக்கிறது என்னும் கேள்வி எழுகிறது.

அதைப்பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்கிறது புத்தமதம். தெரியாமையினால் தனக்கு இழுக்கு ஒன்றுமில்லை.

தான் கையாளுகிகற சமய சாதனங்களுக்கு இடைஞ்சல் ஒன்றுமில்லை என்கிறது புத்தமதம். ஆதலால் அதன் கொள்கை அக்ஞேய வாதம் எனப்படுகிறது.

மாயைக்கு அப்பால் ஒன்றுமில்லை, வெறும் சூனியம் என்கின்றன லோகாயத மதமும் சார்வாகிய மதமும்.

ஆதலால் இந்த மூன்று மதங்களும் மாயா வாதத்தை அடிப்படையாகக் கொண்டவைகள்.

மாயைக்கு அப்பால் பரம்பொருள் ஒன்று உண்டு என்று நம்புகிற மதங்களெல்லாம் பிரம்ம வாதத்தை அடிப்படையாகக் கொண்டவைகள்.

வைதிக மதங்கள் ஆறும் பிரம்ம வாதத்துக்கு உரியவைகள். புத்தமதமும், நாஸ்திக மதங்களும் மாயா வாதத்தோடு நின்றுவிடுகின்றன.

பின்பு பரம்பொருளை யூகித்து அறிய முடியுமா, என்னும் கேள்வி எழுகிறது.

முடியும் என்று வேதாந்த தர்சனம் உறுதி கூறுகிறது. நனவு, கனவு, கனவற்ற உறக்கம் ஆகிய மூன்றுக்கும் முறையே ஜாக்ரம், சொப்பனம், ஸுஷிப்தி என்ற பெயர்.

இந்த மூன்று அவஸ்தைகளுக்கும் போக்கு வரவு உண்டு.

ஆகையால் இவையாம் மாயா காரியங்கள்.

இம் மூன்றுக்கும் ஆதாரமாயிருக்கும் பிரக்ஞானமே பிரம்மம். அது துரியம் என்றும் அழைக்கப்படுகிறது.

அதற்குப் போக்கு வரவு இல்லை. சமயவாதிகள் அதைத் துரியம் என்றும் துரியாதீதம் என்றும் இரண்டு நிலைகளில் வைத்துக் மொழிகின்றனர்.

சுத்த மனதைக் கொண்டு தரிசிக்கும் போது அதைத் துரியம் என்றும், மனதற்ற பரிசுத்த நிலையில் அதைத் துரியாதீதம் என்றும் அவர்கள் பாகுபடுத்தியிருக்கின்றனர்.

ஆனால் சுத்த மனதும் மாயாகாரியமே.. மாயைக்கு அப்பால் இருப்பது இரண்டு பொருள்கள் அல்ல.

துரியம் மனதுக்கு அப்பாற்பட்டது. ஆக. அது ஏகவஸ்து. பேச்சளவில் அது துரியம் என்றும் துரியாதீதம் என்றும் இரண்டு நிலைகளில் வைத்துச் சொல்லப்படுகிறது.

## மாணிக்கவாசர் காட்டும் மாயை.

- மண்ணினில் மாயை மதித்து வகுத்த மயக்கறு மாகாதே
- அங்கிது நன்றிது நன்றெனு மாயை அடங்கிடு மாகாதே
- மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை மறைந்திட மூடிய மாய இருளை

"உலகி லில்லதோர் மாயை!; யிக் கோவண
மொன்றுக்
"உலகி லில்லதோர் மாயை!; யிக் கோவண
மொன்றுக்
கலகில் கோவண மொத்தில!" வென்றதி சயித்துப்
பலவும் வெண்டுகில் பட்டுட னிடவிட உயர
விலகு பூந்துகிற் பொதிகளை யெடுத்துமே
லிட்டார். 34

"இது உலகத்தில் இல்லாததோர் மாயையாயிருக்கின்றது;

இந்தக் கோவணம் ஒன்றினுக்கு அளவில்லாத கோவணங்கள் ஒப்பில்லாவாயின" என்று அதிசயப்பட்டு. அதன் மேலும், மென்றுகில்கள், பட்டுக்கள் முதலிய பலவற்றையும் இடஇடவும்

தட்டு உயர்ந்து நின்றதாகவே, பின்னும் விளங்கிய பூந்துகிற் பொதிகள் ஆகியவைகளை எடுத்து அவற்றின் மேலிட்டனர்.

### வேதாத்திரி மகரிஷி காட்டும் மாயை.

- செய்ததத்தையே மீண்டும் மீண்டும் செய்து கொண்டு விளக்கம் இல்லாமல் அந்த இருட்டிலேயே மனிதன் நடக்கிறபோது, நல்லது கெட்டது தெரியாமல் மேலும் மேலும் அவன் துன்பத்திற்கு ஆளாகும் நிலையை "மயக்கம்" "மாயை" என்று சொல்கிறார்கள்.
- தன்னிலை விளக்கம் அறிந்த, தானே தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது மயக்க நிலையை, மாயை என்று சொல்கிறோம்.
- இந்தக் கையை, காலையெல்லாம் வைத்துக் கொண்டு, காரியங்கள் செய்கிறோம் என்று நினைக்கிறோம் பாருங்கள், அதைத்தான் மாயை என்றும் சொல்கிறோம்.
- பிறப்பு, இறப்பு நடுவே  இவ்வுலக வாழ்வு.  இதை பிறப்பு நிலையில் உள்ள மதியின் போக்கே மாயை.
- கற்பனை வேகத்தால் இயற்கையை மறந்து, சமூகத்தின் அமைப்பையும், மக்களின் எண்ணம்-செயல்களால் விளைந்து வரும், விளையப் போகும் நிகழச்சிகளையும் மறந்த-உடலளவில் தேவையையும் –அறிவுக்கு அந்த சமயப் பொருத்தத்தையும் ஞாபகத்தில் கொண்டு – புலனறிவின் எல்லையிலேயே மட்டும் விரிந்து –மயக்க நிலையில் எண்ணிச் செயலாற்றுவது மாயை என்பதாகும்.

## 9.அழுதால் பெறலாம் அவனருளை

அழுதே சாதித்தார்கள் ஞானிகள். கண்ணீர் விட்டே சாதித்தார்கள் ஞானிகள்

**“யானே பொய் என் நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே”** – திருவாசகம்

யானே பொய்  எனது இந்த உடல் பொய்! அழிந்து போக கூடியது! எவன்டா, இந்த உடம்புக்கு போய் ‘மெய்’ என்று பெயர் வைத்தது!?

என் நெஞ்சும் பொய், என் நெஞ்சில், வஞ்சம், பொய், பொறாமை, கோபம், லோபம், மூடம், மதம், ஆங்காரம் இன்னும் இது போன்ற எல்லா துர்குணங்களும் நிரம்பி வழிகிறது என் நெஞ்சமும் பொய்தானே!

என் அன்பும் பொய், நான் என் தாய், தந்தை என் மனைவி என் பிள்ளைகள் என் சகோதர சகோதரிகள் என் உறவினர் என் வீடு என்- என் -என்னுடையது என்றே திரிகிறேன்.

என் சாமி என இறைவனையும் ஆக்கி கொண்டேன். இப்படி இருந்தால் -என்னிடம் என்ன இருக்கும். பொய், பித்தலாட்டம் ஏமாற்று தான் மிஞ்சும்!

ஆக இதெல்லாம் பொய்யாய் இருக்க காரணம் அடியேன் முற்பிறவிகளில் செய்த வினைகள்தான்?!

இதுவே வேதங்கள் கூறும் உண்மை! ஞானிகள் உணர்ந்த சத்தியம்!

இப்படி பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்து பொய்யிலே வாழும் நாமும் “அழுதால் பெறலாம் அவனருளை” எப்படி?

நாம் செய்த பாவத்தை நினைத்து அழு! இனி பாவம் செய்யாதிரு! நீ யாருக்கும் கெடுதல் செய்யாதே!

உன் பெற்றோர் குறிப்பாக தாய் பத்து மாதம் உன்னை சுமந்து பட்ட துன்பத்தை பின் ஒவ்வொரு நாளும் வளர்க்கபட்ட துன்பத்தை நினைத்து அழு!

உன் உயிருள்ளவரை மாத பிதாவை வணங்கி போற்றி வாழ வைத்து வாழு!

என் போன்று எல்லாவற்றையும் படைத்தானே யாரோ ஒருவன் யாரோ ஒருத்தி இல்லை ஏதோ ஒரு சக்தி அதை காண வேண்டுமென்று அழு! நன்றாக அழு! குமுறி குமுறி அழு!

பைத்தியாகாரன் என்பர் உலகர்! பொருட்படுத்தாதே! நீ மட்டும் அழுவதை நிறுத்தாதே!

இதெல்லாம் நீ உருப்பெற வழிகாட்டும்! உண்மை உணர வழிகாட்டும்! சோகத்தில் – இழப்பில் – நட்டத்தில் அழுவது மன ஆறுதல் மட்டுமே தரும்!

மாணிக்கவாசகர், வள்ளலார் மற்றும் உலகத்தில் உள்ள எல்லா ஞானிகளும், சித்தர்களும் அழுதால் பெறலாம் இறைவன் அருளை என அழுத்தம் திருத்தமாக கூறியிருக்கின்றனர்.

**"அழுதால் உன்னை பெறலாமே"** என்றார் மாணிக்கவாச்கர்.

"அரன்அடி சொல்லி அரற்றி அழுது
பரன்அடி நாடியே பாவிப்ப நாளும்
உரன்அடி செய்தங்கு ஒதுங்க வல்லார்க்கு
நிரனடி செய்து நிறைந்து நின்றானே"

சிவபெருமான் திருவடியை நினைந்து, அவன் பெயரைச் சொல்லிக் கதறி அழுது, கைகூப்பித் தொழுது, பரம் பொருளை நிதம் பரவித்துதிப்பவர்க்கு, இறை உணர்வில் ஊன்றி அதிலேயே இலயித்துக் கிடப்பவருக்கு இறைவன் திருவருள் கிட்டும்.

அப்படிப்பட்டவர்கள் உள்ளமெல்லாம் இறைவன் நிறைந்து நிற்பான்.

**"நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழும் கண்ணீர் அதனால் உடம்பு**

**நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே ஞான நடத்தரசே"** என்றார் வள்ளலார்

ஒரு சித்தர். அவர் பெயர் அழுகண்ணி சித்தர் என்றனர்! அவர் எப்பொழுதும் அழுது கொண்டேயிருப்பாராம். அதனால் எல்லாரும் அழுகண்ணி சித்தர் என்றனர்.

**"காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி"** என்றார் திருஞானசம்பந்தர்!

இப்படி இன்னும் பல ஞானியர் இறைவனை அடைவதற்காக அழத்தான் சொன்னார்கள்!

இறைவன் திருவடிகளே நமது கண்கள் என குரு மூலம் அறிந்து உணர்ந்து இருந்தாலே கண்ணீர் பெருகி வழியும்!

இப்படியே அழுது அழுது உங்கள் பாவங்கள் கரையும் வரை இறை ஒளி காணும் வரை அழுது கொண்டேயிருங்கள்!

எந்த தாயாவது பிள்ளை அழுவதை பார்த்து கொண்டு சும்மா இருப்பாளா? ஓடோடி வர மாட்டாளா?

ஆம், வருவாள் தாய்! அமுதம் தருவாள்! ஏதுமறியா மூன்று வயது குழந்தை அழுததை கண்டு ஓடோடி வந்து பால் கொடுத்தாளே பார்வதி!!

அந்த ஞானகுழந்தை திருஞானசம்பந்தனை போல, திருவருட்பிர்காச வள்ளலாருக்கு ஒன்பது வயதில் பசியால் அயர்ந்து தூங்கிய போது தட்டி எழுப்பி அன்னம் கொடுத்து அருள் புரிந்தாலே தாய்!!

அந்தத் தாய் வாலைத்தாய் அழும் குழந்தை எல்லாருக்கும் அமுதம் தருவாள்! சத்தியம்!

அந்த இறைசக்தியோடு "ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக வேண்டும்" என்பது வேதாத்திரியம்.

## சரணாகதியெனும் சாந்தநெறி

“தனையடக்கித் தலைவனையே --முன்வைத்து ஒழுகும் நெறி
சரணாகதியெனும் -- சாந்தநெறி இந்நெறியில்
தனைத் தலைவனாய் காணும் -- தன்மை இயல்பாய் வளரும்
தருக்கொழியும் ஆசிரியன் -- தவக்காப்பில் உயிர் உய்யும்”
மகரிஷி.

மாணிக்கவாசகர் **காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி” என்பதை அறிவுப் பூர்வமாக சிந்தித்து, வேதாத்திரி மகரிஷி ஒன்றி ஒன்றி நின்று பழகினால் அந்த இறையுணர்வை பெறலாம் என்கிறார்.**

“ஒன்றி ஒன்றி நின்று அறிவைப் பழக்க
உறுதி,நுட்பம்,சக்தி இவை அதிகமாகும்
அன்று அன்று அடையும் அனுபவங்கள் எல்லாம்
அறிவினிலே நிலைத்துவிடும் ஆழ்ந்து,ஆய்ந்து
நன்று என்று கண்டபடி செயல்கள் ஆற்றும்
நற்பண்பு புலன்களுக்கு அமைந்து போகும்
என்றென்றும் கருவிடத்தே அறிவை ஒன்றும்
இயற்கை முறை சிறப்புடைத்து ஈதே தவமாம்.-(ஞாக.பா.1473)

ஆசான் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி மேலும் சொல்கிறார் ஞானக்களஞ்சியத்தில்.

“இறை வெளியோடு எண்ணத்தை கலக்கவிட்டு
ஏற்படுமோர் அமைதியிலே விழிப்பாய் நிற்க
நிறை நிலையே தானாக உணர்வதாகும்
நித்தம் நித்தம் உயிர் உடலில் இயங்கும் மட்டும்
உறைந்து உறைந்து இந்நிலையில் பழகிக் கொண்டால்
உலக இன்பங்களில் அளவு கிட்டும்
கறைநீங்கி அறிவு மெய்ப்பொருளாய் நிற்கும்
கரைந்துபோம் தன்முனைப்பு: காணும் தெய்வம்.” (ஞாக.பா.1487)

என்று  இந்த உடலில் உயிர் இயங்கும் வரையில், இறைநிலையோடு எண்ணத்தை கலக்கவிட்டு, சரணாகதி அடைந்தால், ஏற்படும் அமைதியில் விழிப்பாய் நின்றால் – என்னவெல்லாம் கிடைக்கும் என்பதை பட்டியலிடுகிறார் மகரிஷி.

உலக இன்பங்களில் அளவு கிடைக்கும். ஆணவம்  கன்மம் மாயை என்ற மும்மலங்கள் நீங்கிவிடும். தன் முனைப்பு கரைந்து போகும். நமது அறிவே மெய்ப்பொருளாக நிற்கும்.

ராமகிருஷ்ணர், ஒரு குட்டிக் கதை சொல்வார்.

ஒரு நாள் வைகுண்டத்தில் விஷ்ணுவும் லட்சுமியும் ஓய்வெடுத்து கொண்டிருந்தார்கள்.

விஷ்ணு, திடீரென்று எழுந்து, பூலோகம் போகத் தயாரானார். பிராட்டியார் “என்ன?” என்று வினவ, விஷ்ணு சொன்னார்

“என் பக்தன் ஆபத்தில் இருக்கிறான்.கூப்பிடுகிறான், அவனைக் காப்பாற்றப் போகிறேன்” என்றார்.

வாசல்வரை சென்றவர் உடனே திரும்பி வந்து பிராட்டியார் பக்கம் உட்கார்ந்துகொண்டாராம்.

லட்சுமி “ஏன், சீக்கிரம் திரும்பிவிட்டீர்கள்” என்று கேட்டாள். விஷ்ணு சொல்கிறார்.

“என் பக்தன்,ஆற்றுப் பக்கம் நடந்துகொண்டிருந்தான். அங்கே ஒரு சலவைத் தொழிலாளி தன் துணிகளைக் காயப் போட்டிருந்தான். என் பக்தன் அதைப் பார்க்காமல் துணிகளின் மேல் காலை வைத்து அவற்றை அசுத்தப்படுத்திவிட்டான்.

சலவைத் தொழிலாளிக்குக் கோபம் வந்து என் பக்தனைத் திட்டி, அடிக்கக் கை ஓங்கியிருக்கிறான். அப்போதுதான் என் பக்தன் என்னைக் கூப்பிட்டிருக்கிறான்.

நானும் அவனுக்கு உதவத் தயாரானேன். திடீரென்று என் பக்தன் ஒரு கல்லை எடுத்துச் சலவைத் தொழிலாளி மேலே எறிய முயற்சி எடுத்தான்.

எப்போது அவன் என் உதவி இல்லாமலேயே தன்னைக் காப்பாற்றிகொள்ளலாம் என்று நினைத்தானோ நான் அவனுக்குத் தேவையில்லை. அதனால் தான் திரும்பி வந்துவிட்டேன்."

"முழுநம்பிக்கையோடு கூப்பிட்டால் இறைவன் நிச்சயம் வருவான்" என்கிறார் ராமகிருஷ்ணர்.

புராண இதிகாசங்களில் எத்தனையோ சரணாகதிகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

பிரகலாதனின் தவம், கஜேந்திரனின் அறைகூவல், திரௌபதியின் வேண்டுகோள், ஹனுமானின் அன்பு ஆனால் சரணாகதி என்ற பெயர் சொன்னவுடன் ஞாபகத்திற்கு வருவது விபீஷண சரணாகதிதான்.

மேலே சொன்ன ஆறு அங்கங்களும் விபீஷண சரணாகதியில் இருக்கின்றன.

விபீஷணன், ராவணனிடம் புத்தி சொல்வது, அவனை விட்டு விலகிவந்தது,ராமனே தன்னை காப்பாற்றுபவன் என்ற திட நம்பிக்கை வைத்தது, ராமனைக் தொழுது தன்னை காப்பற்ற வேண்டுவது என்று பல வகையிலும் விபீஷணன் தன்னை ராமனிடம் ஒப்புவித்துக் கொண்டது ஒரு விசேஷமான செயல்.

அரக்கன் என்று ஒதுக்காமல் ராமன் விபீஷணனுக்கு அபயம் அளித்தது கடவுளுக்குப் பாரபட்சம் கிடையாது என்பதை நிரூபிக்கிறது.

ராமாயணம் சரணாகதி சாஸ்திரமாகக் கருதப்படுகிறது.

ஒவ்வொரு காண்டத்திலும் ஒவ்வொரு சரணாகதியைப் பற்றிக் காவியம் பேசுகிறது.

பால காண்டம்-மகாவிஷ்ணுவிடம் தேவர்கள் சரணம் அடைதல்.
தசரதர் பரசுராமரிடம் சரணம் அடைதல்.

அயோத்யா காண்டம் -
பரதனின் சரணாகதி.

ஆரண்ய காண்டம்-
ரிஷிகளின் சரணாகதி.

கிஷ்கிந்தா காண்டம்-
சுக்ரீவ சரணாகதி.
ராம சரணாகதி

(சமுத்திர ராஜனிடம்)
சுந்தர காண்டம்-
ஹனுமான் சரணாகதி.
யுத்த காண்டம்

கடவுளிடம் சரணாகதி அடைந்தவர்கள் கடவுளுக்குப் பிரியமான காரியங்களை மாத்திரம் செய்ய வேண்டும்.

அதே மாதிரி, கடவுளுக்குப் பிரியமில்லாத காரியங்களைச் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

கடவுளின் கருணையில் முழு நம்பிக்கை வைத்து, நம் கவலைகளை மறந்து "எல்லாம் அவன் செயல் அவன் காப்பாற்றுவான்" என்ற நினைப்போடு வாழ வேண்டும்.

"பற்றுகளை அறவே ஒழித்து அன்பினால் பணிந்து அவனிடம் அடைக்கலம் புகுவதொன்றே நமது கடமை. நமக்கென்று தனியாக

வேறு ஒரு காரியமும் கிடையாது. எல்லாம் அவனுடையது.”
என்பார் சுவாமி விவேகானந்தர்.

## 10. நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க

தமிழ் பேசும் சிவனடியார்கள் வாயெல்லாம் மணக்கின்ற பதிகம் சிவபுராணம்.

கல்லையும் கனிய வைக்கும் எனப் புகழ் பெற்ற திருவாசகத்தின் முதற் பதிகமாக அமைந்த சிறப்புப் பெற்றது.

திருஐந்தெழுத்தை முதலாகக் கொண்டே துவங்கும் இப்பதிகம் அடியார் தொழுகையில் சிறப்பிடம் பெற்றது இதன் பெருமையைப் பறை சாற்றும்.

சிவபுராணம் என்று பெயர் கொண்ட இப்பதிகம் சீவ புராணமல்லவா பேசுகின்றது? ஏன் சிவபுராணம் எனப் பெயர் பெற்றது?

மாணிக்க வாசகப் பெருமான் பரம்பொருளாகிய சிவபெருமானைப் பலவாறெல்லாம் விளித்து அவர் பூவார் திருவடிகளுக்குத் தம்முடைய உளமார்ந்த வணக்கங்களைக் கூறித் துவங்குகிறார்.

சீவனான உயிர் மும்மலச் சேற்றில் அகப்பட்டுத் திகைத்து நிற்கும் காலமும், அச்சீவனுக்கு சிவபெருமான் திருவருளால் ஏற்படும் மேம்பாடுகளையும் கூறி இறுதியாக அச்சிவபெருமானின் திருவடிக்குச் செல்லும் பெருநிலையை நமக்குக் காட்டுகின்றார்.

சீவன் மலச்சுழியில் சிக்குண்டு இருக்கும் தாழ்நிலையிலிருந்து, சிவனார் பெருங்கருணையால் சிவகதி அடையும் தன்னிகரற்ற பெருநிலை பற்றிக் கூறுவதால் இது சிவபுராணமே.

திருவாசகம் பெரிதும் எளிய நடையைக் கொண்டதாக இருப்பது காரணமாக உரையின் துணையின்றியே அன்பர்கள் படித்துப் பயன்பெறுவது.

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க" என்று தொடங்குகிறது மாணிக்கவாசகரின் திருவாசகம்.

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க 5

நமச்சிவாய வாழ்க. நாதன் திருவடி வாழ்க. கண்ணிமைக்கும் நேரமும் என் நெஞ்சம் பிரியாதவனுடைய திருவடி வாழ்க.

திருவாவடுதுறை ஆண்டருளும் குருவாகிய மாணிக்கத்தின் திருவடி வாழ்க.

தானே ஆகமமாகி நின்று நமக்கு அருகில் வருபவனுடைய திருவடி வாழ்க.

ஒருவனாகியும் பலவுருக்கொண்டும் இருக்கும் இறைவனின் திருவடி வாழ்க



மாணிக்க வாசகர் தம்முடைய திருவாசகத்தின் முதல் ஒலியாக நமச்சிவாய என்ற திருஐந்தெழுத்தை சொன்னது மிகவும் இனியது.

சிவம் வாழ்க என்று கூடத் துவங்காமல் வணக்கத்திற்குரிய நம முதலில் கூறி இறைவனின் சிவ என்ற திருநாமத்தைச் சொல்வது அவருடைய பணிவன்பின் வெளிப்படை.

திருவாசகத்தில் சிறப்பிடம் பெறுவது ஆகமம். இம்முதற் பதிகத்திலேயே அதனைப் போற்றி நிற்பது அவருக்கு ஆகமங்கள் பால் உள்ள பெருமதிப்பைக் காட்டுவன.

வேதங்கள் இறைவனுடைய இயல்பு கூறுகின்ற போது, ஆகமங்கள் அப்பெருமானை எவ்வகை அடையலாம் என்பது பற்றி நமக்குக் காட்டுகின்றன.

வேதங்கள் அறிவானால் ஆகமங்கள் அந்த அறிவின் பயன்பாடு.

இவ்வாறு ஆகமங்கள் நமக்கு இறைவனின் அருகில் செல்லும் வழி காட்டுவதாலும், ஆகமங்கள் இறைவனால்அருளிச்செய்யப்பட்டதாலும் இறைவனை, "ஆகம நெறி தந்து அருகில் வரச் செய்கின்ற வள்ளல்" எனப் போற்றுகின்றார்.

இறைவன் ஒருவனே. (ஏகம் சத் - வேதம், ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் - திருமந்திரம்). அவ்விறைவன் பசுக்களாகிய நாம் உய்வுறும் பொருட்டு பலபல வேடங்கள் தாங்கி நம்மை ஆட்கொள்கிறான்.

"எல்லாம் வல்ல தெய்வமது
எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே
சயமாய் சிந்தித்தே தெளிவாய்......." (வேதாத்திரி மகரிஷி)

என்ற பாடல் மூலமும்

"கடவுளை வணங்கும்போது கருத்தினை
உற்றுப்பார் நீ
கடவுளாய் கருத்தே நிற்கும்
காட்சியாய் காண்பாய் எங்கே." (வேதாத்திரி மகரிஷி)

"யார் எந்த வகையில் வணங்கினாலும் சரி, சிறிது நேரம் பொறுத்து எது நிற்கிறது என்று பார்த்தால் உன்னுடைய மனம்தான்." இது வேதாத்திரி மகரிஷியின் தத்துவம்.

மாணிக்கவாசகரோ, “சிவனை நமச்சிவாய வாழ்க” “நாதன் தாள் வாழ்க” என்பர். சிவம் என்றால் வெண்மை. மனதில் தூய்மையை காட்டுகிறது என்கிறார்.

ஆங்கில, சமஸ்கிருத அகராதிகளில் “சிவம் என்ற சொல்லுக்குச் சகலவிதமான மங்களம், சுகம், சந்தோஷம், ஆனந்தமயம், கடைசி எல்லை” என்று பொருளாம்.

பரமேஸ்வரனின் மந்திரம் பஞ்சாட்சரம், நமசிவாய. இந்த ஐந்து எழுத்துகளும் ஆகாயம், வாயு, அக்னி, நீர், பூமி இவையாகும்.

சகல தெய்வங்களும், சக்திகளும். செயல்களும் சிவனுக்குள் அடக்கம்.

மாணிக்கவாசகர் மெய்ஞ்ஞானமாக சொன்னார். சிவம் என்பது சுத்தவெளி என்று விஞ்ஞான விளக்கம் தருகிறார் மகரிஷி.

## சுத்தவெளி விளக்கம் – வேதாத்திரி மகரிஷி

சிவம் என்ற சுத்தவெளியைப் பற்றிய விஞ்ஞானப் பூர்வமான ஞானம் இல்லையானால், ஞாலத்தைப் பற்றிய தர்க்கரீதியான ஞானமும் நமக்குக் கிடைக்காது.

எனவே மக்களின் உள்ளத்தில் சுத்தவெளி என்ற சிவத்தைப் பற்றிய சிந்தனைப் பூர்வமான ஞானத்தைப் பெருக்குவது இன்றியமையாதது.

“ஆதியென்னும் பரம்பொருள் மெய்யெழுச்சி பெற்று
    அணுவென்ற உயிராகி அணுக்கள் கூடி ,
மோதி இணைந்து இயங்குகின்ற நிலைமைக்கு ஏற்ப
    மூலகங்கள் பலவாகி அவையிணைந்து
பேதித்த அண்ட கோடிகளாய் மற்றும்
    பிறப்பு இறப்பிடை உணர்தல் இயக்கமாகி
நீதி நெறி உணர் மாந்தாராகி வாழும்
    நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்.”

(வேதாத்திரி மகரிசி)

சிவம் என்ற சுத்தவெளி பற்றிய விளக்கத்தை புரிந்து கொள்ள இங்கு சொல்லப்படும் கருத்தோடு தன்னை இணைத்துக் கொள்ள முடியாமல் தவிக்கும் பண்டிதர்களும், மதவாதிகளும் இருக்கலாம்.

பண்டிதர்களையும் பாமரர்களையம் சிந்திக்க வைப்பதுதான் மகரிஷியின் "ஆதியென்ற பரம்பொருள் ......." என்ற பாடல்.

ஒரு முழுமையான இறை தத்துவத்தை நமக்குத் தருகிறார் வேதாத்திரி மகரிஷி.

- அதன் இறைத்தத்துவம பரமாத்மாவே ஜீவாத்தமாவாக வருகிறது என்ற உபநிடதக் கருத்துக்கும்,
- அனைத்துப் புகழும் இறைவனுக்கே என்னும் திருக்குரானின் வசனத்திற்கும்,
- எனது தந்தையும் நானும் ஒன்றே என்ற விவிலியத்தின் வாசகத்துக்கும்,
- சிவமே சீவனாயிற்று என்ற சைவசித்தாந்தப் பார்வைக்கும்,
- அறிவேதான் தெய்வம் என்ற சித்தர்களின் வேதத்துக்கும்,
- அறிவே நான் என்ற இரமணரின் உள்ளுணர்விற்கும்,
- ஆதிசங்கரரின் நிர்வாண சதகத்திற்கும்

தர்க்கரீதியான விஞ்ஞானப் பூர்வமான விளக்க உரையாக இப்பாடல் அமைகிறது.

- பேரறிவும் பேரலாற்றலுமான சுத்தவெளியே (பெருவெளி, வெட்டவெளி ) தெய்வம்.
- சுத்தவெளி ஒன்றே சுயம். சுயத்திற்குப் பலப்பல பெயர்கள் உண்டு. (சிவம், அல்லா, பிதா,)
- சுத்தவெளியின் தன்னிறுக்கமே அதன் எழுச்சிக்கு முழுமுதற்காரணம்.

- சுழற்சியடைந்த பெருவெளியின் பின்னமே துகள், துகள்களின் சுழற்சியே சுத்தவெளியில் எழும் அலைகளே காந்த அலைகள்.
- மூலகங்கள் பல இணைந்து அண்டங்களாக பரிணமிக்கிறது.
- பஞ்சபூதங்களின் கலவையினால் ஓரறிவு தாவரம் முதல் ஆறறிவு மனிதத் தோற்றம் உண்டாகிறது.
- காந்த அலை சுத்தவெளியில் ஒடுங்கும்போது அழுத்தம், ஒலி, ஒளி, சுவை மணமாகத் தன்மாற்றம் அடைகிறது
- அறிவின் எழுச்சியே மனம். மனதின் ஒடுக்கமே அறிவு.
- தெய்வத்திற்கு அறிவு உண்டு. ஆனால் மனமில்லை.
- தெய்வம் செயலுக்குத் தகுந்த விளைவைத் தருமேயொழிய நம்மிடம் எதையும் எதிர்பார்க்காது.

சிவமும் சுத்தவெளியும் ஒன்றே என்ற தெளிந்த நிலையில் ஆனந்தமாக வாழ்வோம்.

## 11. அண்டம் – அளப்பருந்தன்மை

திருவாசகத்தில், இறைவனின் தூலசூக்குமத் தன்மையை திருவண்டப்பகுதியில் மாணிக்கவாசகர் கூறுகிறார்.

நம்முடைய சூரிய குடும்பமிருக்கும் பால்வெளி (□□□□□ □□□) என்பதை காலக்ஸ□(□□□□□□) என்று கூறுவர்.

இதனை அண்டம் என்று நம் வானியல் அறிஞர் கூறுவர். இதன் குறுக்களவு பல ஒளியாண்டுகள் கொண்ட பார்செக்குகள் தூரம்.

இந்த மாதிரி பல கோடி அண்டங்கள் சேர்ந்து ஒரு கூட்டமாக விளங்குகின்றன.

அதனை □□□□□□□□ □□□□□□□ என்று சொல்வர். நாம் சார்ந்திருப்பது □□□□□ □□□□□ எனப்படும்.

இவற்றின் அளவு மிகமிகப் பெரிது. இதை நம் முன்னோர்கள் பஹ□ரண்டம், பேரண்டம் என்று அழைத்தனர்.

இந்த மாதிரி பேரண்டங்களும் பல கோடி உள்ளன. பல கோடி பேரண்டம் கொண்டது பிரம்மாண்டம்.

இந்தப் பிரபஞ்சத்தில் எத்தனையோ கோடி பிரம்மாண்டங்கள் உள்ளன.

“அனேக கோடி பிரம்மாண்ட ஜனனி” என்று அம்பிகையை லலிதா சகஸ்ரநாமம் கூறும்.

இதுவரை கணக்கிடப்பட்ட ▯▯▯▯▯▯▯▯ நூறுகோடிக்கும் மேற்பட்டவை என்று ▯▯▯▯▯-▯▯▯▯▯▯▯▯▯ மூலம் கணக்கிட்டிருக்கிறார்கள்.

வெகுவெகு தொலைவில் உள்ளன! இனி திருவாசகத்தின் திருவண்டப்பகுதியில் இதைப்பற்றி என்ன சொல்கிறார் மாணிக்கவாசகர் என்று பார்ப்போம்.

உருண்டு திரண்டு அக்னிக் காற்றாயிருப்பது சூரியன். அதனிடத்திருந்து சிதறி வந்து குளிர்ந்த இறுகியிருப்பது நிலவுலகம்.

அதே விதத்தில் சத்த சைதன்யமாயிருப்பது சிவம். அந்தச் சிவனிடத்திலிருந்து ஜடசக்தி வந்துள்ளது.

ஜடசக்தி பஞ்சபூதங்களாயின. பஞ்ச பூதங்களிலிருந்து எண்ணிறந்த அண்டங்கள் உண்டாயின. அவை யாவும் சிவனாருக்கு உடலாக அமைந்துள்ளன.

ஆதலால் அவைகளைத் திரு அண்டம் என அழைப்பது முறை. அண்டம் என்னும் சொல் உருண்டை அல்லது முட்டை வடிவில் இருப்பது எனப் பொருள்படும்.

“அண்டப்பகுதியின் உண்டைப்பிறக்கும்
அளப்பருந்தன்மை! வளப்பெரும் காட்சி!” (3-1-2)

பிரமாண்டமானது எண்ணிறந்த கோளங்களையுடையது. அக்கோளங்களின் தன்மைகளை முற்றிலும் தெரிந்து கொள்ள முடியாது.

ஆராயுமளவு அவைகளின் அழகும் சீரமைப்பும் கண்டு வியப்பதற்குஉரியவைகளாயிருக்கின்றன.

“ஒன்றனுக்கொன்று நின்றெழில் பகரின்,
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன!” (3-2-3)

ஒவ்வொரு கோளத்திலும் ஒரு தனியழகு பொலிகிறது. விளக்கிச் சொல்லுமிடத்து கோடிக் கணக்கில் அவைகள் அகண்டாகாரத்தில விரிந்து போகின்றன.

“இல்நுழை கதிரின் நுண்ணணுப் புரையச்
சிறியனவாகப் பெரியோன் தெரியின்.....” (3-3-6)

ஒரு பொத்தலில் வீட்டுக்குள் வருகிற சூரிய வெளிச்சத்தில் அணுப்போன்ற தூசிகள் அலைந்து திரிவது தென்படுகிறது.

அது போன்று கோளங்கள் வானத்தில் மதிந்து கொண்டிருக்கின்றன.

சிறியதாகிய அணுவுக்கும் பெரியதாகிய அண்டத்துக்கும் அமைப்பு ஒன்றேயாம். ஆராய்ந்து பார்ப்பவர்க்கு இது விளங்குகிறது.

வீட்டுக்குள் காற்றில் மிதந்து கொண்டிருக்கிற தூசிகள் போன்றவை பூமி, சந்திரன், சூரியன் முதலிய கோளங்கள்.

தூசிகள் நமக்கு அற்பமானவைகளாகத் தோன்றுவது போன்று இறைவனுக்கு அண்டகோடிகள் அற்பமானவைகளாம்.

இறைவனைப் பற்றிய பேருணர்வு நமக்கு வரும்போது நமது உடலைப் பற்றியோ, நிலவுலகைப் பற்றியோ கவலையொன்றும் நமக்கு உண்டாகாது.

அண்டம் என்னும் பேருலகத் தொகுப்பின் பகுதியுள்ளது; அதன் உருண்டை வடிவின் தன்மை விளக்கமும், அவற்றின் அளக்கமுடியாத தன்மையும், வளமான பெரிய காட்சியும், ஒன்றுக்கொன்று தொடர்ந்து விளங்கும் எழிலும், சொல்லப்போகும்போது அவை அதற்கெல்லாம் அடங்கமாட்டாமல் நூற்றொரு கோடிக்கும் அதிகமாக விரிந்து செல்கின்றன;

அவ்வளவு பெரியவை; எண்ணிக்கையற்றவை!

ஆனால் ஆராயும்போது, இவ்வளவு பெரிய அளவும் எண்ணிக்கையும் உடைய இவை அனைத்துமே இறைவனுடன் ஒப்பிடுகையில், மிகச் சிறியனவாகத் தோன்றுகின்றனவே!

எவ்வளவு சிறியவை? ஒரு சிறு துவாரத்தின் வழியாக வீட்டுக்குள் நுழையும் சூரியனின் கதிரில் பறந்து மிதந்து தெரியும் நெருங்கிய அணுக்களின் கூட்டத்தைப்போல மிக மிகச் சிறியன!

அந்த அளவிற்கு அவை சிறியனவாகத் தோன்றும் வண்ணம் அவன் அளவில் மிக மிகப் பெரியோன்! பாருங்கள்!

இதெல்லாம் எப்படி மாணிக்கவாசகருக்குத் தெரிந்தது? ஞானதிருஷ்டியா?

திருவண்டப்பகுதியில் ‘இன்னுழை கதிரின் துன் அணுப் புரைய’ என அணுவைப் பற்றியும் மாணிக்கவாசகர் கூறுகிறார்.

வேதத்தில் (உபநிஷத்தில்) ஆகாயத்திலிருந்து வாயுவும் வாயுவிலிருந்து தீயும் தீயிலிருந்து நீரும் நீரிலிருந்து மண்ணும் தோன்றியதாக தோற்ற முறைமைக் கூறப்படுகிறது.

ஆனால் திருவண்டப்பகுதியில்

‘பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி,
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி,
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி,
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி,
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி’

என இறைவனே பஞ்ச பூதங்களையும் படைத்து அவற்றின் உள்நின்று இயக்குவோனாய் சுட்டப்படுகிறான்.

## சிவனே சீவனாயிற்று ... வேதாத்திரி மகரிஷி விளக்கம்.

“ஒரே பொருள் எல்லாமாக இருக்கிறது” என்பதுதான் அத்வைத தத்துவம்,

ஆனால் இதுவரை யாருமே அந்த ஒரு பொருள் எது? அது எப்படி எல்லாமாக மாறியது என்பதை விளக்கவே இல்லை.

**ஒன்றுமில்லா ஒன்றே பலவாச்சு என்று விஞ்ஞான விளக்கத்தைத் தருகிறார் மகரிஷி.**

## பிரபஞ்ச பரிணாம தத்துவம் - வேதாத்திரி மகரிஷி

வேதாத்திரி மகரிஷி, அத்வைத தத்துவத்திற்கு ஒரு கோட்பாட்டை வெளியிட்டுள்ளார்.

இந்த கோட்பாடு அறிவியலாளர்களால் ஏற்றுக்கொள்ளும் படியாகவும், பிரபஞ்சத்தில் நடக்கும் எல்லா வித நிகழ்சிகளையும் விளக்க முடிந்ததாகவும் உள்ளது.



இந்த கோட்பாட்டை கொண்டு “எலெக்ட்ரான்” ஏன் தன்னை தானே சுற்றுகிறது என்பதையும் விளக்கலாம், உயிரினங்களில் மனம் எவ்வாறு இயங்குகின்றது என்பதையும் விளக்கலாம்.

பிரபஞ்சம் ஏன் விரிந்து கொண்டே செல்கிறது என்பதையும் விளக்கலாம், ஒருவரின் மனதில் எழும் எண்ண அலைகள் எப்படி அடுத்தவரின் மனதில் பிரதிபலிக்கிறது என்பதையும் விளக்கலாம்.

## பஞ்ச பூத தத்துவம்:

வேதாத்திரி மகரிஷி அவரது ஆராய்ச்சியை பஞ்ச பூத தத்துவத்தில் இருந்தே தொடங்கினார். ஆகையால் நாமும் இந்த விளக்கத்தை அங்கிருந்தே தொடங்குவோம்.

நம் முன்னோர்கள் இந்த பிரபஞ்சத்தை 5 பௌதிக பிரிவுகளாக பிரித்தனர்.

1. விண் துகள் (அல்லது) பரமாணு (அல்லது) ஆகாசம் (infinitesimal energy particle).
2. காற்று (air)
3. அழுத்தக் காற்று (அல்லது) நெருப்பு (heavy air or fire)
4. நீர் (liquid)
5. கெட்டிபொருள் (solid)

## இந்த 5 பூதங்களுக்கும் மூலமாக இருப்பது எது?

இந்த பிரபஞ்சத்தில் எந்த ஒரு பொருளை எடுத்து,
அதன் மூலகங்களை ஒவ்வொன்றாக பிறித்துக் கொண்டே வந்தால், கடைசியில் மிஞ்சுவது என்ன?

அணு என்ற நிலைக்குத்தான் வருவோம். அதாவது பரமாணு என்ற நிலைக்கு வருவோம்.

அணு என்றால் சிறிய என்று பொருள், பரம அணு என்றால் அதை விட ஒரு சிறிய பொருள் இந்த பிரபஞ்சத்தில் கிடையாது என்று பொருள்.

ஆக இந்த பிரபஞ்சத்தில் நாம் காணும் எந்த ஒரு பொருளும் பரமாணுக்களின் (விண்ணின்) கூட்டு சேர்க்கையே என்பதுதான் பஞ்சபூத தத்துவத்தின் கருப்பொருள்.

இதை நவீன அறிவியலும் ஒப்புக் கொள்கிறது (mass is an association of energy particles). ஆக விண் என்ற துகளே (பரமாணு) மற்ற நான்கு பூதங்களுக்கும் மூலப்பொருளாக உள்ளது என்பது தெளிவாகிறது.

## பரமாணு எங்கிருந்து வந்தது?

இது பற்றிய ஆராய்ச்சியை மகரிஷி அவர்கள் தொடங்கும் பொழுது, அவருக்கு முதலில் அடிபட்ட கேள்வி இதுதான்.

இந்த பிரபஞ்சத்தில் விண், விண்ணின் கூட்டு சேர்கை, இதைத் தவிர வேறு என்ன உள்ளது? இந்த விண் என்ற நிகழ்ச்சி எங்கே நடைபெறுகிறது?

இந்த கேள்விக்கு விடையாய் வந்தது **சுத்தவெளி (Absolute SPACE) அல்லது வெட்டவெளி.**


இரண்டு பரம அணுக்களுக்கு (விண் துகள்களுக்கு) இடையில் என்ன இருக்கிறது, சுத்தவெளிதான் உள்ளது. அப்படி என்றால் இந்த விண் என்ற பூதம் சுத்தவெளியில் இருந்துதான் வந்திருக்குமோ!

ஆனால் சுத்தவெளி ஒரு வெற்றிடம்தானே, அதில் இருந்து எப்படி அணு பிறக்க முடியும் என்று சிந்தித்த பொழுது அவருக்கு அடிபட்ட அடுத்த கேள்வி, சுத்தவெளி ஒரு வெற்றிடம் என்று எதை வைத்து முடிவு செய்தோம்? சுத்தவெளி உண்மையில் ஒரு ஏதுமற்ற வெற்றிடமா?

## சுத்தவெளியே ஒரு வெற்றிடமா?

விண் மற்றும் விண்ணின் கூட்டு இயக்கங்களான மற்ற பூதங்களும் சுத்தவெளியில்தான் மிதந்து கொண்டு இயங்குகிறது.

விண்ணின் கூட்டு சேர்கையால் உருவான பூமி, சூரியன் மற்றும் அதை சுற்றிலும் உள்ள மிகப் பெரிய நட்சத்திரங்கள் அனைத்தும் இந்த சுத்தவெளியில் தான் மிதக்கிறது.




**இந்த பிரபஞ்சம் முழுவதையும் தன்னில் தாங்கிக்கொண்டும்**

**மிதக்க விட்டுக்கொண்டும் இருக்கும் இந்த சுத்தவெளி எப்படி ஒரு சாதாரண வெற்றிடமாக இருக்க முடியும்?**

முடியாது, இது ஒரு எல்லாம்வல்ல, பிரபஞ்சத்தில் உள்ள எல்லா பொருட்களையும் விட சக்தி வாய்ந்த ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

## சூனியமே உறுதிப் பொருள்:

"சூனியமாம் இருள் ஏதுமற்ற தென்றும்
சொல்வார்கள் புலனுணர்வின் அளவில் நின்று
சூனியமே கோடானு கோடியண்ட
சூரியன், சந்திரன் இவற்றைத் தாங்கி நிற்கும்'
சூனியமே வலிமிக்க உறுதியாய் நின்று
சொரூப கோடிகளை ஈர்த்தியக்கு தன்றோ?
சூனியத்தை அணு நிலையைக் கொண்டா ராய்ந்தே
சூட்சுமமாய் யூகித்து விளங்கிக் கொண்டேன்."

(வேதாத்திரி மகரிஷி)

## ஒன்றே பலவும்:

"ஒன்றுமில்லா ஒன்று இருள், பூர்ணம், மௌனம்
உள்ளுணர்ந்து ஒடுங்கி நிற்கும் நிலையைப் போன்று
ஒன்றுமில்லா ஒன்றுக்கு ஆதியில்லை
ஒலி, வெளிச்சம், இயக்கம் அணு அதன் பூரிப்பு
ஒன்றுமில்லா ஒன்று இந்த நாலானாலும்
ஒன்றைவிட்டு ஒன்று பிரியாத தாகும்
ஒன்றுமில்லா ஒன்றின் இரகசியத்தைக் கண்டால்
உண்டுஎன்பது இல்லை என்பது இரண்டும் ஒக்கும்". (வேதாத்திரி மகரிஷி.)

அது மட்டும் அல்லாமல், இந்த சுத்தவெளி மட்டும்தான் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது,

இந்த பிரபஞ்சத்தில் எந்த நிகழ்ச்சி நடந்தாலும் (சிறிய விண் துகள் முதல் பெரிய நட்சத்திரங்கள் வரை) அதற்கு இடமாக இருப்பது இந்த சுத்தவெளிதான்.

இந்த ஆராய்ச்சியை நீங்களும் உங்கள் மனதினால் செய்யலாம். உங்களை சுற்றி இருக்கும் பொருள் மற்றும் நிகழ்ச்சியை ஒவ்வொன்றாக மனதை கொண்டு நீக்குங்கள்.

உங்களை சுற்றயுள்ள வீடு, மக்கள், உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்கள், ஊர், நாடு, பூமி, கோள்கள், சூரியன், நட்சத்திரம் என்று அனைத்தையும் நீக்குங்கள், கடைசியில் உங்களையும் நீக்குங்கள் ......

மீதம் என்ன இருக்கும், ஒரு எல்லையற்ற இருட்டான இடம் தான் மீதம் இருக்கும், இந்த இடத்தை உங்களால் அங்கிருந்து நீக்க முடியுமா, நீக்கினாலும் அங்கே மீதம் இருப்பது அதே இருட்டான இடம் தான் (சுத்தவெளி).

எந்த ஒன்று எல்லா இடங்களிலும் இருக்கிறதோ அதுவே இந்த பிரபஞ்சத்தில் உள்ள எல்லா இயக்கங்களிலும் பங்கு கொண்டு அந்த இயக்கத்தை ஒழுங்குபடுத்தவும் கண்காணிக்கவும் முடியும்.

ஆக எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து, அணைத்து பொருள்களிலும் நிகழ்சிகளிலும் ஊடுருவி நிறைந்து இருப்பது இந்த சுத்தவெளி என்கின்ற எல்லாம் வல்ல எல்லையற்ற இருட்டான இடம் தான்.

அது மட்டும் இல்லாமல், விண் என்பது ஒரு இயக்கம், சுத்தவெளி என்பது ஒரு இயக்கமற்ற நிலை, ஒரு இயக்கத்தின் பிறப்பிடம் இயக்கமற்ற நிலையிலிருந்து தான் வந்திருக்கவேண்டும்.

ஆகையால் **விண் என்ற பூதம் சுத்தவெளியில் இருந்துதான் வந்திருக்க வேண்டும்** என்ற முடிவிற்கு வந்தார்.

வெட்டவெளி சக்தி என்பதில்லையானால்
வேறு எந்த ஒன்று வலிது
பிரபஞ்சத்தில்

தொட்ட தொடப்பட்ட
இரு பொருட்களூடே
தொட ... தொட்டதாய்
எண்ணும் அரூபம் யாது

பட்டப் பகலில்
விண்மீன்கள் காணா
பார்வையில்லாக்கு
ஒருநாளும் அறியா

எட்டவில்லை
அறிவுக்கு என்றால்
உள்ள இறைநிலை எங்கே
ஒளிந்து கொள்ளும் .... (வேதாத்திரி மகரிஷி.)

இவருடைய ஆராய்ச்சி இதோடு நிற்க வில்லை, எப்படி இந்த சுத்தவெளி விண்ணாக மாறியது? என்ற கேள்வியில் பல நாட்கள் சிந்தனை செய்துள்ளார்.


அவரின் ஆராய்சிக்கு பெரிதும் துணையாக இருந்தது மன அலைச்சுழலை குறைத்து மனதை நுண்ணிய நிலையில் இயங்கவைக்கும் குண்டலினி தியானமும், நம் சித்தர்களின் பாடல்களும் மற்றும் ஆழ்ந்த ஆராய்ச்சியும் தான். இதன் விளைவாக “பிரபஞ்ச பரிணாம கோட்பாட்டை” பின்வருமாறு உலகுக்கு அளித்தார்.

## சுத்தவெளியே மெய்ப்பொருள்:

சுத்தவெளி (Absolute SPACE) ஒரு வெற்றிடம் இல்லை, அதுவே எல்லாம்வல்ல, பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றையும் விட சக்தி வாய்ந்த ஒரு பொருள்.

அதன் **இயல்பான ஆற்றல் தன்னிறுக்கம்**, அது எப்பொழுதும் தன்னைத் தானே இறுக்கிக் கொள்ளும் தன்மையுடையது. இந்த இறுக்கம் ஒரு குறிப்பிட்ட புள்ளியில் குவியும் பொழுது, அந்த புள்ளியில் இறுக்கம் அதிகரித்து, ஒரு கட்டத்தில் அதை மேலும் இருக்க முடியாத நிலை வரும் பொழுது, சுத்தவெளி அந்த புள்ளியை மையமாகக்கொண்டு சுழலத் தொடங்குகிறது.

அதாவது ஒரு புள்ளியில் குவிந்து கொண்டே இருக்கும் ஆற்றல்




மேலும் அந்த புள்ளியில் குவிய முடியாமல், பிதுங்கி தன் திசையை மாற்றி, அந்த புள்ளியில் இருந்து வழிந்து, திரும்பி செல்கிறது.

திரும்பிய ஆற்றல் நேராக செல்ல முடியுமா? முடியாது, ஏனென்றால் சுத்தவெளியிலிருந்து சூழ்ந்தழுத்தும் ஆற்றல் வந்து கொண்டே இருக்கிறது.

ஆகையால் வழிந்து வரும் அந்த ஆற்றல் சுழன்று சுழன்று வெளியே செல்கிறது. ஆகையால் அந்த இடம் சுழலத் தொடங்குகிறது.

உதாரணம்: ஒரு கால் பந்தை எடுத்துக்கொள்வோம், அது நிலையாக ஒரு இடத்தில் இருக்கிறது,

ஒரு குழாயின் மூலம் தண்ணீரை வேகமாக இந்த பந்தின் எதாவது ஒரு பக்கத்தில் செலுத்தினால் என்ன ஆகும்? பந்து தண்ணீர் வந்த திசையிலேயே உருண்டு செல்லும்.

இப்பொழுது, அதே பந்தை எல்லா திசைகளிலும் ஒரே அளவு விசையுள்ள தண்ணீரை கொண்டு தாக்கினால் என்ன ஆகும்?

பந்து, அந்த இடத்திலயே சுழல ஆரம்பித்துவிடும். இதே தான் சுத்தவேளியிலும் நடக்கிறது.

சரி, சுத்தவெளி சுழல ஆரம்பித்து விட்டது, அடுத்த கட்டம் என்ன?

தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும் சூழ்ந்தழுத்த ஆற்றல் அந்த சுழலையை மிக மிக சிறிய அளவிற்கு இறுக்கி ஒரு நுண்ணிய சுழலையாக மாற்றுகிறது.

இந்த நுண்ணிய அதி வேக தற்சுழற்சி கொண்ட சுழலையே விண் துகள் (அல்லது) பரமாணு என்று மதிக்கப்படுகிறது.





இதே பரமாணு உயிர்களிடத்தில் உயிராகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த ஒரு துகளைத்தான் நவீன அறிவியலாளர்கள் "GOD particle" என்று பெயர் வைத்து தேடிக்கொண்டு இருக்கின்றனர்.

ஆனால் இந்த பரமாணு எந்த ஒரு அறிவியல் கருவிக்கும் அகப்படாது,

## இறுக்க ஆற்றலிலிருந்து தள்ளும் ஆற்றல்:

சுத்தவெளி தொடர்ந்து தன்னை இறுக்கிக்கொண்டே இருக்கிறது, இது வரை ஒரு புள்ளியில் குவிந்த ஆற்றல் முழுவதும் இறுகி குறுகி நுண்ணிய தற்சுழற்சி விரைவு கொண்ட விண் துகளாக மாறிவிட்டது,



இதற்கு மேலும் வந்து கொண்டே இருக்கும் அந்த இருக்க ஆற்றல் சுழலும் விண் மீது ஒரு உரசலை ஏற்படுத்துகிறது,

ஒரு கத்தியை சாணம் பிடிக்கும் பொழுது கோடானு கோடி நெருப்பலைகள் உருவாவது போல், விண் துகளுக்கும் சுத்தவேளிக்கும் ஏற்படும் உரசலினால் கோடானு கோடி விரிவலைகள் சுழலும் விண் துகளிலிருந்து பிறந்து விரிந்து சுத்தவெளியில் கலக்கிறது.

விண்ணின் சுழற்சியால் எப்பொழுதும் வந்து கொண்டே இருக்கும் இந்த விரிவலைகள் தள்ளும் சக்தியாக இயங்குகிறது, மற்றொரு விண் துகளை தன் அருகே சேர்க்காமல் தள்ளிநிறுத்துகிறது.

சுத்தவெளியின் இருக்க ஆற்றலே தள்ளும் சக்தியாகவும் பரிணமித்துள்ளது. (ஒன்றே பலவாச்சு).

## எலெக்ட்ரான்(Electron), ப்ரோடான் (Proton), நியூட்ரோன் (Neutron) எப்படி வந்தது?

தொடக்கத்தில் விண் துகள்கள் அதிவேக தற்சுழற்சி உடையது, தன் சுழற்சியினால் விளையும் தள்ளும் விசை மற்ற விண் துகள்களை நெருங்க விடாமல் செய்கிறது.

இந்த நிலையில் விண் துகள்கள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக தனித்தனியே இயங்கும், இந்த நிலையைத் தான் ஆகாசம் என்றும் விண் என்றும் குறிப்பிடுகிறோம்.

தொடர்ந்து வரும் சுத்தவெளியின் அழுத்தத்தால், விண்ணின் தற்சுழற்சி வேகம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே இருக்கும்,

ஏனென்றால் இது வரை ஒரு புள்ளியில் குவிந்த மொத்த ஆற்றல்தான் விண்ணாக சுழன்றது,

மேலும் மேலும் வந்து கொண்டே இருக்கும் சுத்தவெளியின் அழுத்தம், இது வரை குவிந்த அந்த ஆற்றலை கரைக்கிறது.

தள்ளும் சக்தியான விரிவலைகளை விண்ணின் கரைசல் என்று கூட கூறலாம்.

இவ்வாறு தள்ளும் விசை குறைய குறைய, இது போன்றே வெவ்வேறு காலங்களில் உருவான மற்ற விண் துகள்கள் நெருங்கி வந்து இயங்க ஏதுவான சூழ்நிலை ஏற்படும்.

ஏனென்றால், சுத்தவெளியின் சூழ்ந்தழுத்தும் ஆற்றல் எல்லா விண் துகளையும் நெருங்கி வர செய்கிறது,

ஆனால் விண்ணின் தள்ளும் விசை மற்ற விண் துகளை நெருங்க விடாமல் தள்ளுகிறது.

இந்த இருக்க ஆற்றலுக்கும் தள்ளும் ஆற்றலுக்கும் உள்ள வித்தியாசம் தான் இரண்டு விண் துகள்களுக்கு இடையில் உள்ள தூரத்தை நிர்ணயிக்கிறது.

இறுக்க ஆற்றல் எப்பொழுதும் ஒரே அளவிலே இருக்கும், ஆனால் தள்ளும் விசை விண்ணின் வயதிற்கு ஏற்றார் போல் அமையும். வெவ்வேறு காலங்களில் உருவான விண் துகள்களுக்கு ஒரே அளவான தற்சுழற்சி வேகம் இருக்காது

எந்த ஒன்று அண்மையில் உருவானதோ அதற்க்கு தற்சுழற்சி வேகம் மற்ற விண் துகளை விட அதிகமாக இருக்கும். வயதில் மூத்த விண் துகளுக்கு தற்சுழற்சி வேகம் குறைவாக இருக்கும்.

இவ்வாறு வெவ்வேறு தற்சுழற்சி கொண்ட விண் துகளை சுத்தவெளி சூழ்ந்தழுத்தும் பொழுது, தற்சுழற்சி அதிகம் கொண்ட விண் துகள் தற்சுழற்சி குறைவான விண் துகளை சுற்றிவரும் நிலை உருவாகும்.

இந்த விண் துகள் தொகுப்பைத்தான் அறிவியலாளர்கள் அணு (Atom) என்று அழைக்கின்றனர்.

சுற்றிவரும் விண் துகளை "எலெக்ட்ரான் (Electron)" என்றும், நடுவில் உள்ள வயதான விண் துகளை "ப்ரோடான் (Proton)" என்றும் அழைக்கிறோம்.

இந்த ப்ரோடான் துகளுக்கு மேலும் வயது அதிகம் ஆகும் பொழுது, அதன் தற்சுழற்சி வேகம் மிகவும் குறைந்து "நியூட்ரோன் (Neutron)" ஆகிவிடும்.

எலெக்ட்ரான் துகளும் ஒரு கட்டத்தில் தன் சுழற்சி வேகம் குறையும் பொழுது, ப்ரோடான் துகளாக மாறும். எங்கோ சுற்றிகொண்டிருக்கும் ஒரு விண் துகள் எலெக்ட்ரான் இடத்தை நிரப்பும்.

இவ்வாறு விண் துகள் ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு மாறிக்கொண்டே இருக்கும், அவ்வாறு மாறும் பொழுது, விண் துகளின் கூட்டு இயக்கத்தில் ஏற்படும் வெவ்வேறு திணிவு நிலைகளை காற்று, நெருப்பு, நீர், நிலம் என்ற நான்கு பூதங்களாக பிரித்து கூறுகிறோம்.

1. விண் – இந்த நிலையில் விண் துகள்கள் அதி வேக தற்சுழற்சி உடையது, ஒவ்வொரு துகளும் சுதந்திரமாக இயங்கும் .
2. காற்று – காற்றில் விண்ணின் தற்சுழற்சி "விண் களத்தில்" இருந்ததை விட குறைவு, ஆகையால் இங்கு விண் துகள்கள் "விண் களத்தில்" இருந்ததை விட நெருங்கி இயங்கும்.

3. அழுத்தக்காற்று (நெருப்பு) – நெருப்பில் விண்ணின் தற்சுழற்சி காற்றில் இருந்ததை விட குறைவு, ஆகையால் இங்கு விண் துகள்கள் காற்றில் இருந்ததை விட நெருங்கி இயங்கும் .

4. நீர் – நீரில் விண்ணின் தற்சுழற்சி நெருப்பில் இருந்ததை விட குறைவு, ஆகையால் இங்கு விண் துகள்கள் நெருப்பில் இருந்ததை விட நெருங்கி இயங்கும்.

5. நிலம் – நிலத்தில் விண்ணின் தற்சுழற்சி நீரில் இருந்ததை விட குறைவு, ஆகையால் இங்கு விண் துகள்கள் நீரில் இருந்ததை விட நெருங்கி இயங்கும்.

"ஒன்றுமில்லா ஒன்றுதான் இறுக்கச் சக்தி
ஓங்கியதோர் எழுச்சிநிலை அணுவாய்ப் போச்சு,
ஒன்றான இறுக்கம் அணுவில் எழுச்சியாயும்
ஊடுருவி நிறைந்த ஒரு கவர்ச்சியாயும்
ஒன்றுஇரண்டாகி அவை ஒன்றில் ஒன்றாய்
ஒவ்வோரணுவும் இயக்க நிலையமாகி
ஒன்றை ஒன்று ஈர்த்துக் கவர்ந்து இயங்கியங்கி
உண்டான மாறுதலே ஐம்பூதங்கள்." (வேதாத்திரி மகரிசி)

நாம் வாழும் இந்த பூமி, பஞ்ச பூதங்களின் கூட்டுக் கலவையே, இந்த பஞ்சபூதங்களையும் ஒன்றாக கலந்து உருட்டிக்கொண்டிருக்கும் அந்த அற்புத சக்தி யார்?

சுத்தவெளியின் தன்னிருக்கமே! சுத்தவெளி எல்லா விண் கூட்டங்களையும் சூழ்ந்து அழுத்தும் பொழுது, ஒவ்வொரும் துகளின் தற்சுழற்சி விரைவுக்கு ஏற்றார் போல் துகள்கள் ஒவ்வொன்றாக அடுக்கப்பட்டு ஒரு பெரிய விண் தொகுப்பை உருவாக்கும், இதையே நாம் கோள்கள் என்கின்றோம்.

சிவம் என்பது பிரபஞ்சம் வெட்டவெளி, விண்துகள், காந்தம், கோள்கள் என்று பாமரர்களும் புரிந்து கொண்டு சிவம் என்றும் பேரானந்த நிலையை அடைய பஞ்சபூத நவக்கிரக தவத்தின்

மூலமும், பஞ்சேந்தரிய தவத்தின் மூலமும் மகரிஷி விளக்கியுள்ளார்.

ஸ்ரீகிருஷ்ணனின் வாக்கு "யோக சேமம் லஉறாம் யகம்" இதே போல தியானம் ஜப நிலையில் உயர்த்த தெய்வ கடாட்சம் வரும் என்பது கருத்து.

சுத்த வெளியினுடைய சக்தியால் சுழற்சியால் வரக்கூடிய பிரபஞ்சத்தில் உள்ள எல்லா இயக்கங்களுக்கும் அடித்தளமாக உள்ள இது விஞ்ஞானம்.

# 12.அற்பதமான அமுத தாரைகள்

இறையுணர்வைச் சரியாகப் பெற்று விட்டோமானல் நமது வாழ்க்கையே அறநெறியாக அமையும்.

இறையனுவத்தை மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும் அவரவர்கள் பாணியில் விளக்குகின்றனர்.

தாங்கள் அடைந்த பேரின்பத்தை மானுடத்திற்கு மெய்ஞ்ஞான பார்வையில் மாணிக்கவாசகரும், மெய்ஞ்ஞான விஞ்ஞானப் பார்வையுடன் வேதாத்திரி மகரிஷியும் மொழிகின்றனர்.

மாணிக்கவாசகரது இறையனுபவம் திருவாசகத்தில் பல இடங்களில் கூறப்பட்டிருந்தாலும், அதன் திருவண்டப்பகுதியில்

"தடக்கையின் நெல்லிக்கனி எனக்கு ஆயினன்
சொல்லுவது அறியேன் வாழி முறையோ
தெரியேன் நாயேன் தான்எனச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்கு
அருளியது அறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்" (திருவாசகம் 3-162-164)

(தடம்கையின்- பெரிய கையின்கண் உள்ள. உள்ளங்கை நெல்லிக்கனிபோல இறைவன் எனக்கு முற்றிலும் பிரத்தியட்சமானான்.)

சுவானுபபூதியில் சிவானந்த போகத்தை அனுபவிக்கப் பெற்ற நான் அதைப்பற்றி எப்படி எடுத்துரைப்பது என்று அறிந்திலேன்.

இறைவா, நீ வாழ்வாயாக. என்னை நீ ஆட்கொண்ட முறையே அல்லவோ, நானறியேன்.

நீ என்னை ஆட்கொண்ட விதத்தை அற்பனாகிய நான் ஆற்றேன். எனக்கு ஒன்றும் விளங்கவில்லை.

ஆ!ஆ!! நான் மடிந்தேன். நீ அருள் புரிந்தது என் அறிவுக்கு எட்டாதிருக்கிறது. பருகப் பருக அது தெவிட்டாதது. உன்னை உன்னை அறிய போதுமெனாதது.

இறைவனை அடையப் பெற்று அவனிடத்திருந்து பெருக்கெடுத்து வருகிற பேரானந்தத்தை விளக்குதற்கு எந்தப் பக்தனுக்கும் இயலுவதில்லை.

அது சொல்லில் ஒரு பொழுதும் அடங்காது. அவனது மனித இயல்பு மடிந்து போகிறது. தெய்விக இயல்பு தோன்றுகிறது. ஜன்மம் சால்யமாகிறது.

செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து
உவாக்கடல் அளளுநீர் உள்ளகம் ததும்ப" (திருவாசகம்3-168-169)

செழுமையும் குளிர்ச்சியும் பொருந்திய பாற்கடலில் கிளம்பும் அலைகள் போன்றது இறைவனிடத்திருந்து வருகிற பேரானந்தம்.

நிறை நிலவன்று கடலில் நீா உயா்ந்திருப்பது போன்று என் உள்ளத்தினுள் ஆனந்தம் பொங்கி நிற்கிறது.

ஞானிகளுடைய அனுபூதி யாண்டும் ஒரே விதமானது. சமாதி நிலையில் வாய்க்கிற பேரானந்தம் பரந்த பாற்க்கடல் போன்றது.

அதில் கிளம்புகிற அலையை ஆனந்த லஉறரீ என ஆதி சங்கரா் விளக்கியருக்கிறாா்.

லஉறரீ என்னும் சொல் அலை எனப் பொருள்படுகிறது. இவ்வனுபூதியை உருவகப்படுத்திப் பரமன் பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பதாகப் புராணங்கள் பகருகின்றன.

பௌர்ணமியன்று ஆகர்ஷண சக்தியை முன்னிட்டுக் கடலில் நீர் உயர எழும்புவது இயற்கையின் நியதியாகும். அனுபூதிமானுடைய பேரானந்தம் அதனோடு ஒப்பிடப்படுகிறது.

வாக்கு இறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை" (திருவாசகம் 3-170-171)

சொல்லில் அடங்காத அமிர்த சொரூபமாமகிய ஆனந்தம் மயிர்க்கால் தோறும் ததும்பியிருக்கும்படி இறைவன் செய்தான். வினையேனது தசையினால் கொழுத்த - - - - - -
"குரம்பை தோறு நாயுடல் அகத்தே
குரம்பை கொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய..." (3-172-173)

உடம்புகள் அனைத்திலும் தகுதியற்ற என் உடலே இருப்பிடமாகக் கொண்டு சிவானந்தம் என்னும் தேனை இறைவன் பொழிந்தான். அப்படி நிறைந்த- - - - - -

"அற்புமான அமுத தாரைகள்
ஏற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது.." (திருவாசகம் 3-174-175)

வியக்கத்தக்க அமிர்த தாரைகளை எலும்பின் துவாரங்களிலேல்லாம் இறைவன் ஏறப் பண்ணினான். அதை முன்னிட்டு உருகுவதாகிய - -

"உள்ளம் கொண்டோர் உருச் செய்து ஆங்கு எனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன்.." (திருவாசகம் 3.176-177)


மனதைக் கொண்டு ஒரு வடிவத்தைச் செய்தாற்போல என்னிடம் அன்பு கசிந்தூறும் உடலை இறைவன் செய்தருளினன்.

இவ்வாறு, கிடைத்தற்கரிய அப்பேரின்பம் மகிழ்ச்சி திருவாசகத்தில் வெள்ளப் பெருக்காகக் காட்சிப்படுத்த முனைந்துள்ளது.

மாணிக்கவாசகரின் ஆர்ப்பாட்டமான இந்நிலை வேதாத்திரியத்தில்,

“அழுத்தமெனும் உந்தாற்றல் ஒன்றைக் கொண்டே
அணுமுதலாய் அண்டகோடி அனைத்துமாக்கி
வழுத்தும் ஓரறிவுமுதல் ஐந்தும் ஆறும்
வவைகையாய் உயிரினங்கள் தேற்றுவித்து
முழுத்திறனுடன் காத்து முடிக்கும் மேலாம்
முழுமுதற் பொருளே நம் அறிவாய் ஆற்றும்
பழுத்தநிலை வரும்வரையில நீ நான் என்றோம்
பதமடைந்மேன் ஒன்றானோம் பரமானந்தம்.” (ஞான.பா.3)

என அமைதியாகக் காட்டப்பட்டுள்ளது. (இறையுணர்வும் அறநெறியும்)




அனுபவம் ஒன்றாயினும் அவரவர் இயல்பிற்கேற்ப அது வெளிப்படுத்தபட்டுள்ளதை இங்கு நாம் பார்க்கலாம்.

பொன்னால் செய்யப்பட்ட ஒரு மோதிரத்தை, மோதிரம் என்றும் சொல்லலாம்.

அது எதனால் ஆக்கப்பட்டது என்ற கருத்தில் பொன் என்றும் சொல்லலாம்.

பொன் என்றாலும் மோதிரம் என்றாலும் ஒன்றே. பொன் அடைந்துள்ள குறிப்பிட்ட மாறுதலை மோதிரம் என்று கூறுகிறோம்.

அதே போன்று இறைநிலை என்ற முழுமுதற் பொருள் அதன் பரிணாமச் சிறப்பால் அடைந்துள்ள மாறுதல்களைத் தனித்தனியாக “விண்” என்றும் பஞ்ச பூதங்கள் என்றும், கோள்கள் என்றும், உயிரினங்கள் என்றும் கூறுகிறோம்.

அதே போன்ற இறைநிலையை இயற்கை என்றாலும், அது அடைந்துள்ள தன்மைகளைக் குறிபபிட்டு தனித்தனிப் பெயரால் அழைத்தாலும் தரும்.

தனித் தனியே பிரித்துப் பேசுவது “விண்ணறிவு” பகுத்துணர்வு. அனைத்தையும் இணைத்து ஒரு சொல்லால் கூறுவது “மெய்யறிவு”

இறைவனுடைய திருஉருவமாக இந்தப் பேரண்டம் முழுமையும் உணர்ந்து உணர்ந்து நினைந்து நினைந்து பழகிக் கொள்ள வேண்டும்.

இப்போது அந்த உண்மையை உணர்ந்து கொள்வது என்பது சிரமமில்லை. இதற்கு மொழிவழி விளக்கம் என்று பெயர்.

அந்த ஒன்றை நேர்முகமாக ஒரு குழுவின் மூலம் பெறும் பயிற்சியின் மூலமாக மனதை அதன் அலை விரைவைச் சிறுகச் சிறுகக் குறைத்து நிலைப்படுத்தி, அறிவாக உள்ள தானே அதுவாகி காண்பது மெய்யுணர்வு.

தானே அதுவாகி அறிந்து கொள்ளக் கூடிய நிலையிலேதான் அவனே நான், நானே அவன் என்று உணரக்கூடிய தெளிவு உண்டாகிறது. கடலில் நீர்தான் அலையாக இயங்குகிறது. அலை நின்றால் நீர்தான்.

அதுபோல நிலையாகிய இறைவெளி உயிர்த்துகள் மையத்தில் அறிவாக இருக்கிறது.

அது சீவகாந்த ஆற்றலால் படர்க்கை எய்தி அலையாக இயங்குகிறது.

அலை நிலையில் மனம். இருப்பு நிலையையில் அறிவு (மெய்ப்பொருள்) அந்த நிலையை அறிவதற்கு என்ன செய்ய வேண்டும்.

எங்கே இருந்து அறிவது என்றால், எல்லாவற்றையும் அறிவது எது? மனத்தின் மூலமாக அறிவதான் அறிகிறது.

மனதுக்கும் அறிவுக்கும் உள்ள ஒரு தொடர்பு என்ன என்றால் அலையும் நிலையும் போன்றதோ, மீண்டும் அதை ஆழமாக நினைவு கொள்வோம்.

கடலில் அலையைப் பார்க்கிறோம். அந்த அலை எது என்று பார்த்தீர்களானால் நீர்தான் அசைகிறது. அது அலை எனப்படுகிறது.

மேல் பக்கம்தான் அந்த அசைவு. உள்ளே செல்ல செல்ல நீர் அசையாமல் இருக்கிறது.

அப்படி அசையாத நீராக இருக்கக்கூடிய நிலையிலே இறைநிலை என்று சொல்கிறோம்.

அசையுமிடத்திலே அலை என்கிறோம். அங்கே நிலைத் நிலையில் அறிவு. இங்கே அலையும் செயலில் மனம்.

மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும் இறையனுவத்தை அடைந்தது போல் நாமும் இறையனுபவத்தை பெற்று ஆனந்தமாக வாழ்வோமாக.

# 13. உற்றாரை நான் வேண்டேன்

இரண்டு பெரும் சிந்தனைச் சிகரங்களுக்கிடையே அறியப்படும் முரண்பட்ட எண்ணங்கள் இங்கு ஒப்பாய்வு செய்யப்படுகிறது.

இறைவனின் ஆனந்தக் களிப்பில் திளைத்த மாணிக்கவாசகர்,

"உற்றாரை யான்வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தா உன் குரை கழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே" (556)

என்று இறை உணர்விலேயே நீந்திக் களிப்பதைத் திருவாசகம் காட்டுகிறது.

ஒரு கிராமத்தில் வசித்து வந்த ஒரு மனிதன் இறந்து விட்டான். அவன் அதை உணரும் போது கையில் ஒரு பெட்டியுடன் கடவுள் அவன் அருகில் வந்தார்.

கடவுள்: “வா மகனே........நாம் கிளம்புவதற்கான நேரம் நெருங்கி விட்டது.......”

ஆச்சரியத்துடன் மனிதன் “இப்பவேவா? இவ்வளவு சீக்கிரமாகவா? என்னுடைய திட்டங்கள் என்ன ஆவது?”

கடவுள்: “மன்னித்துவிடு மகனே........உன்னைக் கொண்டு செல்வதற்கான நேரம் இது.........”

மனிதன் : “அந்தப் பெட்டியில் என்ன உள்ளது?”

கடவுள்: “உன்னுடைய உடைமைகள்.........”

மனிதன் : “என்னுடைய உடைமைகளா!!!.......அதாவது என்னுடைய பொருட்கள், உடைகள், பணம்,............?”

கடவுள்: “இவை அனைத்தும் உன்னுடையது அல்ல........ அவை பூமியில் நீ வாழ்வதற்கானது.........”

மனிதன் : “என்னுடைய நினைவுகளா?............”

கடவுள்: “அவை கண்டிப்பாக உன்னுடையது கிடையாது......... அவை காலத்தின் கோலம்........”

மனிதன் : “என்னுடைய திறமைகளா?...........”

கடவுள்: “அவை கண்டிப்பாக உன்னுடையது கிடையாது......... அவை சூழ்நிலைகளுடன் சம்பந்தப்பட்டது.......”

மனிதன் : “அப்படியென்றால் என்னுடைய குடும்பமும் நண்பர்களுமா?......”

கடவுள்: “மன்னிக்கவும்........... குடும்பமும் நண்பர்களும் நீ வாழ்வதற்கான வழி..........”

மனிதன் : “அப்படி என்றால் என் மனைவி மற்றும் மக்கள்?”

கடவுள்: “உன் மனைவியும் மக்களும் உனக்கு சொந்தமானது கிடையாது......... அவர்கள் உன் இதயத்துடன் சம்பந்தப்பட்டவர்கள்............”

மனிதன் : “என் உடல்?...........”

கடவுள்: “அதுவும் உன்னுடையது கிடையாது.......... உடலும் குப்பையும் ஒன்று.........”

மனிதன் : “என் ஆன்மா?”

கடவுள்: “இல்லை........அது என்னுடையது..........”

மிகுந்த பயத்துடன் மனிதன் கடவுளிடமிருந்து அந்தப் பெட்டியை வாங்கி திறந்தவன் அதிர்ச்சிக்குள்ளாகிறான்.

காலி பெட்டியைக் கண்டு.......... கண்ணில் நீர் வழிய கடவுளிடம் “என்னுடையது என்று எதுவும் இல்லையா?” எனக் கேட்க,

கடவுள் சொல்கிறார், “அதுதான் உண்மை. நீ வாழும் ஒவ்வொரு நொடி மட்டுமே உன்னுடையது.

வாழ்க்கை என்பது நீ கடக்கும் ஒரு நொடிதான். ஒவ்வொரு நொடியையும் சந்தோஷமாக வாழ்வதுடன், நல்ல செயல்களை மட்டும் செய். எல்லாமே உன்னுடையது என்று நீ நினைக்காதே........”

- ஒவ்வொரு நொடியும் வாழ்
- உன்னுடைய வாழ்க்கையை வாழ் மகிழ்ச்சியாக வாழ மறக்காதே.......
- அது மட்டுமே நிரந்தரம்.......
- உன் இறுதிக் காலத்தில் நீ எதையும் உன்னுடன் கொண்டு போக முடியாது..........




“இறைவா இன்று நான் நிறைவு பெற்றேன்.” என்று இறையருள் கூடிய வேதாத்திரியார்.

“இன்றுநான் நிறைவு பெற்றேன். இறைவா!
இன்றுநான் நிறைவு பெற்றேன்.

நின்றேன் நடந்தேன் உன்னை நினைந்துதேடி யலைந்தேன்
சென்றேன் பல இடங்கள் சிந்தனை விரிந்த பின் - இன்று

இறைவெளி காட்சியாக எல்லோரும் பார்த்துகொண்டே
மறைவாய்உள் ளாய்நீயென்று மாற்றுரை பகர்கின்றார்
பிறைமுதலாய்ச் சந்திரன் பெருத்து முழுவதாம்போல்
குறையறி வைவிரித்தால் கொள்ளலாம் உனையுள்ளே - இன்று

இருப்புநிலை வெளியாய் இயக்கஅலை விண்ணாகி
உருப்பொருள் அத்தனையும் உருவான தறிந்திட்டேன்
கருப்பொருள் காந்தமாகி கண்டுகேட் டுண்டுணரும்
திருப்பொருள் மனமாகத் திகழ்வதை உணர்ந்தபின் - இன்று

பேரியக்க மண்டலம் பெரிதுதான் என்றாலும்
ஓரியக்க மாய்உந்தன் உடலாய்அதைக் காண்கின்றேன்
சீரியக்கங்கள் எல்லாம் சிந்திக்கப் பெரும்வியப்பு
யாரியக்க வல்லாரே உனையன்றி இப்பேரண்டத்தை - இன்று

அன்பும் கருணையுமாய் அகன்ற நிலையிலுள்ளாய்
என்மனதை விரித்தேன் இணைத்துக் கொண்டாய் உன்னுள்ளே

கன்ம வினைகளெல்லாம் கழிந்தன உணர்கின்றேன்
உன்னையறிந்து உய்ய உலகோர்க்குத் தொண்டுசெய்வேன் - இன்று

என்று சமூகப் பணிக்குத் துணிகிறார்.

## முக்தியைவிட தொண்டே முக்கியம் விவேகானந்தர்.

தன்னுடைய குருதேவர் இராமகிருஷ்ணரின் உபதேசங்களை உலகெங்கும் பரப்புவது தமது தலையாய கடமை என விவேகானந்தர் அறிந்திருந்தார்.

இனி அத்தகைய பணிகளில் தமது இளம் சீடர்களை ஈடுபடுத்தும நோக்கத்துடன் விரஜாநந்தரையும் பிரகாசானந்தரையும் சமயப் பணி புரிவதற்காக டாக்கா செல்லுங்கள் என்று உத்தவிட்டார்.

இளைய சீடர்களான அவர்கள் இருவரும் சுவாமிஜியின் ஆணையை எவ்விதம் செயலாக்குவது என்பது புரியாமல் திகைத்தார்கள்.

“சுவாமிஜி! நான் எதையும் தெரிந்து கொள்ளவே இல்லையே. பிறகு எவ்விதம் பிரசாரம் செய்ய் இயலும்?” என்றார் விரஜாநந்தர்.

“எனக்கு எதுவும் தெரியாது என்று சொல். அதுவே பெரிய பிரசாரம்தான்,” என்றார் விவேகானந்தர்.

“நான் என்னுடைய முக்தியை இன்னும் தேடவில்லையே என்று மீண்டும் விரஜாநந்தர் தமது சந்தேகத்தைக் கிளப்பினார்.

சுவாமிஜியின் பதில், முழக்கமாக அமைந்தது. தன்னுடைய முக்தியை மட்டுமே நாடுபவன் நரகத்தை அடைவான். பிறருக்கு உளப்பூர்வமாக சேவை செய்பவனே மேலானவன் என்ற கருத்தை விவேகானந்தர் சீடரின் உள்ளத்தில் பதிய வைத்தார்.

பின்பு அவ்விரு சீடர்களையும் தம்முடன் பூஜை அறைக்கு அழைத்துச் சென்றார்.

மூவரும் தியானத்தில் ஆழ்ந்தார்கள்.

சுவாமிஜி அப்போது தமது சக்தியை அவர்களுக்கு அருளினார். பின்பு அவர்களுக்குப் பலவிதமான போதனைகளைச் செய்தார்.

விழிமின், எழுமின், செய்மின் என்று கூறி துணிவுட்டினார். சுவாமிஜியின் அன்பு வெள்ளத்திலும் அருள் வெள்ளத்திலும் அவர்கள் திளைத்தனர்.

அவர்கள், தயக்கமும் சந்தேகமும் நீங்கப் பெற்றவர்களாகி, சமுதாயப் பணியும் சமயப்பணியும் புரியும் உயர்ந்த நோக்கத்துடன் டாக்கா நகருக்குப் பயணமானார்கள்.

எதிர்பாராது தேடாதே கிடைத்த பேரின்பப் பெருங் கருணையால் உளம் நெகிழ்ந்த மாணிக்கவாசகருக்கு, அதுவரை செய்து வந்த பொதுப் பணியினின்று விடுபட்டு அருள்பாலித்த அண்ணலோடு ஒன்றுவது மட்டுமே பெரு நோக்கானதைத் திருவாசகம் காட்டுகிறது.

ஏழ்மைச் சூழலில் பல்வேறு இன்னல்களுக்கிடையே வாழ்ந்துகொண்டு, இறைவனைத் தேடிய முயற்சியில் அடைந்த வெற்றி, தன் போன்று இச் சமுதாயமும் ஈடேற வேண்டும் என்ற அரியதொரு பெருநோக்கை வேதாத்திரியிடம் விதைத்தது.

தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதே வேதாத்திரிய கோட்பாடு.

அதுவே இன்று வேதாத்திரியம் எனும் “கற்பகக்கா”வாக மானுடத்திற்குக் கிடைத்துள்ளது.

இவ்வுலக வாழ்வில் இருந்து விடுபட்டு இறைவனை அடைவதை, பிறவாப் பேரின்பம் பெறுவதைத் திருவாசகம் இலக்காகக் கொண்டுள்ளது.

இறையுணர்வுடன் இவ்வுலக வாழ்வைச் சுவைத்துக் கொண்டே, பிறருக்கும் துணை நின்று நாடும் வீடும் நலம்பெறக் கண்டு

முழுவாழ்வின் நிறைவில் இறையடியடைதலை வேதாத்திரியம் வேண்டுகிறது.

“மக்கட் தொண்டே மகேசன் தொண்டு” என்னும் முன்னோர் மொழியை இது புதுப்பித்துள்ளது. அதன் மெய்ப்பொருள் பேசுகிறது எனலாம்.

வேதாத்திரியாரைப் பாமர மக்களின் ஞானியாகப் போற்றுவதற்கும் இதுவே காரணமாகும்.

துறவிகள் இருவர் சிவபூஜைக்காக கங்கை நீரை கமண்டலத்தில் எடுத்துக் கொண்டு கோயிலுக்குச் சென்றனர்.

அவர்கள் செல்லும் வழியில் ஒருவன் மயங்கிக் கிடந்தான். அதனைக் கண்ட ஒரு துறவி, உடனே அவனைத் தூக்கி மடியில் போட்டு அபிஷேகத்திற்காக எடுத்து வந்த நீரை அவன் முகத்தில் தெளித்தும்; அருந்தக் கொடுத்தும் அவன் மயக்கத்தைத் தெளிவித்தார்.

அதற்கு இளந்துறவி, சிவன் அபிஷேகத்திற்காக எடுத்து வந்த நீரை அசுத்தப்படுத்திவிட்டீர்களே, சிவன் புண்ணியம் இனி உங்களுக்குக் கிடைக்காதே! என்று கூறினார்.

அதற்கு மூத்த ஞானி, சிவன் அபிஷேகத்திற்காக எடுத்து வந்த நீர் வழியில் ஒருவனின் உயிரைக் காப்பாற்ற உதவியது பெரிய புண்ணியம் என்று நான் கருதுகிறேன்.

ஒரு வேளை அது பாவம் என்றால் அதன் பலனைப் பெறுவதில் எனக்கு எந்த வருத்தமுமில்லை.

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு. அதன்படியே நடந்து கொண்டேன் என முடிக்க, இளம் துறவி மெய்சிலிர்த்தார்.

# 14. மகான்கள் பார்வையில் பெண்கள்

ஒவ்வொரு மனிதனும் பெண் வயிற்றில் உருவாகி அவர்களது இரத்தத்தையே பாலாக உண்டு, மேலும், தாயாக, சகோதரியாக, தாரமாக, மகளாக என்று பல உறவு முறைகளில் பெண்மையின் உதவியோடு வாழ்வதால், அத்தகைய பெண்ணின் பெருமையை அனைவரும் உணர வேண்டுமன்றோ..” – வேதாத்திரியம்

இத்தனைச் சிறப்பு வாய்ந்த பெண்களை பின் தோன்றிய மதங்கள் அவமதித்தன.

மதங்களின் பார்வையில் பெண்களை இரண்டாம் பட்சமாக பார்த்தனர். புனித வேதங்களை பெண்கள் படிக்கக் கூடாது என்றனர்.

தவமே பெண்களுக்கு கூடாது என்றனர். இன்னும் போய் சில நாடுகளில பெண்களுக்கு ஓட்டுரிமை கிடையாது என்று பெண்களைப் புறக்கணித்தனர்.

இறைவனை அடையத் தடையாய் நிற்பனவற்றை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என என்றாகப் பிரித்தனர்.

இதனால் பக்திப் பனுவல்களில் பெண்களை இழுத்துரைக்கும் பாங்கினைக் காணலாம்.

திருவாசகத்துள்ளும், “செழிகின்ற தீப்புகு வீட்டிலின் சின்மொழியாரில் பன்னாள் விழுகின்ற என்னை விடுதி கண்டாய்” (109) என அமைந்துள்ளது .

“செழிகின்ற தீப்புகு விட்டிலின்
    சின் மொழியாரில் பல் நாள்
விழுகின்ற என்னை விடுதி கண்டாய்
    வெறி வாய் அறுகால்
உழுகின்ற பூ முடி உத்தர
    கோசமங்கைக்கு அரசே

வழிநின்று நின் அருள் ஆர் அமுது
ஊட்ட மறுத்தனனே" " (திருவாசகம் 109)

வளர்கின்ற தீயில் விட்டில் பூச்சி வீழ்வது போன்ற நான் காமக் கனலில் உழல்கிறேன்.

வண்டு மொய்க்கும் மணம் கமழும் பூவை முடியில் அணிந்திருக்கும் இறைவா, அத்தகைய என்னை நீ வழிமறித்து ஆட்கொண்டு, அருள் நிறைந்த அமிர்தத்தை வழங்கினாய்.

நானோ அதை ஏற்க மறுத்தேன். ஆயினும் நீ என்னைக் கைவிட்டு விடாதே – என்று மாணிக்கவாசகரும் புலம்பியவர்தான்.

இருப்பினும் பெண்மைக்குப் பெருமை யளிக்கும் விதமாகத் திருவெம்பாவை, திருச்சாழல், திருப்புவல்லி, திருப்பாற்சுண்ணம், திருப்பொன்னுசல், திருவம்மானை போல்வன அமைகின்றன.

இவை பெண்களின் நோன்பு, தொழில் மற்றும் வியைாட்டுகளை முன்னிறுத்தி அவற்றின் வழி பெண்கள் இறைவனின் பெருமை பேசுவதாகவும் அவன் அருள் வேண்டி நிற்பதாகவும் சிறக்கின்றன.

"பூ இயல் வார் சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்து உடன் பாடுமின்கள்
கூவுமனி தொண்டர் புறம் நிலாமே
குனிமின் தொழுமின் எங்கோன் எம்கூத்தன்
தேவியும் தானும் வந்து எம்மை ஆளச்
செம்பொன் செய் சுண்ணம் இடித்து நாமே" (திருவாசகம் 196)

அழகு வாய்ந்த, நீண்ட ஜடையையுடைய எம்பிரானுக்கு நயமான கதம்பப்பொடி இடிக்க வேண்டும்.

மாப்பிஞ்சின் பிளவையொத்த கண்களை யுடையீர், வாருங்கள். வந்து எம்மோடு சேர்ந்து பாடுங்கள்.

இனிய தொண்டர்கள் வெளியே காத்திராதபடி அவர்களை அழையுங்கள்.

கூத்தாடுங்கள். போற்றுங்கள். எம் இறைவனும் எம் கூத்தனமாகிய சிவபெருமான், தேவியும் நானுமாக, எழுந்தருளி எம்மை ஆளும் பொருட்டுச் செம்பொன் நிறமுள்ள கதம்பப் பொடியை நாம் இடிப்போம்.

மாணிக்கவாசகர், பெண்ணின் பெருமைப் பேசுவதற்கு இப்பாடலை உதாரணமாகக் காட்டலாம்.

ஆணாதிக்கச் சமுதாயத்தினின்றும் பெண்ணின் விடுதலையை மேன்மையைப் பெரிதும் வேண்டுகின்ற தன்மை வேதாத்திரியத்தில சிறப்பாக அமைந்துள்ளது.

- பெண்ணினத்துக்குப் பெருமை தரும் வகையில திருவாசகம், அவர்தம் தொழில், நோன்பு, ஆடல் பாடல் வழி இறையுணர்வை, இறையருளை வெளிப்படுத்த, வேதாத்திரியம் பெண்ணின் பெருமையை விளங்க வைத்துள்ளதுடன் இறைமையுடனும் இணைத்துப் பார்த்துள்ளது.
- சமுதாயத்தில் அவர்களுக்குரிய இடத்தினையும் உரிமையினையும் விதந்தோதியுள்ளமையால் இப்பண்பு திருவாசகத்தின் வளர்ச்சி நிலையாகக் காட்டப்பட்டுள்ளது.
- அரசியல், பொருளாதரம், மதம் என்ற மூன்று துறைகளிலும் பெண்களின் மதிப்பு குறைக்கப்பட்டே கூறப்பட்டிருக்கிறது எனக் கவலும் வேதாத்திரியம், "சிந்திக்கும் ஆற்றலுடைய மனிதர் எவரென்றாலும் பெண்மையின் மதிப்பை உணரவேண்டியது மிகவும் அவசியம்.

- பெண் என்பவள் மிகச் சிறப்பானவள், அன்பின்அடையாளமாய் திகழ்பவள், அத்தனை உயிர்களையும் தோற்றுவிப்பது பெண்ணினமே.

இத்தயை பெண்ணின் பெருமையை உணர்ந்த  நம் முன்னோர்கள் அவர்களின் சிறப்பை இவ்வுலகிற்கு பறைசாற்றுவதற்காகவே இந்த பாரதநாட்டை பாரதத்தாய் நாடு என்றார்கள்.

ஆறுகளுக்கு கூட கங்கை, யமுனை, காவேரி, கோதாவரி என்று பெண்களின் பெயர்களையே சூட்டி மகிழ்ந்தனர்.

சாதாரணமாகவே பெண்மைக்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்று நான்கு குணங்களை வர்ணிப்பார்கள்.

மேலும் ஒரு தெய்விகக் குணம், தியாகம் என்பது பெண்மையிலேயே இயல்பாக அமைந்திருக்கிறது என்பதையும் நினைவு கொள்ள வேண்டும்.

“இத்தகைய பெண்ணினத்திற்கும் பொருளாதாரத்  துறையில் சமத்துவம் அளிக்காமல் எக்காலத்தும் அடிமையாகவே நடத்துகின்ற ஆண் மக்களின் செய்கை இறைநிலைக்கே செய்யக் கூடிய முரண்பட்ட காரியம். பாவ காரியம் ஆகும்.

மனித குலத்தில் நன்றி என்ற உணர்வு நல்ல பயனை அளிப்பாதாகும்.  இந்த அடிப்படைத் தத்துவத்தில் பெண்மையின்பால் நன்றியோடு இருப்பது ஆண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமையாகும்.

சென்ற காலத்தை நினைத்து வருந்த வேண்டாம்.  எவரையுமே குறைகூற வேண்டாம்.

பெண்மையின் மதிப்பு உணர்ந்து அதற்கேற்றவாறு மதநூல்கள், சட்ட நூல்கள், அறிவு நூல்கள் இவற்றையெல்லாம் திருத்த வேண்டிய பொறுப்பு சமுதாயத்தில் சிந்தனையாளர்கள், அறிஞர் பெருமக்கள்

இவர்களின் தவிர்க்க முடியாத கடமை ஆகும்." எனப் பெண் முன்னேற்றம் பற்றி வேதாத்திரியம் ஆழமாகவும் சிந்தித்துள்ளது.

## மனைவி நல வேட்பு நாள் (AUG 30) – மகரிஷி

உலகில் இதுவரை தந்தை நாள் (□□□□□□□□ □□□), தாயார் நாள் (□□□□□□□□ □□□) தனித்தனியே கொண்டாடுகிறார்கள்.

சுமங்கலி பூஜை என்றளவிலே கணவன் நல வேட்பு நாளும் கொண்டாடுகின்றார்கள்.
மனைவி நல வேட்பு நாள் எந்த ஊரிலேயும் இல்லை. இது ஒரு நன்றி கெட்டதனம் இல்லையா?

இது என் மனதை உறுத்திக் கொண்டே இருந்தது. ஆனாலும், ஒருவர் தலையிட்டுச் செய்தால் மட்டும் போதாது.

இது நாடு முழுவதும் ஆண் மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

பெண்மையின் பெருமையை உணர வேண்டும் என்ற மனதோடு ஆராய்ச்சி செய்த போது இந்த ஆண்டு என் மனைவியினுடைய (அருள் அன்னை லோகாம்பாள்) பிறந்த நாள் 30.8.ல் வந்தது. அன்பர்களிடம் சொன்னேன்.

என் மனைவியின் பிறந்த நாளையே வைத்துத் தொடங்கி மனைவி நல வேட்பு நாள் கொண்டாடலாம்.

இதையே வைத்துக் கொண்டு, இது முதல் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 30 ஆவது நாளை மனைவி நல வேட்பு நாளாகக் கொண்டாடுவது நம் சங்கத்தின் வழக்கமாக வரட்டும். பிறகு உலக நாடுகளிலும் பரவட்டும் என்றேன்.

ஆண்களும், பெண்களும் உற்சாகமாக அதை ஏற்றுக் கொண்டு பல இடங்களில் கொண்டாடுகிறார்கள்.

நீங்களும் உங்கள் வாழ்க்கைத் துணையை நன்றியோடு வாழ்த்தி இக்கவியைச் சொல்லி மகிழுங்கள்.

"பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரை விட்டுப்
பிரிந்து வந்து,பெருநோக்கில்கடமையறம் ஆற்றப்,
பற்றற்ற துறவியெனக் குடும்பத்தொண்டேற்றுப்
பண்பாட்டின் அடிப்படையில் எனைப் பதியாய்க்கொண்டுஎன்
நற்றவத்தால் என் வாழ்கைத்துணையாகிப் பெண்மை
நல நோக்கில் அன்போடு கருணை இவை கொண்டு
மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கிறேன் வாழ்த்தி மகிழ்கின்றேன்" (மகரிஷி)

எனப்பாராட்டி நிற்கவும் வேதாத்தரியார் கவி புனைந்து திளைத்திருப்பது எண்ணி மகிழத்தக்கதாம்.

"பெண்ணினத்தின் பெருமதிப்பை உணர்ந்தே உள்ளேன். பேருலகில் வாழுகின்ற மக்கள் எல்லாம் பெண்ணினத்தின் அன்பளிப்பே எனில் வேறென்ன பெருமை இதைவிட எடுத்துச் சொல்லுவதற்கு?" எனும் இவரின் பெண் மேம்பாடு பற்றிய சிந்தனைகள் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே தோன்றி வளர்ந்துள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## 15.அறிவறிந்தோர் சிவமாவார்

வளர்ப்போர் சொல்லிக் கொடுத்ததைத் திருப்பித்திருப்பிச் சொல்லும் கிளியைப் போன்று, தன் தாயார் சுட்டிக்காட்டிய ஒருவன் தான் தன் தகப்பன் என்று உறுதியாகச் சொல்லும் மகனின் மனோநிலை போன்ற பெரியோர்களால் எழுதப்பட்டுள்ள் கருத்துக்களே சரி என்று நம்பி உறுதி கொண்டிருக்கம் நிலையே பக்தி.

அறிவு அறிவுக்கு அடிமையாவதே பக்தி. அறிவை அறிவால் அறியப் பழகுதல் யோகம். அறிவை அறிவால் அறிந்த நிலையே முக்தி. அறிவை அறிந்தோர் அன்பின் அறமே ஞானம்.

இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்தல் திருவாசகம் காட்டும் இறைநெறி, பக்தி நெறி. இங்கு அறிவிற்கு வேலையில்லை. இதனை

“வேண்டதக்கது அறியோய் நீ !
   வேண்ட முழுதும் தருவோய் நீ!
வேண்டும் அயன்மாற்கு அறியோய் நீ!
   வேண்டி என்னைப் பணி கொண்டாய்!
வேண்டி நீ யாது அருள்செய்தாய்
   யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்று உண்டென்னில்,
   அதுவும் உன்தன் விருப்பன்றே (499)

“அன்றே என்றன் ஆவியும்
   உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
   கொண்ட போதே கொண்டிழலையோ
இன்றோர் இடையுறு எனக்கு உண்டோ
   எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
   நானோ இதற்கு நாயகமே” (500)

என்ற பாடல்கள் உணர்த்துகின்றன.

எண்ணம், சொல், செயல் அவற்றின் விளைவுகள் என அனைத்துமே இறைவன் வழிப்பட்டதாக, அவனின் இயக்கமாகிறது.

இதனால்அங்கே விருப்பு வெறுப்பற்ற மனநிலை, இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையே இடைவெளியற்ற நிலை, இருவரும் ஒன்றான நிலை உருவாகிறது.

திருவாசகத்தின் “உங்கையிற்பிள்ளை உனக்கே அடைக்கலம் (173) என்ற இவ்வடைக்கலம் பண்பு, வேதாத்திரியத்தில் அறிவாக உணர்த்தப்படுகிறது. உயிரும் இறையும் கலந்த நிலையை,

அறிவறிந்தோர் சிவமாவார்; அன்பு ஊறும்
    அறம்செழிக்க அவ்வறிவே நல்லுரம் ஆம்;
அறிவினது ஆற்றல் ஐம் புலன்கள்;
    அனுபவத்தில் சிக்கிவிட வேண்டாப் பற்றாம்;
அறிவறிய மனத்துக்கும் செயலுக்கும் ஓர்
    அரணாகும் பக்தி, யோக நெறிஇரண்டும்,
அறிவறிந்த அவ்வழியில் செயல்க ளாற்றும்
    அகன்ற பேரறமே மெய்ஞ் ஞானமாகும்” (வேதாத்திரி மகரிஷி)

என வேதாத்திரி மகரிஷி காட்டுகிறார்.

## பக்தியும் ஞானமும்

அறநெறியை பிறர் உணர்த்தித் தான் பின்பற்றும் முறை 'பக்தி' வழியாகும். தானே உணர்ந்து பொறுப்போடு ஆற்றி வாழும் வழி “ஞானவழியாகும்”.

இன்றைய சூழலின் ஆன்மீகத்தில் பலர் பக்தியும் ஞானமும் வெவ்வேறு பாதைகள் என்றும், ஞானத்தைக் காட்டிலும் பக்தி கீழானது என்னும் தவறான கருத்தில் உள்ளனர்.

ஒவ்வொரு சாதகனுக்கும் பக்தியும் ஞானமும் இரண்டுமே அவசியமானவை.

“ஞானம்” என்றால் அறிவு. ஞானம் நம் கண்களைப்போன்றது. நாம் செல்ல எது சரியான வழி என்பதனை உணர்த்துவது ஞானம்.

பக்தி என்பது நம் கால்களைப் போன்றது. சரியான வழியில் நடக்க உதவும். பக்தி இல்லாத ஞானி முடவனும், ஞானம் இல்லாத பக்தன் குருடனும் ஆவார்கள்.

ஞானமில்லாத பக்தி துன்பத்தை கொடுக்கும். ஞானமும் பக்தியும் சேர்ந்து இருந்தால் பேரின்பத்தை (□□□□□) கொடுக்கும்.

ஒரு பறவைக்கு எவ்வாறு இரண்டு சிறகுகளும் அவசியமோ, ஒன்றில் ஒன்று ஏற்றத்தாழ்வு அற்றதோ, அவ்வாறே ஒரு சாதகனுக்கு பக்தியும் ஞானமும் இரண்டுமே இன்றியமையாதவை.

பக்தியும் ஞானமும் இரண்டு கண்களைப் போன்றது. ஒன்று இல்லாவிடினும் அவன் அறிவுக்குருடனே.

"உண்மையான பக்தியும் ஞானமும் ஒன்றே" என்பார் ராமகிருஷ்ணர்...

ஆத்மஞான சுகமும், உத்தமுமான பக்திச் சுவையும் ஒன்றேயாகும். பக்தியும், ஞானமும் ஆத்மாவின் இரு கண்களேயாகும்.

இன்றைய நடைமுறையில் ஆன்மிகப் பயணத்தில் பல எதிர்ப்புகளும், ஐயப்பாடுகளும், தேக்கங்களும் காணப்படுகின்றன.

இதற்குக் காரணம் அறியாமை என்று சில முற்றும் உணர்ந்த ஞானிகள் சொல்லிக் கொள்கிறார்கள்.

உண்மையில் இந்த முரண்பாடுகளுக்குக் காரணம் நம் முன்னோர்களும், அதற்குப் பிறகு அவர்கள் வழிமுறைகளை கடைபிடித்த சுயநலவாதிகளும்தான்.

பெரும்பாலான ஆன்மிக விஷயங்களை தங்கள் நல்வாழ்விற்காக அவர்கள் திருத்தி அமைத்து விட்டார்கள். அதன் விளைவுகளே இந்நிலைகள்.

மேலும் நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களுக்கு இத்தகைய விஷயங்கள் சென்று சேராமல் பார்த்துக் கொண்டார்கள்.

நம் முன்னோர்களும் அவரவர் கடை பிடிக்கும் உபாயங்களே உண்மையானது என்றும் மற்றவைகள் பிரயோஜனமற்றவை என்று ஒருவருக் கொருவர் மற்றவர்களை இழிவு படுத்திக் கொண்டார்கள்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் இவையெல்லாம் ஒன்றுக்கடுத்து ஒன்று என்று உயர்த்திவிடும் படித்தரங்களே அல்லாது அவைகள் தனித்தனி மார்க்கங்களல்ல.

சரியை வழியில் செல்பவர் பக்தர், கிரியை வழியில் செல்பவர் கருமி, யோக வழியில் செல்பவர் யோகி, ஞான வழியில் செல்பவர் ஞானி என்று தனித்தனி மார்க்கங்களாகச் சொல்வது தவறு.

கருமி பலன் கருதி உழைக்கிறான், ஞானிகள் சோம்பிக் கிடக்கிறார்கள், யோகிகள் சித்துக்களில் மயங்கி தானும் ஏமாந்து, மக்களையும் ஏமாற்றுகிறார்கள்,

எனவே பக்தி வழியே கலியுகத்தில் சிறந்தது என்பது சில பக்திமான்களின் வாதம்.

ஆனால் நிலைமையோ வேறு பக்தியின் பேரால் இங்கு கோடிகோடியாக பணம் புரளுவது கண்கூடு.

எனவே கலியுகத்தில் பக்தி என்பது பெரிய வியாபாரமாகி விட்டது என்பதை மறுக்க முடியாது.

யோகிகளும், ஞானிகளும் பக்தி என்பது உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளும் ஒரு விஷயம். கடவுளை வெளியே தேடுவதை விடுத்து உள்ளே போய் தேடு என்பது அவர்கள் கூற்று.

இடையே கர்ம யோகியோ, இதெல்லாம் வீண் பிதற்றல்கள் பலனை எதிர் பாராமல் கர்மங்களை ஒழுங்காகச் செய்வதே மேன்மையடைய ஒரே வழி என்று முழங்குவார்கள்.

இதையெல்லாம் கேட்டவர்கள் விழி பிதுங்குவார்கள்.

பக்தியிலும், பேதமற்ற தொண்டிலும் முறையாக ஒழுகியவர்கள் மனம் தானாகவே யோக நிலையை அடைகிறது என்பதை இவர்கள் ஏன் உணர மறுக்கிறார்கள் என்பது புரியவே இல்லை.

அதற்குப் பிறகு ஞானம் நிறைவு நிலை என்பதையும் மறந்து போகிறார்கள்.

உண்மையான பக்தன் தன்னை மறந்து உலகெங்கும் இறைவனைக் காண்கிறான்.

பார்க்கும் உயிரினங்கள் எல்லாம் இறைவனே என்ற மனநிலையில் அனைவரையும் சமமாக பாவித்து தொண்டு செய்கிறான்.

தன் மேன்மையை மட்டும் கருதாது பிறரும் மேன்மையடைய வேண்டும் என்ற நிலையில் சரியை வந்து விடுகிறது.

அவனே கர்மி. இறைவனையும், தொண்டையும் தவிர எதையும் அவன் சிந்திக்காத காரணத்தால் மனம் ஒருநிலைப்பட்டு யோக நிலையை அடைகிறது.

அந்த நிலை வலுக்கும் போது ஞானம் பிறக்கிறது. சித்தர்கள் அறிவைக் கொண்டு முதல் இரண்டு நிலையை விடுத்து நேரடியாக யோகநிலைக்குப் போய் ஞானத்தை அடைந்தார்கள்.

பக்திக்கும் ஞானத்திற்கும் உள்ள தொடர்பை நம் முன்னோர்கள் மூன்று விதமாக அபிப்பிராய பேதம் கொண்டார்கள்.

அதாவது பக்தியின் மூலம் மனம் சுத்தியடைவதால் ஞானத்திற்கு தகுதி உடையதாகிறது என்பது ஒரு அபிப்பிராயம்.

இவர்களுக்கு பக்தியை விட ஞானம் பெரியது. இவர்களைப் பொருத்த வரை சாதகனை பக்குவப்படுத்தவே பக்தி பயன்படுகிறது.

மற்றொரு பிரிவினரோ ஞானத்தின் விளைவே பக்தி என்கிறார்கள்.

கடவுளை அறிந்து கொள்ளும் அளவு ஞானம் இருந்தால் மட்டுமே அவர் மேல் அன்பு பிறக்கும்.

அயலான் ஒருவனை நாம் நேசிப்பதில்லை. உறவினர் என்று தெரிந்து விட்டால் அவர் மீது அன்பு வளர்கிறது. இதன்படி ஞானம் பெருகுமளவு பக்தி வளர்கிறது.

கடைசியில் எல்லாம் பிரேமை பக்தியாகி பிரம்மத்தில் லயித்து விடுகிறது என்பது இவர்கள் கொள்கை.

மூன்றாவது பிரிவினரோ, உயர்ந்த நிலையில் பக்தியும் ஞானமும் இணைந்து விடுகின்றன என்பார்கள்.

அன்பானது அறிவை வளர்க்கிறது. அறிவு ஓங்குமிடத்து அன்பும் வளர்கிறது. இந்த அன்பின் விளைவாக சாதகன் தன்னையே இறைவினடம் கொடுத்து விடுகிறான்.

தீயில் இட்ட விறகைப் போல, பக்தன் தன்னை தெய்வத்துக்கு உரியவனாக்கி தானே தெய்வ சொரூபம் அடைகிறான்.

அன்பும், அறிவும் அளப்பரிய அளவில் கடவுளிடம் மிளிர்கின்றன.

அவர் பரம பிரேமை சொரூபம். அவர் சர்வக்ஞன். எல்லையில் அடங்காத அன்பும் அறிவும் அவரிடத்தில் உண்டு.

எனவே ஒன்றை உயர்த்தியும் ஒன்றை தாழ்த்தியும் சொல்வது பொருந்தாது.

கடவுளை அறிய மனிதன் அவரை நேசிக்கிறான். அவரை நேசிப்பவன் கடவுளை அறிகிறான்.

உண்மையான மெய்ஞானியிடம் உண்மையான அன்பையும், உண்மையான அறிவையும் காணலாம்.

தன்னை கடவுளிடம் கொடுத்து விடுவதால் சாதகன் கடவுள் மயமாகி விடுகிறான். கடவுள் மயமாகி விட்டவனிடம் அறிவு போய்விட்டது என்று எப்படிச் சொல்ல முடியும்?

கடவுளிடம் தன்னைக் கொடுத்தவன் தானே அறிவு சொரூபியாகத் திகழ்கிறான்.

எனவே கூர்ந்து கவனித்தால் பக்தியும் ஞானமும் வேறு வேறல்ல. அன்பும் அறிவும் வேறு வேறல்ல. இரண்டும் ஒன்றே.

எனவே அன்பைப் பெருக்கி அறிவை வளர்த்து, பேரறிவை உணர்ந்து மெய்யறிவை அடைவோமாக.

# 16. புறச்சமய காழ்ப்பும் சமய பொதுமையும்

மாணிக்கவாசகரையும் வேதாத்திரி மகரிஷியையும் ஒப்பாய்வு செய்யும் போது, காலச் சூழலால் நிகழந்துள்ள தேவையான கருத்து மாற்றமும் இங்கு பதிவு செய்வது அவசியமாகிறது – இன்றியமையாததாகிறது.

திருவாசகத்தில் காணப்படும் புறச்சமயக் காழ்ப்பு.

- அத்தேவர் அவர் தேவன் என்று இங்ஙன் பொய்த் தேவு பேசிப் புலம்புகின்ற புதலத்தே....நான் பற்றி நின்ற மெய்தேவர்க்கே (219)
- உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம் சவலைக் கடலுள் (251)
- புத்தன் முதலாய புல்லறிவில் பல்சமயம் (318)

என்பன போன்று திருவாசகத்துள் காணப்படும் புறச்சமயக் காழ்ப்பு, வேதாத்திரியத்துள் சமயப் பொதுமையாக, பொறையாக மாற்றங்க கண்டுள்ளது அனைவரும் அறிய வேண்டியதாகும்.

## எல்லா மதங்களும் ஒன்று படும்.

"ஒன்று உயிர் என்றறியும் உள் நாட்டத்தை
ஒவ்வொருவரும் பழக வசதி செய்வோம்.
அன்று அன்று அறிஞர் பலர் சத்சங்கத்தில்
ஆன்ம தத்துவம் விளக்கும் கடமை செய்வார்
தொன்று தொட்டுப் பல பெரியோர் தோற்றுவித்த
சுத்த சன்மார்க்க நெறிமுறை விளக்கும்.
இன்றுவரை விரித்துள்ள மதங்கள் எல்லாம்
இந் நிலையில் ஒன்றுபடும் பேதமற்று." (வேதாத்திரி மகரிஷி)

உயிரென்றும், ஆன்மாவென்றும், கடவுள் என்றும், அறிவு என்றும் சொல்லப்படும் அரூப சக்திகளை உள்நாட்டத்தால் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள, கிராமங்கள் தோறும் நிர்விகற்ப சாதனை மன்றங்கள் என்ற நிலையங்களை ஏற்படுத்தி, அந் நிலையை வேண்டுவோர் அனைவரும் அறிந்து கொள்ளப் பயிற்சி அளிப்போம்.

இந்தச் சேவையில் தன்னிலையறிந்த பல அறிஞர்கள் ஈடுபடுவார்கள்; வேண்டிய விளக்கமும் அவ்வப்போது தருவார்கள்.

மனிதர்கள் துன்பங்களுக்குக் காரணமாக ஏழ்மை, வியாதி, பஞ்ச மாபாதகங்கள் இவைகளை ஒழித்து, சுகமாக ஒற்றுமையாகச் சகோதரர்கள் போல் ஒன்றுபட்டு,

ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ வேண்டுமென்ற பெரு நோக்கத்தால், எவ்வளவோ காலமாக ஆங்காங்கே தோற்றுவிக்கப்பட்டு, பின்பற்றப்பட்டு – தொடர்ந்துவரப்பட்ட எல்லா மதங்களும் அந்த நிலையில் பேதமற்று ஒன்று படும். – வேதாத்திரி

ஆன்மீகத்திற்கும் முழுமையான உனக்குள் விழும் தேடலுக்கும் சம்பந்தம் இல்லை.

அப்படி இருக்கும் பட்சத்தில் அவரவர் மார்க்கங்கள் அவரவர் தேடலுக்கு வழிவகுத்துக் கொடுத்துவிடும்.

ஆனால் இத்தனை மதங்கள் சமயங்கள் கடவுள்கள் இருந்தும் உன்னால் ஏதும் செய்ய முடியவில்லை என்பதுதான் உண்மை.

இன்னொரு முக்கியமான நிகழ்வு இவைகளால் ஒருபோதும் உனக்கு ஒருபயனும் விளைந்ததில்லை.

இவைகளை அறியாத பாமரனும் வன, மலை வாசிகளும் கூட எளிதல் தன்னை உணர்ந்து கொள்ள முடியும்

ஆனால், இவைகள் புடைச் சூழ இருக்கும் உன்னால் உணர்வது மிகக் கடிணமான செயலாகவே இருக்கும்.

இந்தியா மிகப்பெரிய சந்தைநாடு என்று சொல்வதற்கு பின்னால் மதங்கள் கடவுள்கள் இருப்பதை நாம் உணர்வதில்லை.

கடவுளின் பெயரால் மதங்களில் பெயரால் மாபெரும் வியாபாரச் சந்தைதான் நடக்கிறது இங்கே.

இந்த தேசத்தில் மட்டுமல்ல எல்லா தேசத்திலும் தான்.
இவைகளுக்குள் நீ இருக்கும் மாபெரும் முட்டாள் தனங்களை சம்பாத்து வைத்திருப்பாய்.

இதில் வியப்பான செய்தி என்னவென்றால், இந்த முட்டாள் தனங்களை யார் அதிகமாக சேகரித்து வைத்து வியாபாரமாக் கிறார்களோ அவர்கள் உன்னத மிக்கவர்களாவும், கடவுளின் பிரதிபிம்மாக அறிவித்துக் கொள்கிறார்கள்."

## தமிழகம் கண்ட சமயப் பொறை

சமயத்தின் அறநெறி - உலக வாழ்க்கையோடு மத வாழ்க்கையும் அணைத்து மேற் செல்ல உய்யகதி பெறவழி காட்டுகிறது.

சமூகத்தில் மனிதன் சில கொள்கைகளை ஏற்பதினாலும் அவற்றில் நம்பிக்கை வைப்பதினாலும் ஒரு மேலான நிலைக்கு ஆளாகிறான்.

அதற்குக் காரணமாக அமைவது சமயமே. சமயத்தினை சார்ந்து வாழ்பவன் ஆதலால் சமயத்தினைச் சார்ந்து ஒழுக்கமானவன் ஆகின்றான்.

இன்ப துன்பங்களை ஏற்பதால் அவனது மனம் மாறுகிறது. ஒவ்வொருவனும் கொள்கைவாதியாக மாறுவதால் ஒழுங்கான மனிதனைச் சமயம் உருவாக்கிக் காட்டுகின்றது.

நமது சமயம் விஞ்ஞானத்தால் உணரமுடியாத மெய்ப் பொருளாகத் தனது மெய் ஞானத்தால் இனிது இயம்புகிறது.
தெய்வீகமான கருத்துக்களைத் தன்னுள் அடக்கி மறைத்து வைத்திருப் பதால் அது மறை எனப் பெயர் பெற்றது.

நமது சித்தாந்தம் அறிவியல் நோக்கில் மெய்ப் பொருளை நிலைநிறுத்தம் உண்மைகளின் முடிபு. அறிவால் உண்மைகளை பூவினுள் மணம் போல் கொண்டுள்ளது.

''அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்

அளப்பருந்தன்மை வளப் பெருங்காட்சி''

என்று மாணிக்க வாசகர் கூறுகிறார்.

முன்னோர்களின் அனுபவத்தில் தோன்றிய நெறிகள் பின்னோரின் வாழ்க்கைப் பாதைக்கு வழிகாட்டின..

சமயம் என்னும் சொல் பொருளுடையது. சமைத்துப் பக்குவப்படுத்தல் என்னும் பொருளில் சமயம் என்னும் சொல் தோன்றியது.

கொள்கை, கோட்பாடு, குறிக்கோள் என்னும் பொருளில் சமயம் அமைந்தது. மனித வாழ்க்கைப் பயணத்திற்கு வழியாக அமையக்கூடிய காரண அடிப்படையில் நெறி, வழி ஆகிய சொற்கள் அமைந்தன.

சமுதாயக் கூட்டுவாழ்க்கைக்கு மனிதன் பண்படவேண்டும். தனி மனித வாழ்க்கையாகிய விலங்கு வாழ்க்கையிலிருந்து மனிதன் பண்பட வேண்டும் என்று முன்னோர்கள் வகுத்துக் காட்டிய நெறிகள் துணையாக அமைந்தன.

உணவு பொருளை நேரடியாக உண்ணாமல் சமைத்த பிறகே அவற்றை அவித்து,வேகவைத்து உண்ணுகிறோம்.

அது போல் பக்குவமில்லாத பண்பில்லாத விலங்காக வாழும் மனிதனைச் சமைத்துப் பக்குவப்படுத்த தோன்றியவை சமயம்.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்''

என்பது திருமுலர் வாக்கு.

மனிதன் தன் வாழ்வு வளம் பெறவும், மாக்கள் தன்மையிலிருந்து விடுதலை பெற்று ,மக்கள் தன்மை பெறவும் செய்யப்பட்டது. அதனை வேறு வகையில் சொன்னால், மனிதனை பண்பாடு உடைவனாக ஆக்குவது சமயம்.

அனைத்திற்கும் ஆணி வேராய் அமைந்த ஒன்றை அறிகிறான். அவ்வறிவுக்கு அப்பாற்பட்ட ஒருபொருள் உண்டு என்பதையும் அறிகிறான்.

ஐம்பூதங்களை வணங்கியவர்களை அவைகளுக்கு அப்பாலும் இறைவன் உண்டு என்று நெறிப்படுத்தியதே சமயம்.

அவை அனைத்தும் ஒரு வரன் முறைக்கு உட்பட்டு இயங்குவதையும் காண்கிறான். சமயம் என்பது வெறும் குறிகளும், அடையாளமும் அன்று. சமயம் என்பது அவற்றை கடந்து நிற்பது.

குறிகள், அடையாளங்கள் என்று எதனையும் போற்றாமல் ஒருவன் சிறந்த சமயவாதியாக வாழ முடியும்.

மனித மனத்தின் மாசை அகற்றி, பண்புடையவனாய், ஒழுக்கம் உடையவனாய், பிறர்க்குப் பயன்படுபவனாய் வாழ முற்படுவதே சமய வாழ்க்கையாகும்.

அவற்றிக்கும் அப்பால் அனைத்தையும் கடந்து நிற்கின்ற ஒன்றை கடவுள் என்ற ஒன்றை மனதில் கொண்டு வாழ்பவனே சமயவாதியாவான்.

எனவே, கடவுள் மனித வாழ்வு என்ற இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு, வாழ்விலிருந்து கடவுளை அடையும் நெறி மார்க்கங்களை தெளிவுப்படுத்துவதே சமயம்.

மனிதரை நெறிப் படுத்துவதற்கும் முறைப்படுத்துவதற்கும் தோன்றிய சமயநெறி. அவற்றின் நடைமுறையால் மாறுபட்டு முரண்பட்டுபோயின.

உண்மையில் சமயம் என்பது தூயவாழ்க்கை முறை. மனிதனை நெறிப் படுத்திப் பக்குவப் படுத்தும் வாழ்வியல் அனுபவமுறை.

மனிதனுடைய குறை நீக்கத்திற்கும்,நிறை நல பேற்றிக்கும் சமய வாழ்க்கையே துணை செய்யும். புலன்களை பக்குவப்படுத்தும்;

தூய்மை யடையச் செய்யவும்; இன்ப அன்பு கனியும், அருள் பெருகும். ஆகவே, சமயங்கள் அன்பை மையமாக் கொண்டது. “ஆருயிர்க் கெல்லாம் அன்பு செயல் வேண்டும் என்னும் வள்ளலார் காட்டிய வாழ்வு நெறி.'

“அன்பு சிவம் ரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தார்” (திருமந்திரம்)

என்னும் திருமந்திரப் பாடல் இவ்வுண்மையை உணர்த்தும். சமயங்கள் பல.

''பொங்குபல சமயமெனும் நதிகள் எலாம்புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும்கங்குகரை காணாத கடலே.''—

என்பது வள்ளாலார் வாக்கு.

ஆறுகள் எல்லாம் எங்குத் தோன்றினாலும். எத்திசை நோக்கி ஓடினாலும், முடிவில் கடலினையே சென்றடைவது போல உலகத்தில் தோன்றிய சமயங்கள் எல்லாம் முடிவில் பரம்பொருளினிடத்தே சென்றடைகின்றன என்பது அவ்வருளாளர் தம் கருத்து.

சைவம், வைணவம், பௌத்தம், கிறித்தவம், சமணம், இஸ்லாம் என்னும் பற்பல சமயங்கள் தமிழிலக்கிய உலகில் காணப்படுகின்றன. அவை காட்டும் நெறிவழிச் சென்றால், முடிவில்

''பரம்பொருள் ஒன்றே ''

என்ற கருத்திலேயே நிறைவுறுகின்றன.

மக்களின் மனநிலைக்கு ஏற்றவாறு இச்சமயங்கள் எல்லாம் தத்தம் கருத்துகளைத் தெரிவிக்கின்றன.

இலக்கியங்களும் சமயங்களும் சமுதாயத்தில் இருந்து முகிழ்க்கின்றன; சமுதாய வாழ்வியலிருந்து வெளிவருகின்றன.

இதனால் அந்தந்தக் காலத்து மக்களின் ஒழுக்க முறைகளை, பழக்க வழக்கங்களை, பண்பாடுகளைத் தெற்றென விளக்குவன இலக்கியங் களுள் சமயங்களுமே என்பதை அறியலாம்.

பெரும்பாலான இலக்கியங்கள் காட்டும் சமயப் பொறையினைக் கண்டு தெளிந்து, வாழ்வியலை மேற்கொள்ள வேண்டியது இக்கால இளையர்களுக்கு இன்றியமையாத தேவையும் சேவையுமாகும்.

தொல்காப்பியர் காலத்துச் சமயப் பொறை. வேறுபாடுகளைக் கடந்து மனித குலப் பொதுமையை நமது சமயம் வலியுறுத்தியது.

''யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தர வாரா ''

என்னும் கணியன் பூங்குன்றனார் பாடல் உண்மை சமய நெறியை உணர்த்துவது.

அடுத்து திருக்குறளிலும் தனிஒரு சமயத்தின் சாயல் இன்றிக் கடவுள் கொள்கையும்,சமயமும் பேசப்படுகிறது.

குறிப்பிட்ட ஒரு சமயத்தின் சாயல் பெறாமல் கடவுட் கொள்கைபற்றி பேசும் ஆதி நூல் தொல்காப்பியம்.

அதில் சமயம் இடம் பெறுகிறது. மக்கள் வாழ்வினை 'அகம்' என்றும் 'புறம்' என்றும் வகுத்துப் பல்வேறு செய்திகளைத் தொகுத்து சொல்வதால் வாழ்வியல் கூறும் இலக்கியமாகவும் இருக்கிறது.

தொல்காப்பியர் காலத்தும், அவர்க்கு முந்தைய காலத்தும் இறைவனை வழிபடும் முறை இருந்துள்ளது.

அக்காலத்து மக்கள், ஐம்பூதங்களையும், முருகன், திருமால், கொற்றவை முதலான வழிபாடு செய்தனர் என்பதையும்..,

''மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்'' (தொல்.அகத்.5)

இப்பாடல் மூலம் அக்காலத்தில் பல கடவுளரை வணங்கும் நிலை இருந்தது என்பதையும், அவர்களுக்குள் 'சமயக்காழ்ப்புணர்ச்சி ' இல்லை என்பதையும் அறியலாம்.

சமயக் கருத்து வேறுபாடு நிலவிய காலத்தில் மக்களை, அறவழிக்குட்படுத்த எழுந்தவையே நீதி இலக்கியம்.

அவ்வகையில் ' திருக்குறள் ' முதன்மையானது. ''ஆதி பகவன் முதற்றே உலகு'' என்னும் திருக்குறள்' இறைவன் ஒருவனே; அவன்தான் பரம்பொருள்; முழுமுதற் பொருள்'' என்று குறிப்பிடுகிறது.

'கடவுள் வாழ்த்து' ப்பகுதியில் சமயப் பொதுமை நிலையில் இறைவனின் திருவடிச் சிறப்பையே சுட்டுக்காட்டியுள்ளார். திருவடி வழிபாடு, திணை, பால் கடந்த பொதுமை வழிபாடாகும்.

- ஏழாம் நூற்றாண்டில் அப்பர் பாடிய 'திருவடித்தாண்டமும்''
- பதினைந்தாம் நூற்றாண்டில், அருணகிரி பாடிய 'சீர்பாத வகுப்பும்'
- பத்தொன்பதாம் நூற்றாண்டில் வள்ளலார் பாடிய 'திருவடிப் புகழ்ச்சியும்'

அமைந்து சமயப் பொறையை வலியுறுத்துகின்றன.

இறைவனிடத்து மனிதன் வேண்டுவது என்ன என்பதை பரிபாடல் ஒன்று சிறந்த முறையில் கூறுகிறது.

''பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின் பால் அருளும் அன்பும் அறனும் ஒலி தாரோயே'' – என்கிறது.

பயன் கருதாத வழிபாட்டை வேண்டி, 'அன்பும், அறனும் அருளும்' மூன்றும் வேண்டும் என வேண்டி விழைவது சமயம் .

தமிழ் மொழியைப் பொறுத்த மட்டில் அளவை களின் உதவி கொண்டு சமயத்தை நிறுவுவதைக் காட்டிலும் அகத்தே நிகழும் உணர்வுகொண்டே சமயத்தைப் பரப்பும் நூல்களே மிகுதியாகும்.

அதனால்தான் போலும்,சமய இலக்கியம் என்ற பெயரில் பக்தி இலக்கியங்களே தமிழில் மிகுதியாக தோன்றின.

உலக மொழிகளில் பக்தி இலக்கியம் என்று எடுத்துக்கொண்டால், முதல் இடம் தமிழுக்குத்தான்.

இரண்டாவது இடம் ஹீப்ரு மொழியும்,மூன்றாவது இடத்தை சமஸ்கிருதமும் இடம் பெறுகிறது. வடமொழியிலிருந்து தமிழாக்கம் செய்த சில நூல்களும் உண்டு.

அன்பின் வழியே, ஆண்டவனை அடையமுடியும் என்கிறது நமது சமயம். அந்த அன்பென்னும் பிடியுள் அகப்படும் மலையே! அடிப்படையை மனத்தில் கொண்டு பார்த்தால், தோத்திரங்கள் அதிகம் தோன்றியதற்கு உரிய காரணத்தை ஒருவாறு அறிய முடியும்.

என்றாலும் தமிழில்தோன்றிய பேரிலக்கியங்கள் அனைத்தும் சமயத் தொடர்புடையது.

பிறமொழிகளில் பல்வேறு துறையில் இலக்கியம் உண்டு. அவற்றுள் சில சமயம் பற்றியும் இருக்கும்.

ஆனால், தமிழ் மொழியில் இலக்கியம் என்ற பெயரைப் பெறக்கூடியவை அனைத்தும் சமயத் தொடர்பு உடையனவாய் இருத்தல் அரிதற்குரியது.

சமயத் தொடர்பற்ற நூல்கள் தமிழிலும் தோன்றி இருக்கலாம்.

ஆனால், அவற்றிக்குக்காலத்தை வென்று நிலைபெறும் வன்மை இல்லை போலும்.

பேரிலக்கியங்கள் ஒரு புறம் இருக்கச் சிற்றிலக்கியங்களாகிய பிள்ளைத்தமிழ், குறவஞ்சி, பள்ளு, உலா ஆகியவைகள் சமயத் தொடர்பு உள்ளதாகவே அமைந்துள்ளது.

ஆதலால்தான் 'சமயமின்றி தமிழில்லை' என்று கூறுவது பொருள் பொதிந்த மொழியாக அமையக் காண்கிறோம்.

காப்பிய இலக்கியங்கள்.காப்பிய இலக்கியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயணம், சீவக சிந்தாமணி போன்ற குறிப்பிடத்தக்க இலக்கியங்கள் அந்தந்தக் காலத்துச் சமய பொறையினை எடுத்துக் காட்டுகிறது எனக்கூறலாம்.

சிலப்பதிகாரம் ஒரு முத்தமிழையும் எடுத்துக்கூறும் தலைமை காப்பியமாகும்.

அதன்சிரியர் ஒரு இளங்கோவடிகள், ஒரு சமணர். ஆனால், சிலப்பதிகாரத்தில் சைவம், வைணவம், பௌத்தம் முதலிய சமயங்களையும் எடுத்து கூறுவதன் மூலம் சமயச் சார்பற்ற காலமாகச் சிலப்பதிகாரம் இருந்துள்ளமையை அறியலாம்.

சைவ சமயக் கடவுள் சிவனைப் பற்றிப் பல இடங்களில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

மதுரை காண்டத்துள் வேட்டுவ வரியில், ''சிவனுக்கு நெற்றிக்கண் உண்டு என்பதையும்,தேவர்களுக்காக நஞ்சுண்டு நீலகண்டன் ஆனான் என்பதையும், வாசுகியை நாணாகவும், இமயத்தை

வில்லாகவும் கொண்டு திரிபுரத்தை எரித்தான் என்றும், கொன்றை மாலையைத்த்ரித்தவன்'' என்றும் கூறப்படுகிறது.

மேலும் சிவனை..,''பிறவா யாக்கை பெரியோன்...'-என்று போற்றுகிறது.

வைணவ சமயக் கடவுள் திருமாலைப் பற்றிச் சிலம்பில், ஆய்ச்சியர் குரவையிலும், காடுகாண் காதையிலும் காணலாம்.

ஆய்ச்சியர் குரவையுள்,'' கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்...''என்ற குறிப்பும், திருமாலின் பெரிய கோயில் எனப்படும் ' திருவரங்கம் ' பற்றிய குறிப்பும்,திருமால் திசேடன் மீது பள்ளி கொண்டுள்ளான் என்ற குறிப்பும் 'காடுகாண் காதை 'யில்காணப்படுகிறது.

மேலும் அவனுடைய திருவுருவ நலன்களும், அவன் யுதங்கள் ஏந்தி நிற்கும் திறமும்,நின்ற கோலமும்,கிடந்த கோலமும் கூறப்பட்டுள்ளன.

சிலம்பின் கதை மாந்தர் சிலர் சமணக் கதை மாந்தர் களாகவே வந்துள்ளனர்.

கவுந்த அடிகள், மாங்காட்டு மறையோன் முதலானோரைக் குறிப் பிடலாம். சமயத்தால் சமுதாயம் வேறுபாடு கொள்ளாமல் வாழமுடியும் என்று காட்டியுள்ளார்.

வைணவக் காப்பியமான கம்ப இராமாயணத்தில் பிற சமயக் கடவுள் பற்றியும் கூறுகின்றது.

இக்காப்பியத்துள் இராவணன்,வாலி முதலானோரைச் சைவ சமயக் கடவுளான சிவனின் பக்தர்களாகவே படைத்துள்ளார்.

வாலியைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது,'' பஞ்சின் மெல் அடியாள் பங்கன் பாதுகம் அலாது யாதும்அஞ்சலித்து அறியாச் செங்கை ''

உடையவன் என்றும், ' அட்டமூர்த்தி தாள் பணியும் அன்பன் ' என்றும் குறிப்பிடுகிறார்.

இராவணனைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது ' சிவபெருமானால் முக்கோடி வாழ்நாள் வழங்கப் பெற்றவன் ' என்றும், ' துள்ளுநீர் வெள்ளம் சென்னி ஏற்றவன் 'என்றும் குறிப்பிடுகிறார்.

மேலும் சிந்தாமணி,மணிமேகலைமுதலிய காப்பியங்களும், சமயக் காழ்ப்பற்ற நிலையினை விளக்க பல தெய்வங்களைக் குறிப்பிடுகின்றன.

காப்பிய உலகில், குறிப்பிட்ட ஒரு சமயச் சார்பற்ற நிலையினை உணர்த்தி, புதிய சமுதாயமாக, சமய காழ்ப்பற்ற சமுதாயத்தை ஏற்படுத்தவே நமது முன்னோர்கள் முயன்றுள்ளார்கள்.

அருளாளர்களின் சமயப் பொறைமனித இனத்தைத் தீமைகளிலிருந்து விலக்கி நல்வழிப்படுத்துவதற்கு ஒவ்வொரு கால கட்டத்திலும் அருளாளர்கள், பெரியோர்கள் பலர் தோன்றியுள்ளனர்.

அவர்கள் எல்லாம்சமுதாயத்திற்குச் சமயம் தேவை என்றும் ' பரம்பொருள் ஒன்று, அதனை அடையும் வழிகளே இச்சமயங்கள் ' என்றும் எடுத்துரைத்துள்ளனர்.

''ஒன்றே குலமும் , ஒருவனே தேவனும்ஒன்றது பேரூர், வழியாறு அதற்குள...''என்று திருமூலரும்....,

''யாதொரு தெய்வம் கொண்டீர் ;ஆங்கே அத் தெய்வமாகி மாதொரு பாகனார்தாம் வருவர் .''--என்று அருணந்திச் சிவாச்சாரியாரும்..,''

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்ஆனந்த பூர்த்தி யாகி அருளோடு நிறைந்தது...''- என்று தாயுமானவரும்...,''

சாதியிலே மதங்களிலே சமய நெறி களிலேசாத்திர சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலேஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர் !அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழ கலவேநீதியிலே

சன்மார்க்க நிலைதனிலே நிறுத்தநிருத்தமிடும் அருட்சோதி விளையாடல் புரியமேவுகின்ற தருணம் இது கூவுகின்றேன் உமையே ..''-- என்று வள்ளலாரும்..,''

அரியலால் தேவி யில்லை ஐயன் ஐயாற னார்க்கே...''-என்று அப்பர் பெருமானும்,'' அரியும், சிவனும் ஒண்ணு அறியாதவன் வாயில் மண்ணு..''என்ற பழமொழியாலும்,

அரியையும்,சிவனையும்,சங்கர நாயாரண மூர்த்தமாக வழிபடும் முறையாலும் காணலாம்.

தற்கால இலக்கியங்களில் என்றதும் பாரதி, பாரதிதாசன் நினைவு நமக்கு வருகிறது.

''எனக்கு முன்னே சித்தர்பலர் இருந்தாரப்பாயானும் வந்தேனொரு சித்தன் இந்த நாட்டில்..'எனப் படுவதால் அவரும் தம் சான்றோர் நெறிவழியே சமயச் சார்பற்ற உலகினை உருவாக்க நினைத்தார் என்பதனை

,''ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடிஅலையும் அறிவிலிகாள்!'' என்பதன் வாயிலாக அறியாலம்.இவ்வாறு பாடலால் சமய வேறுபாடற்ற சமயப் பொறையுடைய சமுதாயத்தை உருவாக்கியவர்களாக திகழ்ந்துள்ளனர்.

இவைகளை தொல்காப்பியர் இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரைசமய வேறுபாடற்ற ஒரு சமூகத்தினை நாம் தமிழிலக்கியங்களில் வாயிலாக அறிய முடிகிறது.

# 17. திருப்பெருந்துறையும் ஆழியாறும்

திருப்பெருந்துரை திருவாசகத்தலம். தேவார வைப்புத் தலம். பாண்டிய நாட்டில். மிழலைக் கூற்றத்தில், வெள்ளாற்றங் கரையில்,

இன்றைய புதுக்கோட்டை மாவட்டத்தில், அறந்தாங்கிக்கு அண்மையில் உள்ளது.



குதிரை வாங்கச் சென்ற அமைச்சர் திருவாதவூரரை- இறைவன் குருந்த மரத்தடியில் குருவாக வந்து - ஆட்கொண்டருளிய தலம்.

அமைச்சர் வாதவூரர், அடியாயார் மாணிக்கவாசகராக மாறிய தலம்.

மாணிக்கவாசகர் கட்டிய கோயில். திருவாசகப் பதிகங்கள் ஐம்பத்தொன்றில் -இருபது பதிகங்கள் பாடப்பெற்ற இடம்.

ஊர் பெருந்துறை (திருப்பெருந்துறை). கோயில் ஆவுடையார் கோயில்.

கோயில் பெயரே இன்று ஊர்ப்பெயராக விளங்குகிறது.

திருப்பெருந்துறை என்பதைவிட ஆவுடையார்கோயில் என்பதே இன்று பெருவழக்காக உள்ளது.

திருப்பெருந்துறைக் கோயிலில் லிங்கம் இல்லை. ஆவுடையார் (பீடம்) மட்டுமே உண்டு.

அதனால் ஆவடையார்கோயில் எனப் பெயர் பெற்றது. இறைவனும் இறைவியும்-இங்கு உருவமின்றி அருவ வடிவிலேயே எழுந்தருளியுள்ளனர்.

ஆவடையார் கோயிலில் அமைப்பு ஏனைய கோயில்களின் அமைப்பினின்றும் பெரிதும் மாறுபட்டது.

வழிபாடு முறைகளுகம வேறுபட்டது. இக்கோயிலில் கொடிமரம் இல்லை. பலிபீடம் இல்லை. நந்தி இல்லை.

விநாயகர். முருகன், நடராசர் மட்டுமே உண்டு. எனைய பரிவார மூர்த்தங்கள் இல்லை. இக்கோயில் முழுவதும்- தத்துவ அமைப்பு உண்டு

## இக்கோயிலில் -ஆறு சபைகள் உண்டு.

1. ஆனந்த சபை - இது கர்ப்பக்கிருகம் (கருவறை)
2. சித்சபை - அர்த்த மண்டபம்
3. சத்சபை - நிவேதன மண்டபம், அமுது மண்டபம்
4. தேவசபை - யாவரும் நின்று தரிசனம் செய்யும் இடம்
5. நிருத்தசபை - இரண்டாம் திருச்சுற்று சந்நிதி மண்டபம்
6. கனகசபை - மூன்றாம் திருச்சுற்று சந்நிதி மண்டபம்.

சந்நிதியில் நின்று தரிசிக்கும் நம் நிழல் கருவறையில் உள்ள ஆவுடையாரின் மீது (பீடத்தின் மீது) விழும்.

கோயிலின் வெளிவாயிலில் நின்றாலே, வாயிலின் வழியாகச் சென்றாலே, நம் நிழல் கருவறையில் விழுவதைக் காணலாம்.

ஏனைய கோயில்களிலே எல்லாம் பச்சரிச்சோறே படைப்பு. இங்கு புழுங்கலரிசிச் சோறு படைப்பு. அதுவும் சோறு படைப்பன்று. சோற்று ஆவிதான் படைப்பு.

அர்த்த மண்டபத்திற்கு வெளியே உள்ள அமுது மண்டபம் எனும் நிவேதன மண்டபத்தில், சந்நிதிக்கு எதிரே உள்ள நீண்ட சதுரப் படைகல்லில் சோறு பரவலாகக் கொட்டப்பெறும்.

பானைகளிலிருந்தே கைபடாமல் சூடாகக் கொட்டப்பெறும், சோற்றிலிருந்து அதிக அளவில் ஆவி எழும். மண்டபம் முழுவதுமே புகைமயமமாகக் காணப்பெறும்.

அச்சோற்றாவியே ஆத்ம நாதருக்கு நைவேத்தியம். அரைக்கீரைச் சுண்டலும் பாகற்காய்ப் புளியங்கறியும் நைவேத்தியம்.

இத்தகைய நைவேத்தியங்கள் வேறு எக்கோயிலிலும் இல்லை. இவை இத்தலத்திறகே உ-ரிய தனிச்சிறப்பு.

## இங்கு எல்லாமே தத்துவமயம், ஞானமயம்.

1. கலாதீபங்கள் 5
2. மந்திரதீபங்கள் 11
3. புவன தீபங்கள் 204
4. வர்ணதீபங்கள் 51
5. பததீபங்கள் 81
6. தத்துவதீபங்கள் 36
7. நட்சத்திர தீபங்கள் 27
8. சூரிய சந்திர அக்கினி தீபங்கள் 3

என்று கோயிலெங்கும் -அங்கங்கே தீப மயமாக இருக்கும்.

சுவாமி ஆத்மநாதரை தரிசிக்க நேர்வாயில் வழியாகப் புகுவதில்லை. பக்கங்களில் உள்ள வாயில்களின் வழியாகவே செல்வதும் திரும்புவதும் மரபு.

அம்பிகை சிவயோ நாயகியைத் தரிசிப்பதும் கற்பலகணி வாயிலாகவே.

மேளம் முதலிய வாத்தியங்கள் வாசிப்பது வழக்கமில்லை. சின்னம், சங்கு, மணி ஓசைகளே இங்கு கேட்கப்படும்.

பூசை செய்பவர்கள் தில்லைவாழ் அந்தணர்களைப் போல -ஒரு தனிக் கூட்டத்தார்.

தில்லையில் தீட்சிதர்கள். திருப்பெருந்துறையில் நம்பியார்கள்.

தில்லையில் மூவாயிரவர். அவருள் ஒருவர் நடராசர். திருப்பெருந்துறையில் முந்நூற்றுவர். அவருள் ஒருவர் ஆன்மநாதர்.



சிற்பவேலைப்பாடுகள், ஓவியங்கள் மிகவும் சிறப்பு. இக்காலத்துக் கட்டிட வேலைகளில் கான்கிருட்டுக்கு உபயோகிக்கும் முறுக்குக்கம்பி, திரணைக் கம்பிகளோடு, நான்குபட்டைக் கம்பி, ஆறுபட்டைக் கம்பி முதலியவற்றை இங்குள்ள கல்வேலைப் பாடுகளில் காணலாம்.

இக்காலத்தில் பெண்கள் அணியும் புடவைகளின் கரைகளைவிட - அதிகக் கோலங்களை (பார்டர் டிசைன்களை) இங்குள்ள ஓவியங்களில் காணலாம்.

ஆவுடையார் கோயில் மண்டபத்தின் கொடுங்கை வேலைபாடுகள் மிகுந்தது. மிகவும் மெல்லியது.

பாறாங்கல்லைப் பலகைக் கல்லாகச் செதுக்கி -வேலை செய்திருக்கிறார்கள்.



மரவேலைப்பாட்டின் அளவுக்குக்- கல்வேலைபபாட்டைச் செய்திருக்கிறார்கள்.


மெல்லிய கொடுங்கையின்- கனஅளவைக் கூறக்கேட்டு வியந்த வெள்ளைக்கார அதிகாரிகள் அதன் உண்மையைக் கண்டறிவதற்காகத் துப்பாக்கியால் சுட்டுப் பார்த்தார்களாம்.

துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த இடமென்று கொடுங்கயைிலுள்ள இரு துளைகளை இன்றும் காட்டுகிறார்கள்.

துளையிட்ட அவ்விடங்கள் கொடுங்கயையின் மென்மையைக் காட்டுகின்றன. சிற்பிகளோட மாதிரிக்காகத் துளையிட்டிருக்கலாம்.

சிற்பிகள் வேலை ஒப்பந்தம் செய்து கொள்ளுங் காலங்களில், ஆவுடையார்கோயில் கொடுங்கை, திருவீழிமிழலை வெளவால் நந்தி மண்டபம், கடாரங்கொண்டான் இதில் இவைகளைத் தவிர மற்றப் பணிகளைப் போலச் செய்து கொடுப்போம் என்று ஒப்பந்தஞ் செய்து கொள்வார்களாம். இவ்வேலைப்பாடுகள் அவ்வளவு அரியவை.

"ஆவுடையார் கோவிலில் காணப்படும்- 200-க்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் அண்மையில் படியெடுக்கப்பட்டன. அவற்றில் 6 கல்வெட்டுகள் செய்யுள் வடிவில் அமைந்ததாகும்.



அதில் "உதிக்கும் சகாத்தமிங் கொன்றரை யாயிரம்' எனத் தொடங்கும்- ஒரு கல்வெட்டுச் செய்யுள், இந்தக் கோவில் மாணிக்கவாசகரால் கட்டப்பட்டது என்பதையும், இந்த ஆலயத்தில்தான்-அவர் திருவாசகத்தை இயற்றினார் என்பதையும் நிறுவுகிறது.

மேலும், இந்தக் கோவிலில் உள்ள கனகசபை மண்டபத்தில் திருவாசகச் செய்யுள்கள் பொறிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கிறது.

இந்த ஆலயத்தில் உள்ள -16-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட பஞ்சாட்சர மண்டபத்தில் இந்தக் கல்வெட்டு காணப்படுகிறது.

இந்தக் கல்வெட்டுச் செய்யுள் மூலம், மாணிக்கவாசகர் காலத்தில் இந்தக் கோவில் கருவறையும், கனகசபை மண்டபமும் கட்டப்பட்டதும், கோவில் மண்டபத்தில் திருவாசகப் பாடல்கள் கல்வெட்டுகளாய் -பொறிக்கப்பட்ட செய்தியும்- உறுதி செய்யப்படுகின்றன.




கட்டிடம், சிற்பம், ஓவியம் முதலிய கலைகளுக்குத் திருப்பெருந்துறை- ஒரு சுரங்கம், ஒரு களஞ்சியம்.

தத்தவங்களுக்கும்- ஞானத்துக்கும் -களஞ்சியம் என்பது முன்கூறிய செய்திகளால் விளங்கும்.

சுருங்கக்கூறின் -இது சரியை கிரியையாளர்களுக்கு உரிய தலமன்று. யோகிகளுக்கும் ஞானிகளுக்கும் உரிய தலம்.

பிற்காலத்தில் ஆழியாறில் வேதாத்திரி மகரிஷி அமைத்த அறிவுத் திருக்கோயிலுக்கு இது ஒரு வகையில் முன்னோடி எனலாம்.




பொள்ளாச்சிக்கு அருகில், ஆணைமலை அடிவாரத்தில் இருக்கும் ஆழியாரில், அமைந்திருக்கும் அறிவுத் திருக்கோயிலுக்கு, ஒருமுறை சென்று வாருங்கள். வேறு கிரகத்திற்குச் சென்று வந்த உணர்வு ஏற்படும்.

சுவர்களற்ற எல்லைக் கோடுகளற்ற, பேதமற்ற ஆக்கப்பூர்வமான உணர்வலைகள எழுப்பும் சக்தியைக் காற்று மையத்தில், ஸ்தூலமாகக் கொண்ட கிரகத்தை, உங்களால் கற்பனை செய்ய முடியுமானால், ஒரு நடை ஆழியாறுக்குச் செல்லுங்கள்.



அதை நிஜம் என்று உணர்வீர்கள். கட்டணம் கட்டித் தொண்டாற்ற நூற்றுக் கணக்கானோர் வந்து சேவை பார்ப்பது, ஓர் அதிசியம் என்றால், போரில்லா உலக அமைதி என்பது, நமது வாழ்நாளுக்குள் சாத்தியமாகும் ஒன்று என்று அங்கிருப்பவர்கள் நம்புவது மாபெரும் அதிசியமாகத் தோன்றும்.



இதற்கு மூலகாரணம், ஆழியாறு அறிவுத் திருக்கோவிலில், மூலதாரமாக இருக்கும் வேதாத்திரி மகரிஷி சமாதி அமைந்திருக்கும், மணிமண்டபம் நடு நாயகமாக அமைந்து, அறிவுத் திருக்கோயிலும் அருளரங்கத்திலும், வேதாத்திரியப் பயிற்சியைக் கொடுத்து மக்களின் வாழ்வை மேம்படுத்தி வருகிறார்கள்.

ஓங்கார வடிவில் அமைந்துள்ள அறிவுத் திருக்கோயில், நான்கு பகுதிகளைக் கொண்டது. 1. அன்பகம் 2. அறிவகம் 3. அருளகம். 4. அருள் குருவகம்.

## அன்பகம்

திருக்கோயிலுக்கு வருகின்றவர்களை அமர்சத்தி, மனித வாழ்வின் நோக்கம் நோக்கத்தை ஈடேறச் செய்யவல்ல வழிகளான,

தற்சோதனை முறைகள், தியான முறைகள், கடவுள் பற்றிய கருத்து ஆகியன பற்றிய விளக்கம் தரப் பெறுகிறது. கூட்டுத் தியான ஐந்து வேளையும் நடைபெறுகிறது.

## அறிவகம்

குண்டலி தவப்பயிற்சிகள், நான்கு படிகளில் தரப் பெறுகிறன. அவற்றுள், முதல் மூன்று நிலைகளாகிய ஆக்கினை சாந்தி துரியம் ஆகியன இந்த அறையில் கொடுக்கப்படுகின்றன.

## அருளகம்

குண்டலினி தவப்பயிற்சியின் உச்சக்கட்ட பயிற்சியாகிய துரியாதீத தவப்பயிற்சி, இங்குக் கொடுக்கப்படுவதோடு, அப்பயிற்சியை பெற்றவர்களைக் கொண்டு, காலை மாலை கூட்டுத் தவமும் இவ்வறையில் நிகழ்த்தப் பெறுகின்றது.

துரியாதீத தவப்பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே, இவ்வறையில் தவம் செய்ய அனுமதிக்கப்டுகின்றனர்.



## அருட்குருவகம்

அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள் வாழ்ந்த இல்லம். இப்போது நினைவிடமாக அமைந்துள்ளது.

## மணிமண்டபம்

வேதாத்திரி மகரிஷியின் சமாதி இங்கு அமைக்கப்பட்டுள்ளது. பலநூறு அன்பர்கள் ஒரே நேரத்தில், தவம் செய்கிறார்கள். நாள்தோறும், ஐந்து வேளையும் இங்கு தவம் நடத்தப்படுகிறது.

## வள்ளலார் குடில்

சித்த மருத்து இல்லமாகத் திகழ்கிறது

## குடில்கள்

திருமூலர். காளங்கி நாதர் என்ற மூன்று சித்தர்களின் பெயர்களால் விளங்கும் மூன்று குடில்கள் உள்ளன. இன்னும் பல குடில்கள் உள்ளன.

## பேரங்கு

ஆடிட்டோரியம் என்றழைக்கப்டும் இப்பேரரங்கு கூட்ட அரங்காய் தங்கும் விடுதியாய், பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதைத் தவிர, அன்பர்கள் தங்குவதற்கு இரண்டு பெரிய அமைதி நிலையங்களும் உள்ளன.

இதைத்தவிர, பெரிய சமையல்கூடம், டைனிங் ஹால், உண்ணும் இடமும் அமைந்துள்ளன.

## நாட்பணிகள்

காலை 5.15 க்குச் சமித்துகளையும் பசுநெய் பச்சரிசி பசுஞ்சாணி வரகிட்ட ஆகியவற்றை இட்டு, அன்பத்தில் ஒமப் புகை எழுப்பப்படுகிறது.

இப்புகை நச்சுக் காற்றினையும், நச்சு எண்ண அலைகளையும் அழிக்கவல்லது என்பது மகரிசி அவர்களின் கருத்து என்பதைனை, உலக சமாதானம் (1957) என்ற நூல் கூறும். இதனை இன்றைய அறிவியல் ஆராய்ச்சி ஒத்துக் கொள்கின்றது.

பயிற்சி

ஆண்டு முழுவதும், இங்கு, மகரிசியின் அகத்தாய்வு பயிற்சிகள், காயகல்ப பயிற்சிகள், உடற்பயிற்சிகள், பிரம்மஞானப் பயிற்சி. பேராசிரியர்களுக்கான பயிற்சி மற்றும் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களுக்கானப் பயிற்ச், மௌன நோன்பு நடைபெற்று வருகின்றன.

*ஆழியாருக்கு ஒரு முறை வந்து பாருங்க! **

ஒரு முறை ஆழியாரு அறிவுத் திருக்கோயிலுக்கு -வந்து பாருங்க!
ஆசான் வேதாத்திரி மகரிஷியின்- மணிமண்டபத்தை வலம் வந்து பாருங்க
ஆசான் வேதாத்திரி மகரிஷியின் மணிமண்டபத்தை -வலம் வந்து பாருங்க
அங்க துரியாதீத தவமெல்லாம் நடக்குதுங்க!,
உங்க- கவலையெல்லாம் பஞ்சாய் பறந்து போக 'பஞ்சபூத நவக்கிரகத் தவமும் நடக்குதுங்க!,
தங்க நிற ஓம்கார மண்டபமும் நுழைவாயில் எதிரிலே - இருக்குதுங்க!

நாளும் மணிமண்டபத்தில் ஒன்பது மைய தவமும் நடக்குதுங்க!,
தங்க அமைதி -திருநிலையமும் இருக்குதுங்க! ,நீங்க
தங்க அமைதி திருநிலையமும் அருமையா இருக்குதுங்க!,
திங்க அறுசுவை உணவுக் கூடமும் இருக்குதுங்க!

ஆனந்தமான வாழ்வைப் பெற ஆழியாறு வாங்க வாங்க வாங்க!

## துணைநின்ற நூல்கள்.


1. ஞானக்களஞ்சியம் – வேதாத்திரி மகரிசி
2. திருவாசகம் – சுவாமி சித்பவானந்தர்
3. தருமச்சக்கரம் மாத இதழ்கள்
4. அன்பொளி மாத இதழ்கள்.
5. இறையுணர்வும் அறநெறியும் - வேதாத்திரி மகரிசி
6. வேதாத்திரியச் சிந்தனைகள், தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
7. வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள், உலகத் தமிழராய்ச்சி நிறுவனம்.
8. மாணிக்கவாசகரும் வள்ளலாரும், ஊரன்அடிகள்
9. தத்துவ சிகரங்கள், அழகர் ராமானுஜம்.

10. இராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்.
11. விவேகானந்தர் சொன்ன கதைகள்.
12. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000, பானுகுமார்
13. இணயதள தகவல்கள்

# ஆசிரியரின் பிற நூல்கள்

PDF [www.banukumar.in](http://www.banukumar.in)

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. "வாழ்க வளமுடன்" என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்

3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.
7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே

## திருவாசகமும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.

3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்

## பாரதியாரும் வேதாத்திரியமும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்

3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்
26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## சிறுகதைகள்

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

1. நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

vethathiriam banukumar (Youtube channel)

2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 106 தலைப்புகளில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.

29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்கோபர்
60.தினசரி தியானம் நவம்பர்
61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2

64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்
96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்

99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?